# சுதேசமித்திரன்



24th Oct 48

அணா 4




தாய்மார்கள் அறிவர்

:: உட்வார்ட்ஸ் க்ரைப் வாட்டரின் ::
மதிப்பு தாய்மார்களுக்குத் தெரியும்.
அது குழந்தைகளை நன்கு பாதுகாக்கும்

**WOODWARD'S**
**GRIPE WATER**
*keeps baby well*

I-WW108-111 W. WOODWARD LTD LONDON. ENGLAND

# ஐடியால்




புத்துயிர் அளிக்கக்
கூடிய நேர்த்தியான
மணம் உள்ள உண்
ணத கிருமி நிவாரணி.

ஒரு
I.T.L.
தயாரிப்பு

ஐடியால் சுத்தமான தங்க நிறமுள்ள மஞ்சள் திராவகம். அது புத்துயிர் அளிக்கக் கூடிய நேர்த்தியான மணமுள்ளது. அது விஷமில்லாதது. அதனால் கறைகள் ஏற்படாது. அது பண்டங்களை கரைத்து விடாது. அது வைத்தியத்திற்கும், வீட்டு உபயோகத்துக்கும், சொந்த சுகாதாரத்துக்கும் இன்றியமையாதது.

தி மைசூர் இண்டஸ்டிரியல் & டெஸ்டிங் லாபரேடரி லிமிடெட், மல்லேஸ்வரம், பெங்களூர், இவர்களால் தயார்செய்யப்பட்டது.

**கைவசம் ஒரு குப்பி வைத்திருக்கவும்**

விற்பனை ஏஜண்டுகள்:

## பெஸ்ட் அண்ட் கம்பெனி லிமிடெட்,

தபால் பெட்டி 63. சென்னை.

DJK-76-TM

# இந்தியாவின் புகழ்




# லோத்ரா

கர்பாசய ரோக நிவாரணி

கேஸரி குடீரம் லிட்., மதராஸ்

EASTERNS.394

மலபார், கொச்சி, திருவாங்கூர்
தென் கன்னடத்துக்கு

ஏஜண்டுகள்:

**கொச்சி மெடிகல் ஸ்டோர்ஸ்,**
மட்டஞ்சேரி (கொச்சி)

ஜோதிஷ வித்வான்

## V. S. சேஷாத்ரியாச்சாரியார்

**45, டரோடா தெரு, தியாகராயநகர், சென்னை 17.**

ஒரு ஜாதகம் விவரமாகப் பார்க்க......................ரூ. 5.
எதிர்காலத்தைப்பற்றிய மூன்று கேள்விகளுக்கு...ரூ. 2.
மேல் கேள்வி ஒன்றுக்கு............................அணா 12.
ஜாதகம் அல்லது கடிதம் எழுதும் நேரம் தேவை.
ஒரு ஜாதகம் கணிக்க.......................................ரூ. 3.
பிறந்த ஊர், தேதி, மணி தேவை. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

# சிறந்த கூந்தல் உணவு

உங்கள் சரீரத்திற்கு நல்ல உணவு அவசியமானதுபோல் கூந்தலுக்கும் நல்ல உணவு அவசியமாகும். உங்கள் கூந்தலின் வசிகரம் நீங்கள் உபயோகிக்கும் கூந்தல் தைலத்தைப் பொறுத்ததே.



## காமினியா ஆயில் (ரெஜிஸ்டர்ட்)

மூளைக்குக் குளிர்ச்சியூட்டி கூந்தல் வளர அவசியமான பலவித சத்துக்கள் சேர்ந்தது. மயிர்க்கால்களுக்கு அவசியமான போஷாக்கு அளிக்கையில் ஆரோக்யமாக வளரவும் உதவுகின்றது. பொடுவன்களைப் போக்கி, கூந்தல் உதிர்வதை நிறுத்தும்.

ஆயிரக்கணக்கானவர்கள் காமினியா ஆயில் உபயோகித்துப் புகழ்ந்துள்ளனர்.

**இன்றே பரீக்ஷித்து திருப்தி அடையுங்கள்.**
எல்லா ஸ்டோர்களிலும் விற்கப்படுவது.
எப்பொழுதும் உபயோகியுங்கள்.

## ஆடோ டில்பஹார் (ரெஜிஸ்டர்ட்)

இணையற்ற வாசனையுள்ளது. நீடித்த நறுமணம் உள்ளது. தபால் முதலிய சார்ஜிற்கு 4 அணு ஸ்டாம்பு அனுப்பி சாம்பிள் வாங்கிப் பாருங்கள்.

*Sole Agent:*—ANGLO INDIAN DRUG & CHEMICAL CO.,
285, Jumma Musjid, P.O. Box 2085, Bombay 2.



**வைத்திய ரத்ன**
**யு. ராமநாத சாஸ்திரிகளின்**



**ஸித்தமகரத்வஜம்**
(தங்கம் சேர்ந்தது.)
அங்கங்களையும் நரம்புகளையும் பலப்படுத்தும், திடசாலியாயும் யௌவனமாயும்இருக்கலாம், 30மாத்திரை சீசா1 ரு.7.

**மஹா பில்வாதி லேகியம்**
பித்தம், அஜீரணம், மலபந்தம் முதலிய வயிற்று கோளாறுகளை உடனே கண்டித்துவிடும். ஒரு சேர் டப்பி 1-க்கு ரு. 4.

**ஸ்ரீ தன்வந்திரி கவசம்**
வியாதி, மனோ விசாரம், தரித்திரம், இவைகளை விலக்கி, உத்தியோக வியாபார லாபங்கள், காரிய ஸித்தி, ஜனவசியம் இவைகளை அளிப்பதில் அபாரமான சக்தி உள்ளது. இதில் வசீகரண மூலிகை, பிரதிஸரஸூத்ரம்,ஸ்ரீ தன்வந்தரீயந்திரம் இவைகளை மந்திரபூர்வமாய் ஸ்தாபிக்கப்பட்டு இருக்கிறது, கவசம் 1-க்கு ரு. 3.

**ஆனந்த படை நிவாரணி**
எல்லாவிதமான படைகளையும் திரும்பி வராமல் இருக்கும்படி ஒரே வேளையில் போக்கிவிடும். டப்பி 1-க்கு ரு. 1.

**ஆனந்த பற்பொடி**
(40 வருஷங்களாக புகழ்பெற்றது.)
சென்னை ஹைகோர்ட்டில் உரிமைபெற்றது. இந்தியாவில் இது ஒன்றுதான் சிறந்தது.எங்கும் கிடைக்கும்.கேட்லாக்இனாம். ஸகலத்துக்கும் வி. பி. பிரத்யேகம்.

**வைத்திய ஸித்தாச்ரமம்**
பஜார் ரோட், மைலாப்பூர், மதராஸ்.



மறுக்க முடியாத உண்மை!
நாகரீக வாழ்விற்கு அடிப்படையானது
அழகு மிகுந்த ஆடைகளே!!

தொழில் முறையில் அனுபவம் வாய்ந்தவர்களைக் கொண்டு கண்களைக் கவரும் கலர்களில் வனப்பு மிகுந்த ஜரிகை வேலைப்பாடுகளோடு தயாரிக்கப்பட்ட

## பட்டு

**புடவைகள் வேஷ்டிகள்**

எங்கள் வசம் ஏராளமாயிருக்கின்றன.

## C. R. பாலுசாமி அய்யர்

115, நைனியப்ப நாய்க்கன் தெரு, மதராஸ்.
போன் நெ. 3432.

9, ஜடாமுனி கோவில் தெரு, மதுரை.



எல்லோரும் எங்கள்
பீ. எஸ். வஸ்துக்களை
உபயோகியுங்கள்

மணத்திலும், சுவையிலும்
ஆரோக்கியமானது

# P.S.

பெருங்காயம் – பாதம் எண்ணெய் – அம்லா ஹேர் ஆயில் – வாசனை தேங்காய் எண்ணை - கஸ்தூரி குங்குமப்பூ - கோரோஜனம் – ஊருகாய் (பஞ்சாபி) ரோஸ் பஞ்சாபிகுல்கந்து–பஞ்சாப்தேன் - முத்து பன்னீர்–ஓமவாடர் - முறப்பா, நெல்லிக்காய் – இஞ்சி, மாங்காய்.

தயாரிப்பவர்கள் :—

**மதருஸ் புட்பிராடக்ட்ஸ்,**
45, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு,
ஜி. டி. மதருஸ்.

ஸ்தாபிதம் 1924

## பிரபல ஜோதிஷர்



மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர். மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. டி பலனை வாரா வாரம் விவரமாக எழுத ரூ. 10. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 2. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. ஜ்யோதிஷ ஞான போதினி. ஜாதக யோகங்கள் என்னும் புத்தகம் விலை ரூ. 2—8—0. வி. பி. சார்ஜ் பிரத்யேகம்.

பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார்,
“தபோநிதி” தியாகராயநகர், மதராஸ் 17.



## வைரங்கள், நகைகள்



பருமனைக்கொண்டு மட்டும் வைரத்தின் மதிப்பை அளவிட முடியாது.
வர்ணம், பட்டை பிரகாசம், இவற்றையும் கொண்டே மதிப்பிட வேண்டும்
ஆகையால் வைரமோ, வைரம் பதித்த நகைகளோ வாங்கும்போது. நம்பிக்கை
யும் அனுபவமும் வாய்ந்த நகைவியாபாரியின் உதவியை நாடவேண்டும்.

உம்மிடி
### ராமையா செட்டி குருஸாமி செட்டி & கோ.
வைர வியாபாரிகள்
23-25, சைனாபஜார் ரோடு. சென்னை.

## எஸ். எம். டி. வேலு அண்டு கோ.,
### சின்னக்கடைவீதி, சேலம் டவுன்.

★

எலக்டிரிக் : பம்பு செட்டுகள், மோட்டார்கள், ஸ்டார்ட்டர்கள், ஸ்விட்ச் கியர்கள், பல்பு தினுசுகள், ஓயர் காயில்கள், மீட்டர்கள், ரேடியோக்கள்.

இன்னும் மில்களுக்கும், விவசாயத்திற்கும், வீடுகளுக்கும் தேவையான எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்களும், சில்லரையாகவும், மொத்தமாகவும் விலை சரசமாய்க் கிடைக்கும்.

வாரியர்

## பிருங்காமலகாதி

### தைலம்

குளிர்ச்சிமிக்க ஸ்நான தைலம். கறுப்பான காந்தி மிக்க கூந்தல் தாராளமாக வளரச் செய்யும். அரிப்பு, பொடுகு, தலைவலி, அதி உஷ்ணம், நித்திரையின்மை, கண் எரிச்சல், அதிகப்படிப்பினாலோ வேலையினாலோ ஏற்படும் மந்தம், ஞாபக மறதி, மூளைக்கொதிப்பு முதலியவைகளில் மிகவும் உபயோகமானது.

**16 அவுன்ஸ் புட்டி ரூ. 4.**
(பாக்கிங், தபால் செலவு வேறு.)

ஆர்ய வைத்தியர்
### கே. எஸ். வாரியரின்
## அஷ்டாங்க ஆயுர்வேதசாலா
தெப்பக்குளம், திருச்சி.
(ஸ்தாபிதம் : 1936.)

## முத்து கழுத்து சங்கிலி:




இமிடேஷன் ஜவல்கள் (வைரம்பச்சை, சிகப்பு அல்லது நீலம்) பதித்தஸ்திரீகளுக்கான சிறந்த கழுத்து சங்கிலி. க்ரீம் டிண்டுகளுடன் முத்துக்களும் உண்டு. நிரந்தர கலர், லாக்கெட்டுடன் முழுசைஸ் ரூ. 3-10. இமிடேஷன் ஜுவல் பதித்த தங்க மோதிரம் மேல்கண்ட ஜுவல்களுடன் டஜன் ரூ. 5-8. ஜுவல் இல்லாது பூவேலைகளுடன் டஜன் ரூ. 4-8. ஒருடஜன் எந்தவித மோதிரம் வாங்கினாலும் மேற்கண்ட கழுத்து சங்கிலி இனாம். எல்லாவற்றிற்கும் தபால் செலவு இலவசம். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுத கோருகிறோம்.

போட்டோ படங்கள்:-பிரபல பாரிஸ் அழகிகளின் படங்கள். வயது 16 முதல் 20 வரை, ரகசிய விவரணை கூடாது, டஜன் விலை ரூ, 4/8, எல்லாத்தேச தலைவர்கள் காந்தி, நேதாஜி முதலியவர்களின் படங்கள் டஜன் ரூ, 3/8. தபால் கார்டு சைஸ், தபால்செலவு கிடையாது. 1 அணா ஸ்டாம்பு அனுப்பி, ஆயுள் பூராவும் உபயோகிக்கக்கூடிய காலண்டரை பெறலாம்

**HENA AGENCY,**
NO. 14, Dr. Jagabandhu Lane, (S.W.)
Bowbazar P. O., CALCUTT

## ஆஸ்த்மாவை குணப்படுத்துவது



## ஸ்வாஸஹாரி தான்

ஐந்து நிமிஷத்திலோ, ஒரே இரவிலோ ஆஸ்த்மாவை குணப்படுத்தி விடுமென்று விளம்பரம் செய்யும் மருந்துகளை உட்கொண்டால் நோய் அதிகரிக்குமேயொழிய குறையாது. "புரோஹித் ஸ்வாஸஹாரி" ஒன்றுதான் உட்கொண்ட ஆரம்பத்திலிருந்தே கபத்தைக் கரைத்து அஜீர்ணத்தை குணப்படுத்தி நுரையீரல்களை பலப்படுத்தி ஆஸ்த்மாவினின்றும் பூரண சௌக்கியத்தை நிச்சயமாக அளிக்கிறது. ரூ 3-8, ரூ 6-, ரூ 10- பாக்கிங்களில் எல்லா இடங்களிலும் கிடைக்கும். அல்லது "டாக்டர் புரோஹித் பார்மஸி" கோலாப்பூர் விலாசத்திற்கெழுதி பெற்றுக்கொள்ளலாம்.



ஆஸ்த்மா, ச்வாஸாசய நோய்களுக்கு டாக்டர்கள் விதிப்பது

**புரோஹித ஸ்வாஸஹாரி**

DR. PUROHIT PHARMACY, KOLHAPUR



## குஷ்டத்திற்கு மருந்து இல்லையா?

இதோ லக்ஷ்மி பிரசாதம்

# (லெப்பர் கியூர்)

18 குஷ்டங்களையும் வெண் குஷ்டம், செவ்வாய் மேகம், வெள்ளை, வெட்டை நிவாரணத்திற்கு எல்லாம் சாப்பிடக்கூடிய அமிர்தம்

**40 நாட்களில் குணம்**

தலைமை ஆபீஸ்: வால்டேர், ஆர். எஸ். | லக்ஷ்மி & கோ., 2/135, பிராட்வே, மதராஸ்.


## பிரசுரமான கிருதிகள்

★

"சுதேசமித்திரன்" வாரப்பதிப்பில் வெளியான கீர்த்தனைகள் கீழ்கண்டுள்ள விலைக்கு கிடைக்கும்:

காயகசிகாமணி அரியக்குடி ராமானுஜய்யங்காரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. அருணாசலக் கவிராயர் கீர்த்தனை 32-க்கு ரூ. 8 0 0
2. திருப்பாவை 30 பாட்டுக்கு ரூ. 7 8 0
3. பூச்சி ஐயங்கார் ஜாவளிகள் 24-க்கு ரூ. 6 0 0
4. ஸ்ரீ சியாமா சாஸ்திரி க்ருதிகள் 12-க்கு ரூ. 3 0 0

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யரால் ஸ்வரப்படுத்தப்பட்டவை:—

1. ஸ்ரீ ப்ரும்மேந்திரர் க்ருதிகள் 15-க்கு ரூ. 3 12 0
2. ஸ்வாதித் திருநாள் 80-க்கு ரூ. 20 0 0

மேற்கூறியுள்ளவை புத்தக ரூபகமாக இல்லை, தனித்தனி தாளாக உள்ளன ஒரு தாளில் ஒரு கீர்த்தனைதான் இருக்கும். தபால் செலவு ப்ரத்தியேகம்.

மானேஜர்.
"சுதேசமித்திரன்" புத்தகசாலை மவுண்ட் ரோடு, சென்னை.


## குதூகலமான தீபாவளிக்கு

★

இவ்வருஷ தீபாவளிக்காக உயர்ரக வேஷ்டி, புடவைகள், ஸில்குகள் நல்ல அழகிய டிஸைன்களில் பங்களூர், கோயம்புத்தூர், சேலம், உறையூர் முதலிய ஊர்களிலிருந்து வரவழைத்திருக்கிறோம். மில்வேஷ்டி, சீட்டி, வாயில்களும் ஏராளமாகவுண்டு. குறைந்த லாபத்துக்கு மலிவான விலையில் விற்பனைசெய்கிறோம்.

ஒரு முறை விஜயம் செய்தால் திருப்தி அடைவீர்கள்,

**நூர்ஜஹான் ஸில்க் ஸ்டோர்ஸ்,**
திருவையாறு





## 501 ஸோப்பால்

வெளுக்கப்பட்டது.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி, லிமிடெட்.


## காங்கிரஸ் மகாசபை சரித்திரம்

முதல் பாகம் கைவசமில்லை

இரண்டாம் பாகம் „ ரூ. 2.
மூன்றாம் பாகம் „ ரூ. 2.
(தபால் செலவு அணா 10.)

முன்பணம் அனுப்பவேண்டும். V. P. P. அனுப்புவது கிடையாது.

மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, விக்டரி ஹவுஸ் மவுண்ட்ரோட், சென்னை.




பிரசித்தி பெற்ற

"காஸினோ"

முகப்பவுடர்

உங்கள் முகத்தை பொலிவுடன் பிரகாசிக்கச்செய்கிறது.

வாங்கும்பொழுது காஸினோ மார்க்கைப்பார்த்து வாங்குங்கள்.

**CHANDRA TRADING CO.,**
**93, ACHARAPPAN ST., G.T. MADRAS 1.**



Coffee
Ours for Quality




GANESH & Co
(MADRAS) Ltd.
T. NAGAR



★

**FREE GIFT.**

OF YOUR 1949 HOROSCOPE. IMPORTANT PLANETARY INFLUENCES BRING NEW OPPORTUNITIES FOR UNPRECEDENTED IMPROVEMENTS IN YOUR SOCIAL, PROFESSIONAL & FINANCIAL AFFAIRS DURING 1949. LEARN AT ONCE THE GREAT GOOD LUCK THAT AWAITS YOU.



**SEND NO MONEY**

SEND ONLY YOUR HOROSCOPE COPY OR DATE OF BIRTH AND YOU WILL BE THRILLED WHEN YOU RECEIVE THE INTENSELY INTERESTING FORECAST OF YOUR FUTURE ABSOLUTELY FREE. WRITE AT ONCE TO—

Prof. SEKHAR, B.A. (Wash) M.I.B.M. (U.S.A.)
The Great Mesmerist & Zamindar
ELLORE. (West Godavari Dt.)

N. B. All correspondence & Readings in English only

★



Lovely long hair

**ASOKA AMLA**




**HAIR OIL**

100% மருந்து பூர்வமானது; வாசனையுள்ளது, மூலிகைச் சத்துக்கள் நிறைந்த கேச மருந்து. மூளைக்குக் குளிர்ச்சியளித்து கேசம் வளர உதவும்

**VIJAYA CHEMICAL & TOILET WORKS**
21 & 22 Suriyanarayana Chetty St.,
Royapuram, Madras.





**1 பவுனில் 4 ஜதை**
**கவரிங் வளையல்கள்**
**கிடைக்கும்**

**காஸிம் பிரதர்ஸ், 192, சைனா பஜார், சென்னை.**



| | | | |
|---|---|---|---|
| A. B. C. Talks | 1 | 4 | 0 |
| ராமானுஜதர்சனம் | 1 | 0 | 0 |
| தீனதயாளு | 0 | 12 | 0 |
| பாலகங்காதர திலக் | 0 | 8 | 0 |
| ஸ்வராஜ்யம் | 0 | 8 | 0 |
| சங்கராச்சாரியார் | 0 | 5 | 0 |
| ஸ்ரீராம ஜனனம் | 0 | 4 | 0 |

தபால் செலவு பிரத்தியேகம்.

மானேஜர்
"சுதேசமித்திரன்" புத்தகசாலை
மவுண்ட்ரோட், மதராஸ்.

# சக்தி ஆரூடம்!

★

சென்னை தியாகராய நகர் பிரபல டாக்டர் K. ராகவன் L. I. M. எழுதுகிறார்:— "தங்கள் சாஸ்திர ஞான கியாதி இணையில்லாதது. ஜாதக பலன்கள் கூறும் திறமை வியக்கத்தக்கது."

1 முதல் 3 எதிர்கால கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. 1 வருட பலன் ரூ. 5. ஜாதகம் கணிக்க ரூ. 2. சக்தி கவசம் ரூ. 7-8-0. வி.பி.பி. தனி. ஜாதகம் or கடிதம் எழுதும் நேரம் தேவை. N. B. வெளிநாட்டிற்கு முன் பணம் தேவை.

**சக்தி ஹோம், விருத்தாசலம், P. O. (S. I.)**

# குகன்
## சோப்புகள்




சலவைக்கு சிறந்தவை

**குகன் இண்டஸ்ட்ரீஸ்... திருப்பூர். S.I.**




சகல விதமான பட்டு நூல் ஜவுளிகளுக்கு
கைராசியும் நம்பிக்கையுமுள்ள
புதிய ஜவுளிக்கடை

# ராம்ராஜ்யா ஹால்

**N.R. ராமசந்திர செட்டி & கோ. கடை வீதி... சேலம்**

கதா ம்மாகமா ரஞ்சிதம
3-பாகங்கள் விலை ரூ. 2-8-0
தபாற் செலவு பிரத்யேகம்.
மானேஜர்: "சுதேசமித்திரன்" புத்தகசாலை, மவுண்ட்ரோட், சென்னை

டெலிபோன்: 2246. தந்தி: கிளாவர் பீடி

(USE ALWAYS)
500 1st. Quality Spade Clover Beedies. 500
PLEASE LOOK OUT SPADE CLOVER JADI BEEDI FACTORY. MANADY MADRAS.
SPADE CLOVER BEEDI
M MOHAMED OOMER. 37, MANADY ST. MADRAS.

லேட் கான்சாகிப் எம். முஹமது உமர்சாகிபுவின்குமாரரான முஹமத் நூருல்லா என்று பெயர்கொண்ட நான் இவ்வியாபாரத்தை மிகவும் அபிவிருத்தி செய்துள்ளேன். மிகச் சிறந்த புகையிலையையும், உயர்தரமான சரக்குகளையும் உபயோகித்தே

## ஸ்பேட் கிளாவர் பீடிகள்

தயாரிக்கப்படுகின்றன. இந்த பீடிகளின் ரகமும், மணமும் குணமும் என் தகப்பனார்காலத்திலிருந்ததைப் போன்றேசிறப்பாகவிளங்குகின்றது.

முகம்மது நூருல்லா
ஸோல் புரொபரைட்டர்,

**ஸ்பேட் கிளாவர் & ஆர்ட்டீன் பீடிகள்**
**37, மண்ணடி, மதராஸ்.**

# பீம-வீர்

"Bheema-Veer"



JAMADHAGNI OUSHADALAYA — MYLAPORE.

"பீம-வீர்" பூர்வகால ஆயுர்வேத முறைப்படி மூலிகை சத்துக்களாலும், பஸ்பங்களாலும் தயாரிக்கப்பட்டது. ரத்தத்தை சுத்திசெய்து, சாஸ்வதமான யௌவனத்தையும், ஞாபக சக்தியையும் உண்டாக்கி, தேக புஷ்டியையும், வலுவையுங் கொடுப்பதில் நிகரற்ற அவுஷதம்.

40—நாள் மருந்து ரூ. 3-12-0.
பாக்கிங்கு, தபால்சார்ஜ் கிடையாது

**ஜமதக்னி ஔஷதாலயா,**
26, வடக்குமாடவீதி, மயிலாப்பூர், சென்னை

வாழிய செந்தமிழ்!

# சுதேசமித்திரன்

வாழ்க நற்றமிழர்!

வாரப்பதிப்பு

Vol. XIX] ஸர்வதாரி௵ ஐப்பசி௴ 8௳ ★ 1948-௵ அக்டோபர்௴ 24௳ No. 39

## உணவுக் கண்ட்ரோல்

ரேஷன் திட்டமும் தீவிரமான தான்யக் கொள்முதலும் அடுத்த மார்ச் மாதத்துக்குள் இம்மாகாணமெங்கும் மீண்டும் பூர்ணமாக அமுலுக்கு வந்துவிடும். உவகை தரும் செய்தி அல்ல இது. ஆனால், தற்போதைய நிலைமையில் உணவு கண்ட்ரோலை முற்றிலும் அமுலுக்குக் கொண்டுவருவதைத் த்விர வேறு வழியில்லை. இம்முறையை மேற்கொண்டால்தான் உள்ள உணவை அனைவருக்கும் கூடியவரை நேர்மையாகப் பங்கிட்டு, குறிப்பாக ஏழைகளின் துன்பத்தை ஓரளவேனும் துடைக்க முடியும். பணப் பெருக்கத்தையும், பண்டத் தட்டையும் பொறுத்த பல அம்சங்களையும் ஆராய்ந்தபின், உடனடியாக உணவு கண்ட்ரோலை மறுபடி அமுலுக்குக் கொண்டுவருவதென்று இந்திய சர்க்கார் ஏற்கெனவே முடிவு செய்தது அனைவருக்கும் நினைவிருக்கும். இதையொட்டி தற்போது இம்மாகாண சர்க்கார் எடுத்துக்கொள்ளவிருக்கும் நடவடிக்கை மிக ஜரூரானதென்றே சொல்லவேண்டும். ரேஷன் ஏற்பாடும், தீவிரமான தான்யக் கொள்முதல் முறையும் அடுத்த வருஷம் அக்டோபர் மாதத்துக்குள் எல்லா மாகாணங்களிலும் பூரணமாக அமுலுக்கு வந்துவிட வேண்டுமென்பது இந்திய சர்க்கார் நோக்கம். ஆறுமாத காலத்துக்கு முன்பாகவே அதை சென்னை சர்க்கார் நிறைவேற்றி வைக்கவிருப்பது இங்குள்ள தனிப்பட்ட நெருக்கடிக்குப் பொருத்தமானதே. வேறு பல மாகாணங்களைவிட இங்கு உணவுத் திண்டாட்டம் அதிகம் என்பதில் சந்தேகமில்லை. எனவே, நிவாரண நடவடிக்கை எதையும் இங்கு இன்னும் துரிதமாக நிறைவேற்றி வைப்பதுதான் முறை.

ரேஷன் ஏற்பாட்டின் அடிப்படையான கருத்து போதாக்குறையான உணவை எல்லா மக்களுக்கும் நேர்மையாகப் பங்கிடுவதுதான். இது ஒரு அகில இந்திய ஏற்பாடாக அமுலுக்கு வருகையில், எல்லா மாகாணங்களிலும் ரேஷன் அளவு ஒரே சீராக இருப்பதே முறை. ஆனால், பம்பாய் போன்ற மாகாணங்களில் ரேஷன் திட்டப்படி பத்து அவுன்ஸ் உணவு கொடுக்க ஏற்பாடு செய்திருக்கையில், இம்மாகாணத்தில் ரேஷன் அளவு **8** அவுன்ஸ்தான். எல்லா மக்களுக்குமே வயிறார உண்ணப் போதிய உணவு கிடைக்க வேண்டுமென்பது நமது ஆவலாயினும், தட்டுள்ளவரை கஷ்டத்தை அனைவரும் சமமாகப் பகிர்ந்துகொள்வதே முறையல்லவா? எனவே, ரேஷன் அளவில் மாகாணத்துக்கு மாகாணம் இருந்துவரும் பேதத்தை நீக்கும் விஷயம் இந்திய சர்க்காரின் உடனடியான கவனத்தைப் பெறவேண்டும். இதை யொட்டி உணவு மந்திரி டாக்டர் ராஜன் சென்ற வாரம் வெளியிட்டுள்ள அறிக்கை கவனத்திற்குரியதாகும்.

ரேஷன் திட்டத்தில் அளவைப்போல் மற்றொரு முக்கிய அம்சம் விலை. உண்மையில் விலைவாசிகள் மேன்மேலும் உயராமல் கட்டுப்படுத்துவதே தற்போது அமுலுக்கு வரவிருக்கும் முழுக் கண்ட்ரோலின் முக்கிய நோக்கம். உணவு விலை அதிகரித்தால், அதைத் தொடர்ந்து மற்ற பண்டங்களின் விலையும் ஏறியே தீரும். எனினும், அடுத்தபடியாக அறுவடையாகும் தானியத்தைப் பொறுத்தவரை, கொள்முதல் விலையை சென்ற வருஷம் நவம்பர் மாதத்திலிருந்த விலையைவிட 25 சத விகிதத்துக்கு மேற்படாமல் நிர்ண



ஹைதராபாத்தில் சமஸ்தானப்படைகளின் உதவியுடன் இந்திய ராணுவத்தினர் தெருக்களில் சமாதானப் பிரசாரம் செய்து வருகையில் எடுக்கப்பட்ட படம்.

யிக்கலாமென்று இந்திய சர்க்கார் அறிவித்திருக்கின்றனர். மற்ற விலைவாசிகள் சென்ற ஒரு வருஷத்தில் மேலும் அதிகரித்திருப்பதை முன்னிட்டு, விவசாயிகளும் தங்கள் தானியத்துக்கு ஓரளவு அதிக விலை பெறுவது நியாயமென்று சர்க்கார் எண்ணுவதில் ஆச்சரியமில்லை. ஆனால், சென்னை மாகாணத்தில் சென்ற நவம்பர் மாதத்திலிருந்த கொள்முதல் விலை ஏற்கெனவே, அதாவது, சென்ற டிசம்பர் மாதமே சுமார் 25 சத விகிதம் உயர்த்தப்பட்டுளது. அதற்கு மேலும் அதை சர்க்கார் உயர்த்த இடமுண்டா என்று திட்டமாகச் சொல்வதற்கில்லை. அது மேலும் ஓரளவு உயர்த்தப்படுவதாகவே வைத்துக்கொண்டாலும், அவ்வுயர்வு உணவுப் பொருள் வாங்கும் ஜனங்கள்மீது நேரடியாக சுமரவிடக் கூடாது. சுமரவிட்டால் மற்ற பொருள்களின் விலைகளும் மேற்கொண்டு உயர்ந்துவிடும்; கண்ட்ரோலை மறுபடி அமுலுக்குக் கொண்டு வருவதன் அடிப்படையான நோக்கத்துக்கே அதனால் கேடு நேரக்கூடும் எனவே, மேற்கொண்டு கொள்முதல் விலை உயரக்கூடிய அளவை சர்க்கார் தாங்கள் கொடுக்க வேண்டிய உபகாரப் பணமாகக் கொள்வதே உசிதம்.

எப்படியும், கொள்முதல் வேலை திருப்திகரமாக நடந்தேற விவசாயிகளுக்கு ஊக்கமளிப்பது அவசியம். வாழ்வுக்குத் தேவையான பல முக்கியப் பண்டங்கள் அவர்களுக்கு எளிதாகக் கிடைக்க செய்ய வேண்டுமென்று இந்திய சர்க்கார் ஏற்கெனவே வலியுறுத்தியிருக்கின்றனர். இத்துறையில் சென்னை மாகாண சர்க்கார் எடுத்துக்கொள்ளவிருக்கும் நடவடிக்கை என்னவென்று இனித்தான் தெரியவேண்டும். இத்துறையில் அவர்கள் செய்யும் ஏற்பாடு எதுவும் விவசாயிகளின் காலட்சேபத் தேவை, தொழில் தேவை இரண்டையும் பூர்த்தி செய்யக்கூடியதாயிருக்குமென்று எதிர்பார்க்கிறோம்.



தசரா தினத்தன்று டில்லியில் கவர்னர் ஜெனரல் எஸ்டேட்டிலுள்ள பள்ளிக்கூடச் சிறுவர்களுக்கு ராஜாஜி தின்பண்டங்கள் வழங்கினர்.



லண்டனில் நடந்த காமன்வெல்த் பிரதம மந்திரிகள் மகாநாட்டையொட்டி பிரிட்டிஷ் மன்னர் ஒரு விருந்து அளித்தார். நடுவில் ஆறும் ஜார்ஜ் மன்னரும் அவருக்கடுத்தாற்போல் பிரிட்டிஷ் பிரதமர் அட்லியும் வலது கோடியில் பண்டித நேருவும் நிற்கின்றனர்.

# ★ குறவஞ்சி ★

தென் பாண்டி நாட்டில், பிரபலமாக விளங்கும் திருக்குற்றால க்ஷேத்திரம் பாடல்பெற்றது. சம்பந்தர், அப்பர், மாணிக்க வாசகர் ஆகிய சிவநேசச்செல்வர்கள் இந்த ஸ்தலத்தைப் புகழ்ந்து, பாராட்டிப் பாடியிருக்கிறார்கள்.

உள்ளக் குதுகுதுப்பை **உண்டாக்கி**, உடலுக்கு வலிமையைச் சேர்த்துத் தரும் அற்புதமான பல நீரருவிகள் இத்தலத்தின் அண்மையில் உள்ளன. இங்கு குறும்பலா மரத்தினடியில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிறார் சிவபெருமான். குழல் வாய்மொழி என்பது அம்பிகையின் திருநாமம். விஷ்ணுவாகவும், பிரமனாகவும், ருத்திரனாகவும் சிவபெருமான் இத்தலத்துக்கு வந்து சேர்ந்தாரென்பது ஸ்தல வரலாறு.

ஆதிகாலத்தில் "குறத்தி பாட்டு" என்று ஒன்றுண்டு. தலைவிக்குக் குறத்தி குறி கூறுவதைத் தெரிவிக்கும் பாட்டு அது. இதை அனுசரித்து 'குறம்' என்ற செய்யுள் ஒன்று இடம்பெற்றது. பிற்காலத்தில் இசையோடு கூடிய பாட்டுக்களோடு 'குறம்' என்று மற்றொரு வகை நூல் சிருஷ்டி பெற்றது. குறத்தி கூறும் சொற்களால் அமைந்த செய்யுட்கள் அவை.




பிற்காலம் வந்த புலவர்கள் இதை அடிப்படையாக்கிக் கொண்டு, குறத்தி குறி சொல்லுவதை நாடக ரூபமாக்கினர். இவ்வகையாக ஆக்கப்பட்டவை குறத்திகூறும் நாடகமும், குளுவ நாடகமும் ; இரண்டும் சேர்ந்ததைக் குறவஞ்சி என்னும் பிரபந்தமென்பர்.

தேவர்களைப் பாட்டுடைத் தலைவராக்கி, விவரம் கூறும் குறவஞ்சிகளில் இடம் பெறும் காதல் தெய்வீகமானது. தேவனிடம் தலைவி காதல் கொண்டு உடலும், உள்ளும் தேய்ந்து, நைந்து போவதாகவும், சேடியர் எத்துணை ஆறுதல் மொழிகள் சொல்லியும் அவளது மனத்துயர் தளராமல் துவண்டு போவதாகவும், குறத்தி அச்சமயத்தில் தோன்றி தலைவிக்குக் குறி சொல்லுவதாகவும் அமைந்திருக்கும் குற்றாலக் குறவஞ்சி, ரஸானுபவத்தின் உச்சம்; தெய்விக மணம் செழித்துப் பரிமளிக்கும் தீஞ்சுவைப் பாடல்கள். ஜீவாத்மா, பரமாத்மாவை அணுகும் அற்புதமான கட்டத்தையும் அதில் காணலாம். குறவஞ்சியின் முற்பகுதியிலுள்ள விசேஷம் இவை.

17-ஆம் நூற்றாண்டு முடிந்து 18-ஆம் நூற்றாண்டு துவங்கிய சந்தர்ப்பத்தில், மேலகரம் ஸ்ரீ திரிகூட ராசப்பக் கவிராயர் எனும் புலவர் திருக்குற்றாலக் குறவஞ்சியை இயற்றியவர்.

குற்றால நாதரிடம் காதல் கொள்கிறாள் வசந்தவல்லி என்ற பெண். பந்தாடிக்கொண்டிருக்கும்போது திரிகூட நாதரை அவள் கண்ணுறுகிறாள். அத்தெய்விகச் சந்திப்பில் ஜனித்த காதலினால் வஸந்தவல்லி வாடிச் சோர்ந்து போகிறாள். தங்கள் தலைவிக்கு நேர்ந்த மனச்சோர்வை நீக்கச் சேடியர் சைத்தியோபசாரங்கள் செய்கின்றனர். இதைக் குறவஞ்சி நாடகத்தின் கட்டியக்காரன் தெரிவிக்கும் பாடல் இதோ:—

"வானவர் திருக்குற்றாலர் மையலால் வசந்தவல்லி
தானுடல் சேர்ந்தாளென்று தமனிய மாடஞ்சேர்த்து
மேனியா ரழகுதோற்ற மின்னனார் விழுந்த பேரைக்
கூனைகொண் டமிழ்ந்துவார் போல்
குளிர்ச்சியால் வெதுப்புவாரே"

[தமனியமாடம் = தங்கத்தால் அமைந்த மாடம்; கூனை = பெரிய பானை; துறவஞ்சி = குறப்பெண்.]




"சூரன"

★

ரகுராமய்யர் கடிதத்தைப் படித்ததும் திகைத்து நின்றார். குறிப்பிட்டபடி மறு தினம் முகூர்த்தம் நிறைவேறாமல் போய் விடப் போகிறது என்பதை நினைக்கும்போது அவருக்கு ஏற்பட்ட கிலேசத்திற்குக் கணக்கில்லை.

அந்தக் கடிதம்:

"அன்பார்ந்த ரகுராமய்யர் அவர்களுக்கு,

நமஸ்காரம்.

நாளை நடக்கவிருக்கும் முகூர்த்தத்தை அடுத்த முகூர்த்தத்திற்கு ஒத்திப் போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன். சில எதிர்பாராத முகாந்திரங்கள் ஏற்பட்டதைத் தவிர்த்து சாரதாவைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டாம் என்ற எண்ணம் துளிக்கூட இல்லை.

தங்கள்
சர்மா"

ரகுராமய்யர் சிந்தனையிலாழ்ந்தார். தன் பெண் சாரதாவை இரண்டாம் தாரமாக இஞ்ஜினீர் ஸ்ரீராம சர்மா ஏற்றுக்கொள்வதாக முன் வந்ததை ஏறக்குறைய ஒரு பகல் கனவாகவே கருதியிருந்த ரகுராமய்யருக்கு இந்தக் கடிதம், மனதில் அழற்சியை ஏற்படுத்தியதில் ஆச்சர்யம் இல்லையல்லவா?

ரகுராமய்யரும் இஞ்ஜினீர் இலாகாவில் உத்தியோகம் பார்த்துக் கொண்டிருந்தார். எதிர்பாரா விதமாக ஒரு தினம் 'ஸர்வீஸி'லிருந்து ரிடையராக வேண்டும் என்ற தகவல் கிடைத்ததும் அவருக்குத் தூக்கி வாரிப்போட்டது. உத்தியோக விஷயத்தில் யதார்த்தவாதியாகத் தன் சூழ்நிலையைப் புரிந்துகொள்ளாமலே காலத்தை கடத்திவிட்டார். இப்போதுதான் அவருக்கு எதிர்காலத்தைப்பற்றிய நினைவுகள் மெல்ல மனதில் முளைத்தன. அவர் மனைவி மீனாக்ஷியும் இந்த சந்தர்ப்பத்தில் ரகுராமய்யரை, எதிர்காலத்தின் திட்டத்தை வகுக்க பிரமாதமாகத் தயார்ப்படுத்த முற்பட்டாள். அதாவது தினம் ஓயாமல் அவரிடம் அதைச் செய்யுங்கள்; இதைச் செய்யுங்கள்' என்றெல்லாம் ஏவிக்கொண்டு இருந்தாள், 'எங்கேயாவது ஒரு கம்பெனியில் ஒரு உத்தியோகத்தைப் பார்க்க வழிதேடுங்கள்' என்ற அவளுடைய உபதேசம், ரகுராமய்யரை ஸ்ரீராம சர்மாவிடம் கொண்டு போய்ச் சேர்த்தது.

சர்மா ஒரு கம்பெனியில் இஞ்ஜினீராக இருந்தார். ரகுராமய்யரின் 'யதார்த்த'த் தத்துவத்தையும் சலியாத உழைப்பையும் அவரைப் பார்த்து இரண்டொரு வார்த்தைகள் பேசிய மாத்திரத்திலேயே தெரிந்துகொண்டார்.

ரகுராமய்யர் சர்மாவிடம் வேலைக்கமர்ந்தார்.

சர்மாவின் வாழ்க்கை முறையைப் பற்றி ரகுராமய்யர் கவலைப்படவில்லை. அந்தக் கவலையை ஏந்திநிற்க சர்மாவின் ஆத்மார்த்த சிநேகிதரான 'ஹரிஹரன்' இருந்தான்! சர்மாவுடன் உடலுடன் ஒட்டிப் போய் விட்ட ஒரு ஆசாமி அவர், அவருடைய இன்ப துன்பங்களில், ஆசா—பாசங்களில், விருப்பு—வெறுப்புகளில், இன்னும் சர்மாவின் காரியங்கள் அநேகவற்றிலும் இரண்டறக் கலந்து நின்றார் ஹரிஹரன்.

சர்மாவின் பெரிய பங்களாவில் அவர் வெளியில் போய்விட்ட சமயங்களிலும், அவர் அங்கே வாசம்செய்து ஒவ்வொரு நிமிஷத்தின்போதும் பக்கலிலே இருந்து கொண்டிருப்பார். குடும்பம் என்ற விஷயம் சர்மாவுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை; மனைவியை இழந்தவர் அவர். உலகத்தில் ஹரிஹரன் என்ற பிராண சிநேகிதனைத் தவிரவேறு உயிர்ப் பாசமேகொண்டிராதவர். எனவே, நியாயமாக சர்மாவின் தனிமை வாழ்வைப்பற்றி ஹரிஹரன் கவலைப்படாமல் புதிதாக வந்து முளைத்த ரகுராமய்யர் கவலைப்பட என்ன இருக்கிறது?

ஹரிஹரன் சர்மாவுடன் ஒரு பெரிய பிரச்னையைப் பற்றி எத்தனையோ சந்தர்ப்பங்களில்

விவாதித்திருக்கிறன். அந்த சம்பாஷணையின் தோரணை எப்படியிருக்கும், தெரியுமா? ஒரு தினம்.

ஹரிஹரன்:—இவ்வளவு நேரம் நான் பேசி வந்ததையே ஆதாரமாகக் கொண்டு சொல்லுகிறேன். நீங்கள் அவசியம் இரண்டாம் தாரமாகக் கல்யணம் செய்து கொள்ளத்தான் வேண்டும்......

சர்மா;—நான் நூற்றிலோராவது தடவையாகச்சொல்கிறேன், ஹரி மறு விவாகம் மனதுக்கு நிம்மதி யளிக்காமல் போய்விடக்கூடிய ஒரு விஷயம்......

ஹரி:—முதல் விவாஹமேகூட நிம்மதியளிக்காமல் போய்விடலாமல்லவா. தாங்கள் சொல்வது போல.

சர்மா:—அப்படியில்லே, அப்படி ஏற்பட்டாலும் அதை அடைந்து அனுபவித்துத்தான் ஆகவேண்டும். ஏனெனில், மனிதன் ஒரு முறை முதன் முதலாகக் கல்யாணம் செய்துகொள்ள வேண்டியது நியதி. அதன்பிறகு தன் சௌகரியத்தை உத்தேசித்து, வாழ்க்கையின் எந்த கட்டத்திலும் விவாகம் செய்துகொள்வதென்பது மனித சுபாவத்தை மீறின விஷயமாய்ப்போய் விடலாம். எதிர்பார்க்கும் சுகத்திற்கு மாருக வேறு எது ஏற்பட்டாலும் அனுபவிக்கத்தானே வேண்டும்?

ஹரி:-நான் என்னமோ என்கட்சியைத்தான் அறிவுறுத்துவேன். உங்களுக்கொன்றும் அதிகம் வயசாகிவிடவில்லே; ஏராளமான சொத்து இருக்கிறது.........

இந்த ரீதியில் சம்பாஷணை;சம்பாஷணையில் தினசரி இந்த விஷயம் தலே தூக்காமல் போகாது. ஹரிஹரன் கடைசியில் சர்மாவைத் தன் கட்சியை ஏற்கும்படி செய்துவிட்டான். அதுவரையில் அவன் சாமர்த்தியசாலிதான்!

சர்மா: அப்படியே நான் சம்மதித்தாலும், பாதிக் கல்யாணம் நிச்சயமான மாதிரி தானே. என்னைக் கலியாணம் செய்துகொள்ள எந்தப் பெண்— முன் வருவாள், ஹரி?

ஹரி: அப்படித்தான் நினைக்கக் கூடாது.' உங்களைப் போன்றவர்கள் முன் வருவது தெரிந்தால் எத்தனையோ பெண்கள் காத்துக்கொண்டிருப்பார்கள். நான் ஏற்பாடுசெய்கிறேன்.........

ஹரிஹரனுக்கு உடம்பில் ஒரு தனி உற்சாகம். தனக்கே ஏதோ கல்யாணம் நடக்கப் போகிறதாக உணர்ந்தானே? அவன் சல்லடை போட்டுப்பார்க்க ஆரம்பித்தான்.

சர்மாவின் வாழ்க்கையில் குறுக்கிட்டதுபோலவே, ஹரிஹரன் ரகுராமய்யர் வாழ்க்கையிலும் குறுக்கிட்டான். அவர் சர்மாவிடம் பங்களாவில் வந்து பேசிக்கொண்டிருந்தபோது யதேச்சையாகப் பரிச்சயம் செய்துகொண்டது சிநேகத்தில்முடிந்தது.அவருடனும் அவன் சம்பாஷணைகள் நடக்காமலிருக்குமா?

"ரகுராமய்யர். நம்ம சர்மா' ஸார்' கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிருர்......"

"இன்னும் 'ஸா'ருக்குக் கல்யாணம் ஆகவில்லே?......"



"அட. இதுதெரியாதா உமக்கு? இரண்டாம் தாரமாகப் பண்ணிக் கொள்ளப்போகிருர்......"

"ஓஹோ. சரிதான்... நான்....."

"அது சரி. ரகுராமய்யர்வாள் ஒரு நல்ல வரன் பார்த்துச் சொல்லும். இந்த இடம் கிடைக்கத் தவம் பண்ணியிருக்கவேண்டும். ஒரு பைசா செலவு இல்லாமல் 'ஸார்' எல்லாம் போட்டு நடத்திக் கொள்வார்........."

"ஆஹா, பேஷாய் பார்க்கிறேன்"

மீனுக்ஷியம்மாள் ரகுராமய்யர் சொன்னவற்றை யெல்லாம் வாய் பிளக்கக் கேட்டுக்கொண்டிருந்தாள்.

"நீங்க சொல்றதுதானே, என் பெண்ணே ஒத்தி இருக்கா. நல்ல அழகுன்னு..."

"போடி, பைத்தியம் உடனே சொல்வாளாக்கும். சொல்றேன், சர்மாவிடம் நானே பிரஸ்தாபித்து முடிவு பண்ணறேன்...... ஆனு, சாரதா இஷ்டப்படுவாளான்னு கேக்கணும்......"

"அவளே என்ன கேள்வி?"

"ஆனுல், இரண்டாம் தரம்னு ஒரு வார்த்தை சொல்ல வாண்டாமா அவளிடம்?"

"இரண்டாம் தரம்னு கசக்கறதா? காசுபணம் செலவு பண்ணிப் பண்ணி விடறதுக்கு எங்கேபோறதாம். மேலும் ஒரு இன்ஜினீர் புருஷனு வரார்னு குடுத்துவச்சுருக்க வாணடாமா?..."

"அப்போ சாரதா கிட்ட நீயே சொல்லிப் பிடறயா?......"

சாரதா இருவர் எதிரிலும் திடுதிப்பென்று தோன்றினுள். "என்னிடம் சொல்லாமலேயே தெரிந்துகொண்டு விட்டேன். இருந்து இருந்து



"ஏண்ணா! ஒரு தாத்துக்கு பொடி இருக்குமா.........."

"இருக்காதே! எங்கிட்டே அரை டப்பாத்தான் இருக்கு.........!"

பார்த்தீர்களே, வரன்! இதைப்பற்றிச் சொல்லக் கூட வேண்டுமா என்னிடம்!"

"சாரதா, ஏன் அவருக்கென்ன ?.........."—ரகுராமய்யர்.

"அவருக்கென்ன? ஒன்றுமில்லை! எல்லாம் உங்களுக்குத்தான்... பித்தக் கோளாறு! இரண்டாம்தாரம் என்கிற விஷயம் என்னிடம் கூட வருமென்று நான் நினைக்கவில்லை. திடீரென்று 'கல்'லைப் போட்டது போல 'வரன்பார்க்கிறேன், என்கிறீர்கள். எனக்கு வேண்டாம் அந்த வரன்! வீணாக அதில் பிரவேசிக்காதீர்கள்" என்று படபடவென்று சாரதா பொழிந்தாள்.

"எல்லாத்தையும் ஒட்டுக் கேட்டிண்டு நின்னிருக்கு, இது!" என்றாள் மீனாக்ஷி. பிறகு "அவளிடம் என்ன பேச்சு உங்களுக்கு, நீங்க பாட்டுக்கு ஏற்பாடு பண்ணுங்கோ........." என்று முடிவாகச் சொல்லிவிட்டு நகர்ந்தாள்.

ஹரிஹரனுடன் மறுபடி பார்த்துப் பேசிக்கொண்டிருந்தபோது சர்மா சாரதாவைப்பற்றிப் பிரஸ்தாபித்தார். ஹரிஹரனுக்குத் திருப்தியாக இருந்தது. சர்மாவிடம் பேசித் தீர்மானம் செய்ய இசைந்தான்.

சர்மாவிடம் இரண்டுபேரும் கலந்து பேசினர்.

முகூர்த்தம் குறிப்பிட்டாகிவிட்டது.

சாரதாவுக்கு விஷயம் எட்டியபோது அவள் மனம் வேதனைப்பட்டது. உருக்குலைந்து போய் பிரமை பிடித்தவாறு காணப்பட்டாள்.

முகூர்த்த தினத்திற்கு முதல் தினத்தன்று சர்மாவிடமிருந்து ரகுராமய்யருக்கு ஒரு கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தைத் தான் ஆரம்பத்தில் படித்தீர்கள்.

* * * *

அடுத்த முகூர்த்த தினத்திற்கு முதல் தினம் சர்மா தன் உற்றார் உறவினருடன் வந்து சேர்ந்தார். மாலையில் மாப்பிள்ளை அழைப்புக்கு ஏற்பாடு செய்தனர்.

சாரதாவின் தோற்றம் சாதாரணமாகத் தானிருந்தது; ஒருவேளை சர்மாவுக்காகவல்லாவிடினும் காசுபணம் என்ற விஷயம் அவள் மனதை மாற்றிவிட்டதா.

மாப்பிள்ளையின் ஸ்தானத்தில் சர்மாவுக்குப் பதிலாக ஒரு வாலிபன் உட்கார்ந்திருந்தான்,எல்லோருக்கும் தூக்கி வாரிப்போட்டது. ரகுராமயர் இது என்ன இது, சர்மாசார்...என்று கையைப் பிசைந்தபோது நடக்கட்டும் ரகுராமன்! நான் இதற்காகத்தான் முகூர்த்தத்தை ஒத்திப் போடச் சொன்னேன். என் அத்தை பிள்ளை இவன். ஊரிலிருந்து வர வேண்டியிருந்தது...என்றார் சர்மா.

"அது சரி: தாங்கள் அல்லவோ மாப்பிள்ளையாக........"

"அது சரிதான். அப்போ தீர்மானம் பண்ணினோம். இப்போ மாத்தியாயிட்டுது. கண்ணை மூடிண்டு குருட்டுத்தனமா ஒரு பெண்ணைக் கிணத்திலே தள்ள நினைச்சோம். எனக்கும் விவேகம் இல்லாமல் போயிட்டுது. சரின்னேன் எல்லாம் இந்த ஹரிஹரன் வேலை.........ஒரு நாள் சாரதா என்னைத் தனியாக வந்து பார்த்துக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள். அவளுடைய காரசாரமான வாக்குவாதம் தான் என் கண்ணைத் திறந்தது. நான் செய்ய விருந்த தப்புக்கு இதோ பிராயச்சித்தம் செய்துவிட்டேன்" என்று ஆவேசமாகக் கூறினார் சர்மா.

சாரதாவின் இதழில் ஒருபுன்னகை அரும்பியது.

'பிராயச்சித்தம் என்று ஒருதடவை கூறினார் சர்மா: எல்லோர் வாயினின்றும் பிராயச்சித்தம் என்ற வார்த்தை வெளிப்பட்டு எதிரொலி செய்தது.

வாசலில் கொட்டு மேளம் தடதடவென்று முழங்கியது.

---

## எழுதும் அன்பர்களுக்கு

"மித்திரன்" வாரப்பதிப்புக்கு விஷயதானம் செய்பவர்கள் காகிதத்தின் ஒரே பக்கத்தில், தெளிவாக "வாரப்பதிப்பு" என்று எழுதியனுப்ப வேண்டும். ஏற்றுக்கொள்ளப் படாத கட்டுரைகளைத் திரும்பப்பெற விரும்புபவர்கள் விலாசமிட்ட தபால் கவர்களையோ, தபால் தலைகளையோ சேர்த்தனுப்பவேண்டும்.

—ஆசிரியர்.



# அன்பின் வடிவம்

சுகி

மூன்றாவது நாளும் பிளாட்பாரத்துக்குப் போக முயற்சிக்கும்போது அந்தச் சடைநாய் 1, 2-ம் வகுப்புப் பிரயாணிகள் மட்டும் போக வரக்கூடிய பாதையை அடுத்து ஒரு பக்கமாக படுத்திருந்தது. மூன்று நாள் அதே நேரத்தில் அதே இடத்தில் அது படுத்திருந்ததைப் பார்க்கவே எனக்கு ஆச்சர்யம் பிறந்தது. ரயில்வே சிப்பந்திகளுடைய நாயாக இருக்கலாமோ என்று நினைத்தேன். மற்ற நேரங்களில் அங்கே, அதே இடத்தில் பார்த்த நினைப்பு எனக்கு எழவில்லை. அதனால் டிக்கட் பரிசோதகரிடம், "யார் நாய் ஐயா?'' என்று கேட்டேன்.

குறும்புக்காரராக இருந்திருந்தால் என் கேள்விக்கு 'நீ தான்'என வள்ளென விழலாம் டிக்கெட் பரிசோதகர். ஆனால் அந்த மனுஷர் ரொம்ப பழகியவர்போல இந்த நாய்தானே என்று அதைச் சுட்டிக் காட்டினார். அவருடைய பேச்சைப் புரிந்துகொண்டதுபோல ஜடை நாய், நாக்கைத் தொங்கவிட்டு, வால் இருந்த இடத்தையாட்டி நன்றி தெரிவித்தது. பாவம் யாரோ அழகிய வாலை ஒட்ட நறுக்கிவிட்டார்கள்.

'ஆமாம். இந்த ஜடைநாய், இங்கே உள்ள உத்யோகஸ்தர்கள் நாயாக இருக்கலாமோ?'

'இல்லை- இந்த நாய் 4-40 வண்டியை எதிர் பார்க்க வந்திருக்கிறது'

'யாரைஎதிர்கொண்டழைக்க இங்கே வந்து காத்து நிற்கிறதாம்?'

டிக்கட் பரிசோதகர் பேச்சை மாற்றி, நீங்கள் மூன்று தினமாக இதே வண்டிக்கு யாருக்காகக் காத்துக்கிடக்கிறீர்கள்? அதுதான் 5-40க்கு வருமென்று தெரியுமே. ஏன் பரக்கப் பரக்க 4-35-க்கு ஓடி வந்தீர்கள்? என்று கேட்டார்.

என் நண்பன் ஒருவன் அதே வண்டியில் வருகிறான். அவனைப் பார்க்கவே அத்தனை ஆவலாக வந்தது. அவன் எனக்கு கடனைத் திரும்பத் தருவதாக எழுதியிருக்காவிட்டால் எதற்காக வருகிறேன்? மூன்றாம் மனுஷனிடம் இதைச் சொல்ல வேண்டாமென மறைத்து 'என் நண்பர் இந்த வண்டியில் வருவதாக தினம் எழுதுகிறார். ஒவ்வொருநாளும் தாம்எதிர்பாராத காரணத்தால் புறப்படவில்லையென மறு நாள் காலை தபாலுக்கு எழுதிவிடுவார். அதனால் தான் இப்படி நடக்கிறது. ஆமாம் இந்த நாய் யாருடையது?' என்று கேட்டேன்.

நாயின் உடம்பிலுள்ள பளபளப்பு, பணக்கார உறவு கொண்டதென்பதை விளம்பரப்படுத்திற்று. தும்பைப்பூ போல வெண்மையான உடம்பு. சுருள் சுருளாக மயிர் கற்றைகள். நன்றிக்குத் தாயகமான வசீகரம் நிறைந்த முகம். அந்நாயின் கண்களிலே கொடூரம் மிதக்கவில்லை. அன்பும் பாசமும் மிதந்தன.

'இந்த நாய் மூன்று நாளல்ல, மூன்று வருஷமாக இப்படி இதே வண்டிக்கு வரும். அந்த 4-40 வண்டி வந்து எல்லோரும் போன பின்பு போய்விடும்'

டிக்கெட் பரிசோதகர் சொன்ன விஷயம் எனக்கு ஆச்சர்யமாக இருந்தது. எதற்காக நாய் அன்றாடம் வரவேண்டும்? புதிர் பிரியாமல் நாயைப் பார்த்தேன்.

'அது வாயில்லாப் பிராணி சார். நான் வாய்உள்ள பிராணி சொல்லுகிறேன்' என்று டிக்கட் பரிசோதகர் சொல்ல ஆரம்பித்தார்.

* * * *

இந்த ரயில்வே ஜங்ஷன்—மன்னிக்கவும்—சந்திப்பு இருக்கிறதே இதற்கு மேற்கே

ஒரு பர்லாங் தூரம் போனால், செங்கற்களில் கட்டப்பட்ட ஓர் அழகிய பங்களா உண்டு. அதிலே இருப்பவர் யாரென உங்களுக்குத் தெரிந்திருக்கலாம். பிரபல டாக்டர் தன்வந்திரி அவர்களுடையபங்களாஅது.அந்த பங்களாவைச்சேர்ந்தது இந்த நாய்.

தன்வந்திரிக்கு தம்முடைய குமாரி சாந்தினிமீது கட்டுக்கடங்காத அன்பு. சாந்தினியை நீங்கள் பார்த்திருக்கமுடியாது. அழகென்றால் மற்றப்பெண்கள் அவளிடம் பிச்சையேற்க வேண்டும். அவள் அந்த ரயிலில் வருகிறாள்என்றால் அதிகப்படியான கூட்டம்—பள்ளிக்கூடத்து மாணவர்கள், மற்றும் அழகுப்பிரியர்கள் சௌடாலாக சட்டையும் கோட்டுமணிந்து பின் தொடருவார்கள். வானத்து நிலவு, வடிவம் பெற்று வந்ததோ என்று தோன்றும்படியான சாந்தம். ஆனால் கண்களை மட்டும் கண்டுவிட்டால், நம்முடைய நெஞ்சம் கூறு பட்டுப் போகும். அத்தனை ஆழமும் கவர்ச்சியும் நிறைந்து மனசை நிலை தடுமாறச் செய்யும் விழிகளை நான் கண்டதில்லை. புன்னகை தவிர வேறு நகையே கிடையாது. — இல்லை ஒரு வளையும், ஒரு சங்கிலியும் உண்டு. அத்தனை அழகு வாய்ந்த பெண்ணை எவன் கைப்பிடிக்கப் போகிறானோ என்று நாங்கள் எதிர் பார்த்தோம்.

டாக்டருக்கு மருமகனாக வந்து சேர்ந்தவனும் ஒரு டாக்டர். அவள் கலியாணம் ஆனதும் ரயில்வே பாஸ் விற்பனையும், பிரயாணிகள் நெருக்கடியும் குறையுமென எதிர் பார்த்தோம். இந்த ஸ்டேஷன் வருமானத்தை எப்படி சரிக்கட்டலாமென்று ஸ்டேஷன் மாஸ்டர் கவலைப்பட்டார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள்.

இங்கேயுள்ள சிப்பந்திகள் தாங்கள் வேறு ஸ்டேஷன்களுக்கு மாற்றல் ஆகக்கூடாதென பிரார்த்தனை வேறு செய்தார்கள். அதோ கீழக் கோடியில் உள்ள ஒரு பிள்ளையார் கோவில் இந்த சாந்தினி பக்தர்களால் பிராபல்ய மடைந்தது;—நடந்ததை ரொம்பவும் வளர்த்தக்கூடாது: முடித்துவிடுகிறேன்.

சாந்தினியை எதிர் கொண்டழைக்க எத்தனையோ பேர் வழிகள் இங்கே காத்து நின்றாலும், இந்த ஜடை நாய் இருக்கிறதே இதுதான் அவள் கண்ணோடு கண்ணைச் சந்திக்கும்.

அந்த மாந்தளிர் கரத்தால் முன்னங்காலால் அவள் பட்டுடையில் விளையாடித்தலையில் அடிவாங்கும். அவள் பரிசாக ஒரு பிஸ்கட் அல்லது ரொட்டித்துண்டு பையில் ஒளித்து வைத்திருப்பாள். இது எம்பிக் குதித்ததும், அதைப் போடுவாள். உல்லாஸமாக அதைக் கவ்விக்கொண்டு அவள் பின்னால் காவற்காரனைப் போல தொடரும்.

இது அன்றாடம் 4–40 க்கு நடைபெறும் சம்பவம். அதாவது அந்த வண்டி சரியான நேரத்துக்கு வருகிற நாட்களில் –அல்லது அந்த வண்டி வருகிற நேரத்தில் நடைபெறும் அன்றாட சம்பவம். மூன்று வருஷத்திற்கு முன் காலையில் காலேஜுக்குப் போவதை நான் பார்த்தேன். தலை நிறைய மல்லிகைப் பூ ஜம்மென்று மணத்தது. இந்தக்காலத்து நாகரிகம் பாட்டிகள், பவுடர் பூச்சு அரை இஞ்சு பூசுகிறார்களே – அவள் பவுடர் பட்டும் படாமலும் போட்டிருப்பது போலவே, தரையில் பட்டும் படாமலும் நடை பயின்று வருவாள், ஸார். அவ்வளவு ஓயில், லாவண்யம்— ஆஹா! நினைத்தாலும் கண்ணை மூடிக்கொண்டு அப்படியே கண்முன் நிற்கிறது அந்த நடை, அந்த மோகனப் புன்முறுவல்



ஆனந்த மயமான சுகந்தம். பட்டுடையின் சலசலப்பு மெல்லிய பூட்சுடைய டக் டக் ஒலி. ஐயோ அழகுக்கு உறைவிடமாக இருந்த சாந்தினிக்கு இப்படி வருமென நான் நினைத்தேனா?

அன்று சாந்தினி கலாசாலை விட்டு ரயில் ஏற வந்த அவசரத்தில் ரயிலின் கதவின் பிடி நழுவி வண்டிச் சக்கரத்தில் அடிபட்டுவிட்டாள். ஏகக் கூட்டம். உடனே டாக்டர் உதவி கோரி அவளை ஒரு ஸ்டெச்சரில் போட்டு அடுத்த ஊரிலுள்ள ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோனார்கள். இன்னார் மகள் என்பதை அறிந்து டாக்டருக்குப்போன் செய்தார்கள். இங்கிருந்து பதினைந்து மைல் தொலைவிலுள்ள ரயில்வே ஆஸ்பத்திரிக்கு மருமகனையும் அழைத்துக்கொண்டு சிட்டாய் பறந்தார் டாக்டர்.

என்ன பயன் ஸார்? எமன் அவள் பக்கத்தில் இருந்துவிட்டான். அடி பலமாகப் பட்டு பிழைப்பது அரிதாகி அங்கேயே இறந்துவிட்டதாகவும்,வீட்டுக்குத் தூக்கிவர இஷ்டப்படாத டாக்டர் அந்த ஊரிலேயே சடங்கை முடித்துக் கொண்டு இரண்டு நாளில் தமது பங்களாவிற்கு வந்து சேர்ந்தார். அன்று முதல் 4-40 வண்டியில் யாருக்கும் உத்சாகமில்லை.

சாந்தினிக்கு ஏற்பட்ட விபத்து, அவள் மரணம், பிடி சாம்பலான பரிதாபம் ஒன்றுமே இந்த ஜடை நாய்க்குத் தெரியாது. எப்படித் தெரியும்? வாயில்லாப் பிராணி. அன்று வந்து பார்த்தது. 4-40 வண்டி லேட்டாக 5-40க்கு வந்தது. ஒவ்வொருபிரயாணியும் போனபின் கடைசியாகப் போன டிக்கெட் இல்லாத பிராணி இது தான்.




"ஏம்பா! "நிஜாம் சரணாகதியடைந்தார்" இது என்ன காலத்தைக் குறிக்கிறது என்று தமிழ் வாத்தியார் கேள்வி கேட்டிருக்கார், அவருடைய போறாத காலம்னு எழுதட்டுமா, இல்லை நல்ல காலம்னு எழுதட்டுமா....?'

அன்றென்ன? மறுநாள், அதற்கு மறுநாள் இப்படி வருஷம் மூன்றாக வந்துகொண்டிருக்கிறது. நாங்கள் விரட்டினோம், அடித்தோம். அது வருவது நிற்கவில்லை.

இதோ இன்று வந்திருக்கிறது. இன்றைய வண்டியில் வருவாள் தனது எஜமானி சாந்தினி என்று ஆவலோடு எதிர்பார்க்கிறது. அவள் வருவாளோ?

* * * * *

டிக்கெட் பரிசோதகர் வேடிக்கையாக ஆரம்பித்து கண்ணீர் சிந்தும் நிலையில் கதையைச்சொல்லி முடித்ததும் நான் பிரமை பிடித்தவன்போல கல்லாய்ச் சமைந்தேன். நாய்க்கு அன்பும் பரிவும் இவ்வளவு இருக்குமா என வியந்தசமயம்..

'ஸார் ஸார், அதோ சட்டென புக்ஸ்டால் அருகே பாருங்கள்,' என்றார்.

நான் பார்த்தேன். குஷாலாக ஒரு வாலிபன் இளம் பெண்ணொருத்தியுடன் சல்லாபித்துக் கொண்டு போனான்.

'சாக்ஷாத் சாந்தினியின் புருஷன் அவன்தான். அவர் அருகே உள்ள அம்மாள் இரண்டாந்தாரம். கலியாணமாகி 2 வருஷம் 8 மாதம் ஆகிவிட்டது.

எங்களை நோக்கி வந்துகொண்டிருந்த தம்பதிகள் சிட்டுக்குருவிகளாய் என் கண்ணில் பட்டனர். அந்த மனுஷன் கண்ணிலே கொஞ்சம் கூட வருத்தமோ பிரிவுத் துயரோ தெரியவில்லை. காலதேவன் மறதியைக் கொடுத்து கவலையை மாற்றலாம்—நாயின் கண்ணிலே, என்ன தெரிகிறது எனப்பார்த்தேன்.

அதற்குள் வண்டி வந்து நிற்கும் ஓசை கேட்டது. நாய் படுத்திருந்தது சலசலவென உடம்பை உலுப்பி சோம்பல் முறித்து ஆசை பிறந்த கண்களோடு ஒவ்வொரு பிரயாணி தாண்டி வருவதையும் கவனித்தது. அதன் பார்வையில் ஏமாற்றமும், அயர்ச்சியும் இல்லை. ஆசையும் அன்பும் இணைந்த உத்சாகத்தோடு பார்த்துக் கொண்டே இருந்தது. நாயினுடைய பார்வையில் ஆழ்ந்து,நான் வந்த காரியத்தை மறந்தேன். வண்டி போயிற்று, நாயும் திரும்பிப் பார்த்து அலுத்த முகத்தோடு போயிற்று.

அன்றும் எனது நண்பன் வரவில்லை. மறுநாள் நான் போனபோது எனக்கு முன்னால் அந்த டிக்கட் பரிசோதகன் பக்கத்தில் அதே ஜடை நாய் படுத்திருந்தது. பார்க்கப்பார்க்க அழுகைபிறந்தது. விசுவாசமும் அன்பும் நிறைந்த பண்புபிராணிக்குத்தான் உண்டு. மனிதன் - மனைவியாக இருந்தாலும் இரண்டுமற்றவன்.

# கதலீபுர நாடகம்



**எஸ். ஜே.**

## அத்தியாயம் 4

"மங்களவில்லா"'வின் வாசலில் குதிரை வண்டி வந்து நின்றது.

"வரணும்! வரணும்! ஹி! ஹி!" என்று பல்லைக் காட்டினார் நடேசய்யர். "குதிரை வண்டிக்குச் சத்தம் நானே கொடுத்துடறேன்! நீங்க கொடுக்க வேண்டாம்!" என்றார்.

"பின்னே யாரு? நானா கொடுக்கப்போறேன்! நீங்கதான் கொடுக்கணும். உங்காத்துப் பெண்ணைப் பார்க்கத்தானே வந்திருக்கிறோம்." என்றார் நெட்டையான ஒரு மனிதர்.

நடேசய்யருக்கு இது பெரிதும் ஏமாற்றத்தை யளித்தது. நெட்டையான மனிதரோடு கூடவே பயந்து நடுங்கிக்கொண்டே ஒரு பையன் குதிரை வண்டியிலிருந்து இறங்கினான்.

"மங்களத்தைப் பார்ப்பதற்கு முன்னாடியே பையன் நடுங்குகிறானே!" என்று நினைத்துக் கொண்டான் சேகரன்.

"சேகரா! மாமா யார் தெரியுமா? திவாகரா பாங்க் மானேஜர்......" என்று வந்தவரை சேகரனுக்கு அறிமுகப்படுத்திவிட்டார் நடேசய்யர்.

"போன மாசம் திவாலாச்சே அந்தப் பாங்க் தானே? தெரியும்! தெரியும்!" என்றான் சேகரன்.

பாங்க் மானேஜர் முகம் சுண்டிப் போயிற்று. "இல்லே ஸார்! மறுபடியும் ஆரம்பிக்கப் போகிறார்கள்! இப்போ 'மணி மார்க்கெட்லே' ஒரு 'க்ரைஸிஸ்' வந்திருக்கு. அதனாலே எல்லா பாங்குகளுக்கும் ரொம்ப கஷ்டமாயிருக்கு!" என்று உணர்ச்சியற்று என்னமோ சொன்னார்.

"ஆமாம், ஸார்! ஆமாம்!" என்று ஆமோதித்தான் சேகரன்.

மாமாவும் கூடவே தலையை ஆட்டி விட்டு சேகரனை விழித்துப் பார்த்தார்.

"மிஸ்டர்...உங்கபேரு என்ன?" என்றான் சேகரன் சங்கோஜப்பிராணியான அந்தப் பையனைப் பார்த்து.

"சோனி" என்று சுருக்கமாகப் பதிலளித்தான் பெண் பார்க்கவந்த பையன்.

ஒருவருக்கும் தெரியாமல் அவனுடைய அப்பா அவனைக் கிள்ளிவிட்டார். "வேங்கடராமன்" என்றான் மறுபடியும்.

"கூப்பிடும் பெயர் வெங்கிட்டுவாக்கும்?" என்றுகேட்டான் சேகரன்.

பையன் நடுங்கும் குரலில், "ஆமாம்!" என்றான்.

எல்லோரும் கூடத்துக்கு வந்து ஜமக்காளத்தில் அமர்ந்து கொண்டார்கள். மங்களம் கதவிடுக்கிலிருந்து பையனை எட்டிப்பார்த்தாள்.

"என்னம்மா இது? சுண்டெலிமாதிரி இருக்கிறானே!" என்றாள் தன் தாயாரிடம்.

"அவா காதிலே விழுந்தா ஏதாவது நெனச்சுக்கப் போரு, உங்கப்பாவை நான் கல்யாணம் பண்ணிக்கொள்ளும்போது அவரும் மூஞ்சூறு போலத்தான் இருந்தார்" என்று பையனுக்குப் பரிந்து பேசினுள் பெண்ணின் தாயார்.

பையனுக்குத் தலையைச்சுற்றிற்று. பல்லாயிரக்கணக்கான கண்கள் அவனையே பார்ப்பது போலத் தோன்றிற்று. உதடு வறண்டது. மார்பு 'படக், படக்' கென்று அடித்துக் கொண்டது. ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக, "சந்திராவதி என்ற படத்துக்கு நல்ல கூட்டம் ஸார்! தரை டிக்கெட் வாங்கவே முடியவில்லை!" என்று சந்திரசேகரனிடம் சொன்னுன். பிறகு சம்பந்தா சம்பந்தம் இல்லாமல்," குதிரைவண்டி டிராமைவிட வேகமாய் ஓடும்; ஆனுல் ரயில் வண்டி குதிரைவண்டியைவிட வேகமாய்ப் போகும்!" என்று ஏதேதோ வாய்க்குவந்ததைச் சொல்லி வைத்தான்.

"ஓகோ! பேஷ்! அப்படியா?" என்று சொல்லிச் சேகரன் அவனை உற்சாகமூட்டினுன். சேகரன் கொஞ்சம் மரியாதைக்காகப் பார்த்துக் கொண்டிருந்தான், இல்லாவிட்டால் அந்தப் பையனை வைத்துக்கொண்டு ஒரு விகடக்கச்சேரி நடத்தியிருப்பான். பிறகு டிபன் சாப்பிடும் போது, "இதே டிபனை ஹோட்டலில் சாப்பிட்டால் இரண்டு ரூபாய் பில் ஆகும், ஸார்!" என்ருன் நடேசய்யரிடம்.

"ஆமாம், ஆமாம்!" என்று சுவாரஸ்யமில்லாமல் தலையை ஆட்டினுர் நடேசய்யர். டிபன் ஆன பிறகு மங்களத்தைப் பாடச் சொன்னுர்.

"கன்றின் குரலைக்கேட்டுக் கனிந்துவரும் பசு போல்" என்று முகாரியில் ஆரம்பித்தாள் மங்களம்.

"அம்மா! மங்களம்! வேறே ராகம் பாடம்மா?" என்ருர் நடேசய்யர்.

"இந்தப் பாட்டு ஏதோ சினிமாவில் கேட்டிருக்கிறேனே!" என்ருன் பையன்.

"எந்த சினிமாவில் ஸார்?" என்று நிண்டிவிட்டான் சேகரன்.

"சங்கீதக் கச்சேரியிலே நீ நாம ரூபமுலகு என்று ஒரு பாட்டுப் பாடுவாளே அது தெரியுமா, ஸார், உங்கப் பெண்ணுக்கு?" பையன் இதை யதார்த்தமாய்த்தான் கேட்டான்.

"அம்மா! பாட்டுப் போறும் என்கிருர். நீ எழுந்திரு!"

மங்களம் எழுந்துகொண்டாள். பையனைத் தகித்துவிடுபவள் போலப் பார்த்துவிட்டுப் போனுள். பையன் நடுங்கிக்கொண்டே தலையைக் குனிந்துகொண்டான்.

"பையனுக்கு ரொம்ப இஷ்டம். பேஷாக முடித்துவிடலாம், ஆனுல் கையில் ஐயாயிரம் கொடுத்துவிட்டு, ஏழாயிரத்துக்குக் குறையாமல் சீர்வரிசைகளைச் செய்யவேண்டும். நேத்திக்கிக்கூட ஒரு 'ஆபர்' வந்தது இதேபோலச் செய்யறேன்னு. நான் இவ்விடத்திய சம்பந்தம் பண்ணிக்கவேணும் என்பதற்காக வேண்டாம் என்று சொல்லிவிட்டேன்."

"நம்மால் அவ்வளவுக்கு முடியாது, ஸார்!" என்று சொல்லிக்கொண்டே பையனை ஏற இறங்கப் பார்த்தார், இந்த அசட்டுக்கு இவ்வளவு விலையா என்று பார்ப்பதுபோல.

"அப்போ நம்மால் முடியாது, ஸார்!............ டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜ் ராமசந்திரய்யர் என்னை விடாப்பிடியாகக் கேட்டுண்டிருக்கார். அவருக்கு நம்ம பையங்கிட்டே ஒரு ஸ்பெஷல் 'இம்ப்ரெஷன்'..........."

"உங்கப் பையங்கிட்டே எல்லோருக்குமே ஸ்பெஷல் இம்ப்ரெஷன்தான் ஸார்!" என்ருன் சேகரன் சிரிப்பைச் சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு.

"அப்போ நடேசய்யர்வாள்! நான் வரட்டுமா? திரும்பிப் போறதுக்குக் குதிரைவண்டிக்கு மூன்று ரூபாய் கொடுத்துடுங்கோ, எங்கிட்டே பிஸினஸ் என்ருல் பிஸினஸ்தான்.........."

"ஏன்ஸார்! அவசரவேலை ஒன்றும் இல்லாட்டா டிராமிலே போங்களேன். நாலணுவோட போகும்" என்று வலுவில் தன்னுடைய யோசனையைத் தெரிவித்தான் சேகரன்.

"சரி! அப்போ நான் வரேன்" என்று விடை பெற்றுக்கொண்டார் 'திவாகரா' வின் மானேஜர், சேகரன் சொன்னதைக் காதில் வாங்கிக் கொள்ளாததுபோல.

பையன் போகும்போது சேகரனிடம் ஏதோ ரகசியமாய்ச் சொல்லிவிட்டுப்போனுன். அவர்கள் போனபிறகு மங்களம் அத்தானைக் கூப்பிட்டு, "அத்தான்! என்ன சொல்ருன் அந்தக் கடன்காரன், என்று ஆத்திரத்துடன் கேட்டாள். அவளை அவன் "நீ நாம" பாடச்சொன்னதனுல் ஏற்பட்ட ஆத்திரம் இன்னும் தணியவில்லை."

"ஒன்றுமில்லை, மங்களம்! உன்னுடைய மேல் வாயில் இரண்டு பற்கள் நீட்டிக்கொண்டிருக்கிறதாம். டாக்டர் சுங் என்பவர் மலிவாகப் பல் பிடுங்குகிருராம். அவரிடம் உன்னையழைத்துக் கொண்டுபோகச் சொன்னுன்.........."

"அப்படியா சொன்னுன்? அவனைப் பாம்பு பிடுங்க!" என்று விரலைச் சொடுக்கினுள் மங்களம். "இன்னும்?"



"சுகேசனி என்று ஒரு தைலம் இருக்கிறதாம். அதை நீ தடவிக்கொண்டால் தலைமயிர் நன்றாக வளரும் என்று சொன்னான். இரண்டு பாட்டிலாக வாங்கிக்கொண்டால் நாலணா கம்மியாம்!''

"அப்பா! ஏதுக்கு அந்தக்கடன்காரனையெல்லாம் இழுத்துண்டு வந்தே?'' என்று எரிந்து விழுந்தாள் மங்களம்.

"அந்தப்பையன் சித்தே "லூஸ்''போல இருக்கு! ஏதாவது சம்பந்தாசம்பந்தம் இல்லாமே பேசறான்!'' என்றார் நடேசய்யர்.

"சித்தே என்ன மாமா? சரியான லூஸ். நான் மட்டும் அவனுடைய அப்பாவாயிருந்தால் நேராகக் குதிரைவண்டியைக் கீழ்ப்பாக்கத்துக்கு ஓட்டச் சொல்லியிருப்பேன்!'' என்றான் சந்திரசேகரன்.

* * * * * *

சேகரன் பி. ஏ. பரீக்ஷை எழுதிவிட்டான் இனிமேல் ஏதாவது வேலைக்குப் போய்த்தான் காலக்ஷேபத்தைக் கவனிக்கவேண்டும் என்றெண்ணினான். நடேசய்யரும் பெண்ணுக்கு எத்தனையோ வரன்களை அலசிப் பார்த்துவிட்டார். வந்த பையன்களில் சிலர் மங்களத்தின் பாட்டைக்கேட்டுவிட்டே தங்கள் பதிலைச் சொல்லிவிட்டார்கள். தாக்ஷிண்யப்பட்ட சிலர் ஊருக்குப் போய் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு எழுதுகிறேன் என்று சொல்லிவிட்டுப் போனார்கள். இப்படியாக வந்த வரன்களெல்லாம் தட்டிப் போயின. நடேசய்யரின் மனைவிக்குக் கவலை அதிகரித்தது. மங்களத்தைக் கல்யாணம் செய்து கொடுத்தால் தான் மனசுக்கு நிம்மதி வரும் போலிருந்தது.

"ஸார், தபால்!'' என்றான் தபால்காரன். சேகரன் அவசரம் அவசரமாகத் தபாலை வாங்கிப் பார்த்தான்.

"நம்ப மங்களம் தனக்குப் பாடறத்துக்குச் சான்ஸ் கொடுக்கச்சொல்லி ரேடியோ ஸ்டேஷனுக்கு எழுதியிருந்தாளோன்னோ, அதுக்குப் பதில் வந்திருக்கு!'' என்றான் சேகரன்.

"என்ன எழுதியிருக்கிறான்?'' என்று ஆவலோடு அம்மாவும், பெண்ணும் சேர்ந்தாப்போல கேட்டார்கள்.

"அடுத்தமாசம் பதிமூணாந்தேதி காலம்பற எட்டுமணிக்குப் பாட சான்ஸ்கொடுத்திருக்கா''

அன்றையதினத்திலிருந்து மங்களம் தினமும் பஞ்சாம்ருதமும் குல்குந்துமாய்ச் சாப்பிட்டாள். அதிகமாய்ப் பேசினால் தொண்டை கட்டிவிடும் என்று எல்லாப்பேச்சையும் குறைத்துக்கொண்டாள். வீட்டில் எல்லோரும் (சேகரனைத் தவிர) அந்த நாளை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

கச்சேரிதினத்தன்று நடேசய்யர் பெண்ணை டாக்ஸியில் அழைத்துக்கொண்டு ரேடியோ ஸ்டேஷனுக்குப்போனார். நடேசய்யரின் மனைவி கல்யாணி அம்மாள் ரேடியோப் பெட்டியின் அருகில் வெகு ஆவலோடு உட்கார்ந்து கொண்டிருந்தார்கள்.

"இப்பொழுது ஸ்ரீமதி மங்களம் அவர்கள் பாடுவார்கள்" என்றது அன்னௌன்ஸரின் குரல். அடுத்தாப்போல், கிரு பயா பாலய சௌரே !" என்று மற்றொரு குரல் தொடர்ந்தது.

"இந்த ரேடியோ ஆபீஸிலே இருக்கிற கடன்காரங்கள் நம்ம குழந்தையின் சாரீரத்தையே கெடுத்துவிட்டார்களே!" என்று சபித்தாள் கல்யாணியம்மாள்.

"அவாமேலே தப்பில்லே மாமி! இந்தரேடியோ வெல்லாமே இப்படித்தான். குரல் மைக்குக்கு நன்றாயிருந்தால் பிரமாதமாக ஒசத்திக்காட்டும் இல்லாவிட்டால் படு மட்டமாகக்காட்டும்" என்று சொன்னான் சேகரன்.

சற்றுநேரத்துக்கெல்லாம் மங்களம் தந்தையுடன் திரும்பிவந்தாள்.

"அத்தான்! என்பாட்டைக் கேட்டயா?"

ஓ! கேட்டேன் என்று சொல்லிக்கொண்டே சேகரன் முகத்தை மறுபக்கம் திருப்பிக்கொண்டான்.

"ரேடியோ ஸ்டேஷன்லே இருக்கிறவா, அம்மா! அடுத்தசான்ஸ் எனக்கு மெயின் டயத்திலே கொடுக்கிறோம்னு சொன்னா!" என்று உற்சாகத்துடன் சொன்னாள் மங்களம்.

"உன்னை அவா பரிகாசம் பண்ணியிருக்கா மங்களம்! நீ அதை நம்பாதே!" என்று அவளுடையஉற்சாகத்தில் மண்ணை வாறிப்போட்டான் சேகரன்.

"அட அதிகப்பிரசங்கி! குழந்தையை உற்சாகப்படுத்தாமே, என்ன பேச்சுப் பேசறே?" என்று கோபித்துக் கொண்டார் நடேசய்யர்.

நாலைந்து தினங்கள் சென்றன. "அன்னிக்கு நான் சொன்னேன் என்று கோவிச்சுண்டேளே, மாமா! இதோ பாருங்கோ! "அமரவாணி" என்ற பத்திரிகையிலே நம்ப மங்களத்தின் பாட்டைப் பத்தி எழுதியிருக்கான்......" என்று வெகு சிரமப்பட்டுச் சிரிப்பை யடக்கிக்கொண்டு அவரிடம் ஒரு பத்திரிகையை நீட்டினான் சேகரன்.

"காலையில் பாடிய ஸ்ரீமதி மங்களத்துக்குக் கொடுத்த நேரம் இன்னும் அரை மணியாவது அதிகமாக இருக்கவேண்டும்'

பேஷ்! நானும் அப்படித்தான் நெனச்சேன்! இவன் நன்னா ரிவ்யூ பண்ணியிருக்கான்......"

"இன்னும் படியுங்கோ, மாமா!"

நடேசய்யர் மேலும் படித்தார்:—"அவருடைய பாட்டு நல்ல பொழுது போக்காக இருந்தது. இதைப்போன்ற விகட சங்கீதக் கச்சேரியை இதுவரைக்கும் நாம் கேட்டதேயில்லை. அபத்தமாகப்பாடுகிற பாடகர்களைப் பரிகசிப்பதற்காகவே இதைப்போன்ற அபத்தமான கச்சேரியை வேண்டுமென்றே ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று நம்புகிறோம். அந்த அம்மாள் தாளம் போடும்போது நம் மண்டையில் அறைவதுபோலவே இருக்கிறது'

"திமிர்காரன்கள்! என்ன குதர்க்கமாகவும், கிண்டலாகவும் எழுதியிருக்கான் பார்த்தயோன்னோ!" என்றாள் மாமி.

"அப்படித்தான் மாமி! அவாகிட்டே சிபார்சு பிடிச்சு விமர்சனம் எழுதச் சொன்னா ஆகா ஓகோன்னு எழுதுவா. இல்லாவிட்டால் இப்படித்தான் ஏதாவது கிறுக்குவா. இப்படித் தமாஷா ஏதாவது எழுதினால்தானே அவா பத்திரிகை போறது?"

"தமாஷுக்கு என்னைத்தான் பார்த்தானே!" என்று அலுத்துக்கொண்டாள் மங்களம்.

இந்தச் சம்பவத்திற்குப் பிறகு நடேசய்யர் பாட்டையே நிறுத்திவிட்டார். அவருக்கும் வெகு நாட்களுக்குப் பிறகுதான் மங்களத்துக்கும் சங்கீதத்துக்கும் அதிகஸௌஜன்யம் கிடையாது என்று தெரிந்தது. பாட்டு வாத்தியாருக்கும் இது ஒரு பெரிய ஆறுதலாக இருந்தது.

மங்களத்துக்கு இத்தனைநாள் கல்யாணமாகாமல் இருந்ததற்குக் காரணமே இந்தப் பாழாய்ப்போன சங்கீதந்தான் என்று நடேசய்யர் மனதார நம்பினார். சங்கீதம் மங்களத்துக்கு ஒரு யோக்யதாம்சமாக இருப்பதற்குப் பதிலாக இருந்த கொஞ்சநஞ்சம் யோக்யதாம்சங்களையும் குலைத்துவிட்டது.

"ஏ நன்றிகெட்ட சங்கீதமே! நீ மங்களவில்லாவை விட்டுப்போ!" என்று அடித்து விரட்டி விட்டார் நடேசய்யர்!

* * * * *

(தொடரும்)




விடியற்காலமானதும் சிவவேதியர் நீராடி நிர்மலராய்ச் சிவபூஜை முடித்து அந்தப் பெருமானுக்குப் பின்புறத்தில் ஒளித்திருந்தார். அன்று வேடர் வந்ததும் சிவலிங்கப் பெருமானுடைய வலக்கண்ணில் இரத்தம் வந்து கொண்டிருந்தது. திண்ணனார், வேட்டையாடி வழக்கம்போல் ஊனமுதும் வாயில்மஞ்சனநீர்த்தமும் தலையில் அன்றலர்ந்த மலருமாய் வெகு விரைவாய் ஓடிவந்தார். பெருமானுடைய கண்ணில் இரத்தம் கண்டதும் மயங்கிப் பதைத்து விழுந்தார்.

எப்படி விழுந்தார்? என்பதைச் சேக்கிழார் தாமும் மயங்கிப் பதறிப் பதைத்துக் காட்டுவது போலக் காட்டுகிறார்:

வந்தவர் குருதி கண்டார்,
மயங்கினார், வாயில் நன்னீர்
சிந்திடக், கையில் ஊனும்
சிலையுடன் சிதறி வீழக்,
கொந்தலர் பள்ளித் தாமம்
குஞ்சிநின்(று) அலைந்து சோரப்
பைந்தழை அலங்கல் மார்பர்
நிலத்திடைப் பதைத்து வீழ்ந்தார்.

[குருதி—இரத்தம். கொந்து அலர்-கொத்தாக மலர்ந்த. குஞ்சி–சிகை. அலங்கல் மார்பர்—அசையும் மாலையையுடைய திண்ணனார்.]

## 24

## காளத்தி நாதர் அளித்த பட்டம்

★

வாயிலுள்ள நீர் சிந்த, கையிலுள்ள ஊன்சிதறவில்லும் விழுந்தது, தலையிலிருந்து மலர்களும் அலைந்து விழுந்தன, திண்ணனாரும் விழுந்துவிட்டார். மெள்ள எழுந்துபோய் இரத்தத்தைத் துடைத்தார், துடைக்கத் துடைக்க அது பாய்ந்துகொண்டே இருந்தது, நிற்கவில்லை. பெருமூச்சுவிட்டு விழுகிறார் மறுபடியும். "யார் இப்படிச் செய்தாரோ?" என்ற கேள்வி உள்ளத்தில் எழுந்ததும் தாமும் திடீரென்று எழுந்து நின்றார்:

எழுந்தனர், திசைகள் எங்கும்
பார்த்தனர், எடுத்தார் வில்லும்

எழுந்தவர் திசை திசை ஓடிப் பார்த்தார்: வில்லை யெடுத்து அம்பையும் தொடுத்தார். மலைப் பக்கங்களில் நெடுந்தூரம் ஓடிப் பார்த்தார். வேடர்களையும் காணவில்லை. விலங்குகளையும் காணவில்லை.

வேடரைக் காணார், தீய
விலங்குகள் மருங்கும் எங்கும்
நாடியும் காணார், மீண்டும்
நாயனார் தம்பால் வந்து
நீடிய சோகத்தோடு
நிறைமலர்ப் பாதம் பற்றி
மாடுறக் கட்டிக் கொண்டு
கதறினார், கண்ணீர் வார.

[மருங்கும்-பக்கத்திலும், நாயனார் தம்பால்-சிவபிரானிடத்தில். மாடு உற-(மேனியின்) புறமெல்லாம் பொருந்த.]

ஆண்டவனைக் கட்டிக்கொண்டு. 'ஐயனே! பரமனே! உனக்கு என்ன வந்து விட்டது? அப்பா! என்ன செய்வேன்?' என்றெல்லாம் புலம்பினார்:

'பாவியேன் கண்ட வண்ணம்
பரமனார்க்(கு) அடுத்த
தென்னோ?
ஆவியின் இனிய எங்கள்
அத்தனார்க்(கு) அடுத்த
தென்னோ?
மேவினர் பிரிய மாட்டா
விமலனார்க்(கு) அடுத்த
தென்னோ?
ஆவதொன்(று) அறிகிலேன்
யான்,
என் செய்கேன்?' என்று
பின்னும்-

[அத்தன்—தந்தையார், விமலனார்-குற்றம் இல்லாதவர்.]

இப்படிக் கதறிக் கதறி அழுது, 'என்செய்தால் தீருமோ?' என்று

காடெல்லாம் சுற்றிப் பச்சிலைகளைப் பறித்து வந்தார். பிசைந்து பிசைந்து கண்ணில் பெய்து பார்த்தார். இரத்தம் நிற்கவில்லை. புண்களை ஆற்றிக் கொள்வதற்கு வேடர்கள் அறிந்திருந்த அபூர்வ மூலிகைகளும் மருந்துகளும் பயன்படாமல் போகவே, 'இனி என் செய்வது?' என்று சிந்தித்து நின்றார் திண்ணனார்.

அப்போது 'ஊனுக்கு ஊன்' என்ற ஒரு பழமொழி நினைவுக்கு வந்தது. உடனே 'அப்படித்தான் செய்து பார்க்கலாமே' என்று திண்ணனார் தம்முடைய வலது கண்ணை அம்பினால் தோண்டி எடுத்துப் பெருமான் கண்ணில் அப்பினார். இரத்தம் நின்றுவிட்டது. திண்ணனாருடைய மகிழ்ச்சி வெறியைச் சேக்கிழார் காட்டக் காண்போம்.

நின்றசெங் குருதி கண்டார்;
நிலத்தினின்(று) ஏறப் பாய்ந்தார்;
குன்றென வளர்ந்த தோள்கள்
கொட்டினார்; கூத்தும் ஆடி,
'நன்றுநான் செய்த இந்த
மதி,என நகையும் தோன்ற
ஒன்றிய களிப்பி னாலே
உன்மத்தர் போல மிக்கார்

[மதி—(இங்கே) புத்தியோடு செய்த செய்கை, ஒன்றிய-கூடிய; பொருந்திய. உன்மத்தர்-பித்துக் கொண்டவர்.]

திண்ணனாருடைய பக்திப் பெருமையைச் சிவபெருமான் சிவவேதியருக்கு இன்னும் காட்ட விரும்பினார். பெருமானின் மற்றக் கண்ணிலும் இரத்தம் பெருகுது. திண்ணனாரோ அஞ்சவில்லை. கைகண்ட மருந்துதான் இருக்கிறதே! கண் கண்ட மருந்தும் தான்! ஆனால் தமது இடது கண்ணையும் தோண்டிவிட்டால் இறைவன் கண் இருக்கும் இடத்தைக் காணமுடியாதே. இந்த ஒருகவலை தான் திண்ணனாருக்கு. இதற்கும் ஓர் ஆலோசனை தோன்றிவிட்டது:

எண்ணுவார், தம்பிரான் தன்
திருக்கண்ணில் இடக்கால் ஊன்றி,
உள்நிறை விருப்பி னோடும்
ஒரு தனிப் பகழி கொண்டு
திண்ணனார் கண்ணில் ஊன்றத்,
தரித்திலர் தேவ தேவர்

[தம்பிரான்—இறைவன். பகழி—அம்பு. தரித்திலர் தேவ தேவர்—தேவாதி தேவரான சிவபிரானால் பொறுக்கமுடியவில்லை.]

தமது இடக்கண்ணையும் தோண்டத் திண்ணனார் அம்பை ஊன்றியதும், சிவபெருமானுக்கும் 'சோதனை போதும், போதும்' என்று தோன்றிவிட்டது. தடங் கருணைப் பெருகடல் அல்லவா?

செங்கண்வெள் விடையின் பாகர்,
திண்ணனார் தம்மை ஆண்ட
அங்கணர், திருக்கா ளத்தி
அற்புதர் திருக்கை' அன்பர்
தம்கண்முன் இடக்கும் கையைத்
தடுக்குமுன் றடுக்கு நாக
கங்கணர் அமுத வாக்கு,
'கண்ணப்ப! நிற்க' என்ற.

[வெள்விடை — வெள்ளையான ரிஷபம். அங்கணர் — அழகிய அருட்கண்ணையுடையவர். இடக்கும்—தோண்டும், நாககங்கணர்—பாம்பைக் கங்கணமாக அணிந்துள்ள சிவபிரான்—என்ற—என்றது.]

'கண்ணப்ப! நில்லு' என்று சொல்லிக்கொண்டே சிவபெருமான் திண்ணனார் கையைத் தம் கையால் பிடித்துத் தடுத்துவிட்டார். திண்ணனாருக்குக் 'கண்ணப்பர்' என்ற பெயர் கொடுத்தவர் முக்கண்ணப்பரே. கண்ணையும் அப்பத் துணிந்து பரீட்சையில் வெற்றி பெற்றதால் இந்தப் பட்டம். கண்ணப்பரின் வெற்றிக்குச் சாட்சிகளும், இந்தப் பட்டமளிப்பு விழாவைக் கண்டு களித்தவர்களும் சிவவேதியரோடு பிரமன் முதலான தேவர்களும் வேதங்களுமே யாவர்:

கானவர் பெருமா னார்தம்
கண்இடந்(து) அப்பும்போதும்
ஊனமு(து) உகந்த ஐயர்
உற்றுமுன் பிடிக்கும் போதும்,
ஞானமா முனிவர் கண்டார்;
நான்முகன் முதலா யுள்ள
வானவர் வளர்பூ மாரி
பொழிந்தனர்மறைகள் ஆர்ப்ப.

[மறைகள் — வேதங்கள். ஆர்ப்ப—ஆரவாரஞ்செய்ய.]

இந்த அரும்பெருங் காட்சி கண்ட சிவகோசரியார் என்ற, சிவவேதியர் — ஞானமாமுனிவர் —கண்ணப்பரின் ஓதாதுணர்ந்த உயர் ஞானமும் அது பெற்ற பேறும் கண்டு களிக்கும் பேறு பெற்றார். அந்நிலையில் கண்ணப்பர் கையைப் பிடித்துக்கொண்ட முக்கண்ணப்பர் பேரருள் புரிந்தார். நமது அன்புத் தொண்டருக்கு, ஞானத்தொண்டருக்கு முன்பாகவே,

பே(று) இனி இதன்மேல் உண்டோ?
பிரான்திருக் கண்ணில் வந்த
ஊறு கண்(டு) அஞ்சித் தம்கண்
இடந்(து)அப்ப உதவும் கையை
ஏ(று) உயர்த் தவர்தம் கையால்
பிடித்துக்கொண்(டு)' என்வலத்தில்
மாறிலாய்! நிற்க' என்று
மன்னுபே ரருள் புரிந்தார்.

[ஏறு உயர்த்தவர்-ரிஷப கொடியையுடைய சிவபெருமான். வலத்தில்–வலப்பக்கத்தில். மாறு இலாய்-மாறு இல்லாத அன்பனே.]

திண்ணனார் கண்ணப்பரான இக்கதை வீரர் அதி வீரரான பக்திக் கதை. இக்கதையை நக்கீரதேவர் என்ற [சிவ நேசர் 'திருக் கண்ணப்ப தேவர் திருமறம்' என்ற தமது பிரபந்தத்தில் சுருக்கமாக கூறியுள்ளார். அதுவே சேக்கிழார் சுவாமியின் கண்ணப்ப நாயனார் புராணத்திற்கு வித்தென்று கருதலாம்.



கண்ணப்பர் — என்ன அற்புதமான பெயர்! என்ன அற்புதமான— பொருள் பொதிந்த கதை! இது தமிழ்நாட்டின் பக்திப் பெருங் கதைகளில் ஒன்று. காளத்தி வேடரின் வீரம் நிறைந்த அன்பு நெறியைக் காளத்திநாதர் வைதிகர்களின் ஆசார நெறியைக் காட்டிலும் அதிகமாய்ப் போற்றினார். 'ஆசாரத்தைவிட முக்கியமானது அன்பு; அன்பின் கனி தியாகம்' என்பது கதையின் உட்பொருள். திருக்காளத்தி என்ற காளஹஸ்தி சென்று காளத்திநாதரை வழிபடுகிறவர்கள், காளத்திவேடரான கண்ணப்பர் கதையையும் அதன் உட்பொருளையும் சிந்திக்கவேண்டும்; சிந்தித்துச் சிந்தித்து உருகவேண்டும். உருகி உருகிக் காளத்தி நாதரையும் காளத்திவேடரையும் வழிபட வேண்டும்.

சித்தூர் ஜில்லாவில் எம். எஸ். எம். ரயில்பாதையில் காளஹஸ்தி ஒரு பிரசித்தமான யாத்திரை ஸ்தலம் என்பதைப் பூமிசாஸ்திர பாடத்தின் மூலமாகப் பள்ளிப் பையன்களும் அறிவார்கள். ஊரும் கோயிலும் இயற்கை யழகுகளுக்கிடையே அமர்ந்திருக்கின்றன. பொன் முகலியாறு (வடமொழியில் ஸ்வர்ணமுகி) ஊரின் ஒரு பக்கத்திலே ஓடுகிறது. மறுபக்கத்திலே குன்றுகள்—ஒன்றின்மேல் ஒன்றாகவும் தொடர்பாகவும் காணப்படும் குன்றுகள். பெரிய கோவிலும் கோபுரங்களும் ஊரை அழகு செய்கின்றன—ஆனால் இக் காளத்தி நாதர் கோயிலன்று கண்ணப்பர் வழிபட்டது!

அந்தக் கோயிலையும் காளத்தி நாதரையும் தரிசிக்கவேண்டுமென்றால் இப்போதுள்ள கோயிலை அடுத்திருக்கும் ஒரு குன்றின் உச்சியில் ஏறிப் போகவேண்டும். அங்கே பரந்த மேட்டுநிலத்தில். ஒரு சிறு கோவில் இருக்கிறது இப்போது ஒரு பெரிய ஆலமரத்தின் கீழ் இருக்கிறது. இன்னும் அழகாய் இருக்கிறது. இக் கோவிலில் உள்ள லிங்கம் தான் கண்ணப்பர் வழிபட்ட காளத்திநாதர் 'குடுமித்தேவர்' கண்ணப்ப நாயனாரின் உருவம் அமைந்த மற்றொரு சிறு கோயிலும் பக்கத்திலே காணப்படுகிறது.

கண்ணப்பர் காலத்தில் காளஹஸ்தியும் இதையடுத்துள்ள குன்றுகளும் நெடுந்தூரம் வரையுள்ள பிரதேசங்களும் காடுகளாயிருந்தன. அந்த மலைக்காடுகளின் ஒரு பகுதியாகத்தான் வேடர்களின் பொத்தப்பிநாடும் முக்கிய ஊரான உடுப்பூரும் இருந்திருக்க வேண்டும்.

* * * * *

**வீ**ரர் வழிபாடு நம்மையும் வீரராக்கும் என்கிறார்கள். அதி வீரரான கண்ணப்பரின் வழிபாடு நம்மையும் பக்தராகவும் தியாக புருஷராகவும் மாற்றிவிட இந்நாளிலும் அவசியமானதுதான். ஆம், பக்தியையும் தியாகத்தையும் காலத்திற்கு ஏற்றபடி புதிய புதிய வாழ்க்கைத் துறைகளிலும் பிரயோகிக்கக் கூடுமல்லவா?



# பெண்மை, அழகு, நாகரிகம்

ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்

## 3

## சிறுவரும் ரஸிக்கும் தீபாவளிப் பாட்டு

★

‘என்ன தீபாவளி வேண்டியிருக்கிறது? சிறுவர் சிறுமியர் சீனாவெடி, பட்டாசு, மத்தாப்பு முதலியவற்றைக் கொளுத்திப் புகைத்துத் தள்ளுகிறார்கள். ஆகாசவாணம் விடுகிறார்கள், “அதோ அப்பன் தேடிய பணம் ஆகாசம் போகுது பார்” என்று மகிழ்வதுபோலே!’ என்று சொல்லிக்கொண்டே வந்தாள் மிஸ். ஸரோஜா. பி. ஏ.

நான் பதில் சொல்வதற்குள்ளே சிறுவன் ராமு பாடிக்கொண்டு வந்தான்:

**பண்டிகை தீபாவளிப்**
**பண்டிகையாம்—இந்தப்**
**பாரத நாட்டுக்கோர்**
**பண்டிகையாம்.**

உடனே ஸரோஜா என்னை நோக்கி, ‘என்னம்மா! உன்பிள்ளை கவி கட்டுகிறான். தமிழுக்கு ஆஸ்தான கவிராயரைத் தேர்ந்தெடுக்க வேணுமென்று சென்னை அரசாங்கம் சிரமப்படுகிறதாம்; ஆராரோ கமிட்டி மெம்பர்களையெல்லாம் பிடித்துப் போட்டிருக்கிறார்களாம், ஆஸ்தான கவிராயரை எப்படியாவது பிடித்துப் போட்டுவிட வேணுமென்று. இந்தப் பிள்ளையை நியமித்துவிட்டால் போதுமே’ என்று பிரசங்கம் செய்யத் தொடங்கிவிட்டாள்.

‘உன்னைக் கமிட்டியில் போட்டிருந்தால் அல்லவா நீ சிபார்சு செய்யமுடியும்?’ என்று நான் பதில் சொல்வதற்குள், ராமு எங்கள் பேச்சை மூழ்கடிக்கும் குரலிலே,

**தண்டிகை மன்னவர், ஏழை**
**எளியவர்**
**சந்தோஷம் கொண்டாடும்**
**பண்டிகையாம்**

என்று பாடினான், தனக்கே பிரத்தியேகமான ஒரு ராகத்தில்.

அவன் பாடி நிறுத்தியதும்.

ஸரோஜா சொன்னாள்: ‘மன்னவர்களும் ஏழை எளியவர்கள் ஆகவேண்டியதுதான். “தீபாவளி குளிக்கிறது” என்றால் அது தானே? பாப்பராகிவிட்டவனைத் “தீபாவளி குளித்துவிட்டான், திவாலாகிவிட்டான்!” என்று சொல்லுகிறார்களே; இப்படி ஏழையாக்கும் பண்டிகையை எப்படிச் சந்தோஷம் கொண்டாடும் பண்டிகையென்று சொல்லலாம்?’

அதற்கு நான், தீபாவளிப்பண்டிகையென்றால் அப்படியெல்லாம் ஆடம்பரச்செலவு செய்யவேண்டுமென்று யார் சொன்னது? அரசனும் கொண்டாடலாம், ஆண்டியும் கொண்டாடலாம் அவரவர் தகுதிக்குத் தகுந்தபடி. “பாரத நாட்டுக்கு ஓர்பண்டிகை” என்றல்லவா கவிமணி பாடியிருக்கிறார்? என்று பதில் சொன்னேன்

‘கவிமணியா? நான் ஏதோ சிறு பிள்ளைப்பாட்டு என்றல்லவா நினைத்துவிட்டேன்? யாரம்மா அந்தக் கவிமணி?

நான் பதில் சொல்வதற்குள் ராமு மறுபடியும் பாடத் தொடங்கி,

**ஆண்டிலோர் தீபா**
**வளியாமடா—**
**அதை ஆண்டியும்**
**கொண்டாட வேண்டுமடா**

என்றான். நான் சொன்னேன்: ‘ஆம். அரசன்முதல் ஆண்டிவரை இமயம்முதல் குமரிவரை அனைவரும் கொண்டாடவேண்டிய பண்டிகை இது. இத்தகைய பண்டிகைகள் எல்லாரையும் ஒற்றுமைப் படுத்தும்; நாட்டில் ஒருமை யுணர்ச்சி உண்டாக்கும். உதாரணமாக தீபாவளிப் பண்டிகை அஸ்ஸாம் மாகாணக் கதையிலிருந்து தோன்றியிருக்கவேண்டும். நரகாசுரன் அங்கேதான் இருந்தானாம். நரகசதுர்த்தசி தானே தீபாவளி? வாழ்க்கையை நரகமாக்கிய நரகாசுரனை வதஞ்செய்து மக்களுக்குச் சுதந்திரம் அருளினார் என்பது கதையின் ஸாரம்.........’

நான் பேசி முடிப்பதற்குள் ஸரோஜா குறுக்கிட்டு, ‘ஓஹோ, பண்டிகையிலும் வடநாட்டின் ஆதிக்கமா?’ என்று கேட்டாள்.

‘அப்படி ஒன்றும் இல்லையம்மா! தீபாவளிப்பண்டிகை வடநாட்டிலிருந்து வந்ததென்றால், நவராத்திரி பண்டிகை நமது தென்னாட்டிலிருந்து போனதுதானே!’ என்றேன்.

‘அது எப்படி? நவராத்திரி என்ற சொல்லே வடமொழியல்லவா?’

‘வடமொழி வடநாட்டுக்கு மட்டுமா உரியது? அது இந்தியாவின் பொதுமொழி. நவராத்திரி மகிஷாசுரமர்த்தனியின் கதையல்லவா? மகிஷாசுரபுரம் மைசூர்தான். தீபாவளி அஸ்ஸாம்–கதையென்றால் நவராத்திரி மைசூர்க்கதை. தீபாவளி வடக்கேயிருந்து தெற்கே வந்ததென்றால் நவராத்திரி தெற்கேயிருந்து வடக்கே போயிருக்கிறது. இதனால் வடநாட்டிலே தென்னாட்டின் ஆதிக்கமுமில்லை; தென்னாட்டிலே வடநாட்டின் ஆதிக்கமும் ஏற்பட்டு விடவில்லை.

**உற்றார் உறவினர் யாவருமே**
**—கூடி**
**ஒன்றாக உண்டிடும் நாள்**
**இதடா**

என்று கவிமணி பாடுகிறாரே, இது பண்டிகையின் ஒரு பெரும் பயன். துயரங்களை மறந்து ஏழைகளும் “வற்றாதசெல்வம்படைத்த” உணர்ச்சியுடன் பண்டிகை நாளிலாவது வாழ்க்கையை அனுபவிக்

கிறார்களல்லவா? என்று நான் தோழியிடம் உத்ஸாகமாய்ப் பேசினேன்.

மறுபடியும் 'யாரம்மா கவிமணி?' என்று சரோஜா கேட்டாள். ஆனால் 'வாழ்க்கை' என்று நான் சொன்னதைக் கேட்டதும் பிள்ளை ராமு,

வாழத் தயங்கும்இக் காலத்திலே துளி-
வாழ்வை அளித்திடும் நாள் இதடா
ஏழைக் கிரங்கி நரகாசுரன் முன்னம்
ஈசனை வேண்டிய நாள்இதடா

என்று உரக்கப் பாடினான்.

'தீபாவளிப் பண்டிகை கொண்டாடுவதற்கு இது ஒரு நல்ல காரணம்தான். ஆனால் யார் அந்த நரகாசுரன்? எதற்காக திராவிட அரசர்களை அசுரர்கள் என்று பரிகசிக்க வேண்டும்?' என்று கேட்டாள் சரோஜா.

'நரகாசுரன் திராவிடனுமில்லை, ஆரியனுமில்லை. இது என்ன சரித்திர விநோதம்—சரித்திர விபரீதம்? இந்த ஆரிய திராவிட விவகாரங்களெல்லாம் பெரும்பாலும் அபத்தக்களஞ்சியம்தான். தேசிய விரோதிகள், காங்கிரசுக்கும் காந்திக்கும் கட்டிவிட்ட கதைகளை நீயும் நம்புகிறாயா? கிருஷ்ணன் அன்புக்கடவுள், வாழ்க்கையை அன்பு மயமாக்கி, இன்ப மயமாக்கி இவ்வுலகிலேயே பரமபத ராஜ்யத்தை அமைத்துக்கொள்ள வழி காட்டுகிறான், கீதை வாயிலாகவும், தன் திவ்ய சரித்திரங்களின் மூலமாகவும், கண்ணனுக்கு எதிரியான நரகாசுரன் அன்பின் பகைவன், உலகத்தைக் கொடுமையாலும் கொடுங்கோன்மையாலும் நரகமாக்கப் பார்த்தவன். எதற்காக நரகாசுரன், ராவணன், சூரபத்மன் முதலான பரம துஷ்டர்களையெல்லாம் தமிழர்களாகிய நாம் நம் முன்னோர்களென்று சொல்லிக்கொள்ளவேண்டும்?' என்றேன் நான்.

ராமுவுக்கு இந்தப் பிரசங்கம் ரஸிக்கவில்லை. அவன் தன் தோழனை சோமுவையும் வாசலிருந்து அழைத்துக்கொண்டு வீட்டுக்குள்ளே ஓடிப் போனான். இருவரும் இட்டலிகளை இரண்டு தட்டுகளில் எடுத்துக் கொண்டு எங்கள் பக்கமாக வந்தார்கள். வரும்போதே சோமு.

இட்டலி வீரர்தென் இந்தியராம்- என்ப(து)
இன்று நாம் காட்டி விடுவோமடா!

என்று பாடிக்கொண்டே இட்டலி சாப்பிடத் தொடங்கினான். உடனே ராமு சிரித்துக்கொண்டே,

சட்டினி நண்பன் துணையிருக்க- —அதில்
சந்தேகம் உண்டோ? நீ சொல்வாயடா!

என்று சொல்லிக்கொண்டே இட்டலித் துண்டுகளை நிறையச் சட்டினியில் தோய்த்துச் சாப்பிட ஆரம்பித்தான்.

'அடே, உடம்புக்கு ஆகாது, அவ்வளவு காரம் சாப்பிடலாமா?' என்றேன் நான். அவனோ என்னை லட்சியம் செய்யாமலே தன் நண்பனை நோக்கி, 'இட்டலி வீரா!' என்று கூப்பிட்டான். அந்த நண்பன் இவனை, 'சட்டினி நண்பா!' என்று அழைத்து,

சட்டினி நண்பன் துயிணைருக்க —அதில்
சந்தேகம் உண்டோ? நீ சொல்வாயடா!

என்று பாடினான்.

'சட்டினி-நண்பன் பொல்லாத ஆசாமியப்பா; அடுத்துக் கெடுக்கும் நண்பன்! நாக்கு ருசியென்றும், போஜனக் குறடாவென்றும் சொல்லிக்கொண்டு சபலத்தால் பிள்ளைகள்......' என்று நான் சொல்லிக்கொண்டிருக்கும் போதே பிள்ளைகள் இருவரும் வெளியே போய்க் காக்கைகளுக்கும் இட்டலித் துண்டுகளைப் போட்டுத் தாங்களும் தின்றுகொண்டிருந்தார்கள். 'அந்த விசேஷமான பந்தி போஜனத்தைப் பாரம்மா!' என்று ஸரோஜா எனக்குக் காட்டினாள்.

ஸரோஜாவின் குரல் கேட்டு ராமுவும், சோமுவும் ஒருமித்த குரலில்,

காக்கை குருவி எங்கள் ஜாதி!

என்று பாடினார்கள்.

'ஏன் அத்தனை இட்டலிகளை எடுத்து வந்து வீணாக்குகிறாய் ராமு?' என்று நான் கேட்டேன். அவன் என்னைப்பாராமலே சோமுவைப் பார்த்தவண்ணம்.

அல்லும் பகலும் உழைப்பதெல்லாம்—வயி
றாரப்புசிப்பதற்கு அல்லவோடா?

என்று ஒரு கேள்வி போடுவது போல் பாடினான்.

சோமு காக்கைகளுக்கு இன்னும் சில இட்டலித் துண்டுகளைப் போட்டுக்கொண்டே,

வாடி வயிற்றுக்(கு) ஒன்று ஈயாத-லோபிக்(கு) இவ்
வையக வாழ்வேதும் உண்டோடா?

என்று ராமுவைக் கேட்பது போல் பாடினான்.

இட்டலி காலியானதும் அவர்கள் கைகோத்தவண்ணம்,

தேடிச் செலவுசெய் யும்பொருள்- நம்பொருள்
சேர்த்துவைக் கும்பொருள் யார் பொருளோ?

என்று பாடிக்கொண்டே எங்களிடம் வந்தார்கள். ஸரோஜா 'என்னம்மா! வேதாந்தம் பேசுகிறார்களே! என்று என்னிடம் சொல்லிவிட்டுக் குழந்தைகளை முத்தமிட்டாள்.

இஷ்டமான பாடல் பாடுவோமே- நல்ல
இன்பக் கதைகளைச் சொல்லுவோமே

என்று பாடிக்கொண்டே ராமு ஓடிப் போக, அவனைத் தொடர்ந்து சோமு,

எங்கே யிருந்துநாம் வந் தோமோ? இனி
எவ்விடம் சென்றுதான் சேருவமோ?

என்று பாடிக்கொண்டே தானும் ஓடினான்.

அப்போது ஸரோஜா, 'கவிமணி யாரென்று நான் இரண்டு தரம் கேட்டேனே' என்று ஞாபகப் படுத்தினாள். அதற்கு நான், 'பாரதிக்குப்பின் உண்மையான கவித்திறம் வாய்ந்தவர்: இன்று உயிரோடு இருக்கும் கவி. திருவாங்கூர் ஸமஸ்தானத்தை இப்போது சேர்ந்ததும், இனிமேல் தமிழகத்தைச் சேரக்கூடியதுமான நாஞ்சில் நாட்டுக் கவி' என்று பதில் சொன்னேன். உடனே ஸரோஜா 'இவரை ஆஸ்தான...' என்று சொல்ல ஆரம்பித்ததும் நான் வாயைப் பொத்தி, 'உஸ் சத்தம் போடாதே. கமிட்டியல்லவா முடிவு செய்யவேணும்' என்றேன்.

# ஐ. நா. வில் பிரசங்கமாரி பொழிந்த பிரதிநிதிகள்.



பாரிஸில் தற்சமயம் கூடியிருக்கும் ஐ. நா. பொதுச் சபையில் இதுவரை பேசியிருக்கும் பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் சிலரை இப்படம் காட்டுகிறது. (மேல்புறம் இடது கோடியிலிருந்து சுற்று வட்டம்) டாக்டர் சியாங் (சீனு) யுவான் டெல்பாஸ் (பிரான்ஸ்) டாக்டர் ரிப்னிகர் (யுகோஸ்லாவியா) ஸெயிண்ட் லாரியன்ட் (கானடா) ஸ்ரீமதி பண்டிட் (இந்தியா) டாக்டர் வில்பன் (யுகோஸ்லாவியா) டாக்டர் பி. பி. பிள்ளை (இந்தியா) பாட்டம்லீ (பிரிட்டன்) டியூக்ஸ் (ஹைடி) ஸ்ரீமதி ஸ்கார்ப்பரோ (லைபிரியா) டாக்டர் ஜென்ஸ்ஸப் (அமெரிக்கா) டாக்டர் ஆர்ஸ் (ஆர்ஜண்டினு) டாக்டர் பான்ஸ் (ஈக்வடார்) கிராமிகோ (ரஷ்யா) டாக்டர் கூ. (சீனு) கர்னல் ஹாட்க்ஸன் (ஆஸ்திரேலியா)



# மாதர் மகா சபை

'குங்குமம்'

'சரோஜாவையும் அவளுடைய அகமுடையானையும் கோவிலில் வைத்துத்தான் வணங்க வேண்டும்' என்று சொல்லிக் கொண்டே ருக்குவின் அகத்துக்குள் நுழைந்தாள் சாந்தா.

'நீங்கள் வைத்து வணங்குவதைப் பற்றி எங்களுக்கு ஒருவித ஆட்சேபணையுமில்லை. மூலஸ்தானத்தில் ஒரு மின்சார விசிறிக்கு மாத்திரம் ஏற்பாடு செய்து விடுங்கள்,' என்றாள் சரோஜா.

'அப்படியே ஒரு கோவில் டாக்டருக்கும் ஏற்பாடு செய்துவிடுவது நல்லதில்லையா?' என்றாள் பானு.

'ஆமாம், ஆமாம். 'வேளை கெட்ட வேளையில்' சர்க்கரைப் பொங்கலையும், புளிஹோரையையும் 'அமுது செய்துவிட்டு' யாரால் வயிற்று வலியைத் தாளமுடியும். ஒரு டாக்டரும் அவசியம் வேண்டியதுதான். அதுவும் எங்கள் அகத்துக்காரருக்கு சர்க்கரைப் பொங்கல் என்றால், அப்படிப்பட்ட இஷ்டம். அளவு தெரியாமல் சாப்பிட்டு வைத்துவிட்டு, எல்லோரும் கோவில் கதவைப் பூட்டிக்கொண்டு போன பிறகு எங்கே, எந்த டாக்டரைத் தேடிக்கொண்டு 'ஓடுவது? கையோடு ஒரு டாக்டர் இருக்க வேண்டியதுதான். இன்னொரு நிபந்தனையும்கூட. காலையிலும் மாலையிலும் தலைக்கு ஸ்டிராங்காக ஒரு கப் காப்பி அமுது செய்வதற்கும் ஏற்பாடு செய்தாகவேண்டும்,' என்றாள் சரோஜா.

'ஆமாம். ஆமாம். எது இருந்தாலும் இல்லாவிட்டாலும் அது இல்லாமல் முடியுமா?' என்றாள் விமலா.

'உங்கள் குறும்புத்தனம் மாத்திரம் போகிறதில்லையே. எதிலோ ஆரம்பித்து எதிலோ கொண்டு முடிக்கவேண்டியது. பிரமாத ஹாஸ்யம் பேசிவிடுவதாக எண்ணம். அதற்கென்று பேசுகிறதென்றால் எனக்கு மாத்திரம் பேசத்தெரியாதா என்ன? ஏன், பெருமாள் தீர்த்தத்துக்குப் பதிலாக காப்பிவினியோகம் செய்தால் கோவிலை இரண்டு வேளையும் சுற்றுகிற பேர்வழிகள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் தெரியுமா?' என்றாள் ருக்குவின் மாமியார்.

எல்லோரும் 'கொல்' என்று சிரித்துவிட்டார்கள்.

'ஏது, மாமிக்கும் குஷி பிறந்துவிட்டது போலிருக்கிறது' என்றாள் பானு.

'அதெல்லாம் கிடக்கட்டும். நீ சொல்லவந்த விஷயத்தைச் சுற்றி வளைக்காமல் சொல்' என்று சாந்தாவைப் பார்த்துக் கேட்டாள் ருக்குவின் மாமியார்.

'சென்றவாரம் பேசிக்கொண்டிருக்கும்போது சரோஜாவின் அகமுடையான் கிராமத்தில் வீடு வாங்கினதைப் பற்றி அதற்கு அவ்வளவு அசட்டுப் பட்டம் கட்டினீர்கள்? சொந்தத்தில் வீடு இல்லாமல் பட்டணத்தில் 'ஜம்பமாக' க் குடித்தனம் செய்கிறவர்கள் எவ்வளவு கஷ்டத்துக்கு உள்ளாக வேண்டியிருக்கிறது என்பதற்கு நேற்று பிரத்யட்ச உதாரணம் கிடைத்துவிட்டது. அதைப் பார்த்த பிறகும் மனிதன் சொந்தத்தில் ஒரு வீட்டிற்கு ஏற்பாடு செய்யவில்லையென்றால் அவனை மனுஷ்யஜாதியிலேயே சேர்ப்பதற்கில்லை,' என்றாள் சாந்தா.

'ஏன்? வீட்டின் சொந்தக்காரர் திடீரென்று வெளிக்கிளம்பி விட்டாராக்கும்?' என்றாள் ருக்குவின் மாமியார்.

'அதுதான் தினமும் ஸர்வ ஸகஜமாகப் போய்விட்ட விஷயம். அதுகூட அவ்வளவு கஷ்டமாகத் தெரியவில்லை. என்னமோ பணம் செலவானால் ஆகிறதென்று ஹோட்டலில் ஒரு ரூம் ஏற்பாடு செய்துகொண்டு கொஞ்ச நாளைக்கு இருந்து விடலாம். நேற்று நடைபெற்றது மகா பயங்கரமான விஷயம்,' என்றாள் சாந்தா.

'என்னடி அது அப்படிப் பட்ட பயங்கரமான விஷயம்?' என்றாள் பானு.

'எங்கள் எதிர் அகத்தில் கல்பகம் என்றொரு பெண்ணும் அதன் அகமுடையானும் குடி இருந்தார்கள். கல்பகத்தின் அகமுடையானுக்கு ஒரு கம்பெனியில் நூறு ரூபாயில் உத்யோகம். அதிக பரபரப்பு இல்லாமல் சுமாராக ஏன், கௌரவமாகவே குடித்தனம் செய்து வந்ததுகள். கல்பகம் ரொம்ப நல்ல பெண். அதன் அகமுடையானும் ரொம்பவும் ஸாது. அவன் உண்டு. அவன் உத்யோகம் உண்டு. வீண் ஜோலிக்குப் போகமாட்டான். திடீரென்று அவனுக்கு உடம்புக்கு வந்துவிட்டது. இரண்டு நாள் நல்ல ஜுரம் அடித்தது. மூன்றாவதுநாள் வைசூரி கண்டு விட்டது. கல்பகம் ஒண்டிக்காரி பாவம். தகப்பனார் கிடையாது. தாயார்மாத்திரம் தன் பிள்ளையுடன் பம்பாயில் இருக்கிறாள். கொஞ்ச நஞ்சம் இருந்த பிதுரார்ஜித சொத்தையெல்லாம் சகோதரன் விற்றுக் கொண்டு பம்பாய்க்குப் போய் விட்டான். கல்பகத்தின் புக்ககத்து மனுஷ்யாளும் யாரும் இல்லை. மைத்துனன் மாத்திரம் ஒருவன் இருக்கிறானாம். அது தலைகால்தெரியாமல் கடன் வாங்கி விட்டு கடன்காரன்கள் சொத்தையெல்லாம் ஏலம் போட்டுக் கொண்டுபோய் விட்டார்களாம். கொஞ்ச நாட்களாய் மைத்துனன் இருக்கிற இடமேதெரியவில்லையாம். இப்படிப் பட்ட நிலைமையில் வீட்டுக்காரர் ஒரு நிமிஷம்கூட வீட்டில் இருக்கக்கூடாதென்று குதிகுதி என்று குதிக்கிறார். பாவம், அது எங்கே போகும்?' என்று சாந்தா சொல்லிக்கொண்டிருக்கும் போது,' 'ஏன் ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்துவிடக்கூடாதோ?' என்று கேட்டாள் பானு.

'நீங்கள் இந்தமாதிரி வாய்க்குச் சுளுவாகக் கேட்டுவிடுவீர்கள் என்பது நான் எதிர்பார்த்ததுதான். இதெல்லாம் பிறத்தியாரைப்பற்றி பொறுப்பு இல்லாமல் சொல்லப்படும் 'அனுதாப' வார்த்தைகள். அந்த நிலைமையில் நாம் இருந்து பார்த்தால் தெரியும், அதனுடைய கஷ்டம் எப்படிப் பட்டதென்று. ஆஸ்பத்திரியில் சேர்த்து விடுவதற்கென்ன வென்று சுலபமாகச் சொல்லி விடுகிறீர்கள். ஆஸ்பத்திரி வசதியெல்லாம் பணக்காரர்களுக்குத்தான் என்று சொல்கிறாள் கல்பகம் என்றாள் சாந்தா.

'அப்புறம் என்ன ஆயிற்று?' என்றாள் ருக்கு.

ஆவதென்ன? வீட்டின் சொந்தக்காரர் ஒரு நிமிஷம் கூட வீட்டில் வைத்துக்கொண்டிருக்கக்கூடாதென்று கண்டிப்பாகச் சொல்லி, அவரே அதிகாரிகளுக்கு ரிபோர்ட்டும் செய்துவிட்டாராம். கடைசியில் ஆஸ்பத்திரியில் கொண்டு சேர்த்தது பாவம்! நேற்று சாயங்காலம் போய்விட்டானாம்' என்று சாந்தா சொல்லி முடிப்பதற்குள், போய்விட்டானா? என்று வியப்புடன் கேட்டாள் ருக்கு.

போயே போய்விட்டானாம். பாவம்! கல்பகம் நடுத்தெருவில் அனாதையாய்த் திண்டாடுகிறது. சொந்தத்தில் ஒரு வீடு மாத்திரம் இருந்தால் இப்படியெல்லாம் திண்டாட வேண்டியிருக்குமா? பிராணன் இருப்பதும் போவதும் நம்மயத்தனத்தில் இல்லை. இருந்தாலும் உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டால் வீட்டுக்காரரின் உத்திரவுக்கு நடுங்கிக்கொண்டிருக்க வேண்டியதில்லை பாருங்கள். வீட்டுக்காரர் செய்தது சரிதான் என்று நீங்கள் சட்டமெல்லாம் பேசுவீர்கள். அனுபவத்தை ஒட்டிப் பேசினால் சிலசமயங்களில் சட்டம் வேறு விதமாகத்தான் உபயோகப் படும்படியாகப் போய்விடுகிறது. அதற்



''......பக்கத்திலிருந்தவர்களெல்லாம் 'உஸ் உஸ்' என்று......''

கென்ன, எதையும் வாய்க்குச் சுளுவாகச் சொல்லிவிடலாம் என்றாள் சாந்தா.

'அப்படியானால் இப்பொழுது நீங்கள் ஒவ்வொருவருக்கும் சொந்தத்தில் ஒரு வீடு இருந்தாகவேண்டுமென்ற பிரசாரத்தில் இறங்கியிருக்கிறீர்கள் என்று சொல்' என்றாள் ருக்குவின் மாமியார்.

உலகத்திலே ஒரு பழமொழி சொல்கிறதில்லையா மாமி? 'எலிப்பாழியானாலும் தனிப்பாழிவேண்டும்' என்று தனக்கென்று சொந்தத்தில் ஒரு இடம் இல்லையென்றால், அதை விட முட்டாள் தனம் வேறு கிடையவே கிடையாது, என்றாள் சாந்தா.

'மணி ஐந்தாகிவிட்டது. நீங்கள்தான் பேச உட்கார்ந்து விட்டால் உங்களுக்குப் பொழுது போகிறதே தெரிகிறதில்லையே. இன்றைக்கு சபாவில் நல்ல கச்சேரி இருப்பது ஞாபகமே இல்லையா?' என்றாள் பானு.

இன்றைக்கு நாங்கள் சாயி ஸமாஜத்துக்குப் போகப் போகிறோம், என்றாள் சரோஜா.

சாயி ஸமாஜம் என்று சொல்லவே ஞாபகம் வருகிறது. ஆமாம்; நேற்று ராத்திரி சாயி சமாஜத்தில் கச்சேரியில் பாட்டைக் கேட்காமல் இடுப்பில் குழந்தையை வைத்துக் கொண்டு எதற்காக அப்படிக் 'காலொடிய'ச் சுற்றிவந்து கொண்டிருந்தாய்! என்று விமலாவைப்பார்த்துக் கேட்டாள் ருக்குவின் மாமியார்.

'என்னமாமி பண்ணச் சொல்கிறீர்கள்? நேற்றுராத்திரி 'அவருடன்'! கச்சேரிக்கு வந்தேன். நான்ஸ்திரீகளுடன் உட்கார்ந்துவிட்டேன். அவர் புருஷர்கள் மத்தியில் உட்கார்ந்துவிட்டார் பாதிகச்சேரியில் குழந்தை அழ ஆரம்பித்துவிட்டது. எவ்வளவு சமாதானம் செய்தாலும் கேட்கவில்லை. பக்கத்திலிருந்தவர்களெல்லாம் 'உஸ் உஸ்' என்று வெறுத்துக்கொள்கிறார்கள். அவர் புருஷர்கள் மத்தியில் எங்கோ உட்கார்ந்துவிட்டார். இந்தகோடிக்கும் அந்த கோடிக்கும் எத்தனைதரம் வருவது? அவர் இந்தப்பக்கம் திரும்பினால்தானே? அழுதேவிட்டேன் போங்களேன். சொல்லாமலும் தனியாகவும் போக தைரியம் வரவில்லை என்றாள் விமலா.

இதற்குத்தான் வீட்டில் கிழம்கட்டுகள் இருக்கவேண்டும் என்பது என்றாள் பானு.

'வீட்டில் இருந்துகொண்டு குழந்தையைப்பார்த்துக் கொள்வார்கள் என்ற எண்ணத்தில் சொல்லுகிறாயா? போதும். நமக்கு முன்னால் அவர்கள் கிளம்புவார்கள். இந்தப்புருஷர்கள் ஸ்திரீகளுக்குப் பொறுப்பேயில்லை என்று சொல்லுகிறார்களேயொழிய அவர்கள் தான் கொஞ்சம்கூடப் பொறுப்பே இல்லாமல் நடந்து கொள்கிறார்கள்! என்றாள் சாந்தா.

''அவர் எங்கே தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு தூங்கிக்கொண்டிருந்தாரோ?'' என்றாள் ருக்கு.

அதுவும் வாஸ்தவம்தான். அன்றைக்கு அப்படித்தான் அவர் ஆடிஆடி விழுந்துகொண்டிருந்தார். நான் எவ்வளவுநாழி நின்று கொண்டிருந்தாலும் அவர் திரும்பிப் பார்க்கிற வழியாகக் காணோம். கடைசியில் அவருக்குத் தெரிந்த ஒருவர் நான் நிற்பதைப் பார்த்துவிட்டு அவரை எழுப்பி அனுப்பினர்' என்றாள் பானு.

இது தெரியாத ஜனங்கள், வீணிற்காவது அவள் கச்சேரி கேட்கவா வருகிறாள்? இந்த கோடிக்கும் அந்த கோடிக்கும் நடைபோடுவதற்குத் தானே வருகிறாள் என்று எதையாவது கன்னாபின்னாவென்று பிதற்றி வைக்கிறது கள்' என்றாள் சரோஜா.

மூட உலகம் எதையாவது பிதற்றிக் கொண்டிருக்கட்டும். நாழியாயிற்று கிளம்புங்கள் என்று எழுந்தாள் பானு.

---

## "சுதேசமித்திரன்" வாரப்பதிப்பு
### சந்தா விவரம்

★

**(சந்தாவை முன்னதாகக் கட்டவேண்டும்)**

| | இந்தியா சிலோன் | வெளிநாடு |
|---|---|---|
| 1-வருஷம் | 13 0 | 18 0 |
| 6-மாதம் | 7 0 | 9 8 |
| 3-மாதம் | 3 12 | 5 0 |

• தனிப்பிரதி அணு 4

3 மாதத்திற்கு குறைந்து சந்தா ஒப்புக்கொள்ளப்படமாட்டாது.

மானேஜர்: ''சுதேசமித்திரன்'' ஆபீஸ், மவுண்ட்ரோட், மதாராஸ்.

## ஞாபகப்படுத்துகிறோம்

★

"சுதேசமித்திரன்" வாரப் பதிப்பில் வெளிவரும் கதைகள், கட்டுரைகள், கவிதைகள் இவற்றில் வரும் பெயர்கள், சம்பவங்கள் முதலியன எவரையும் குறிப்பிடுவன அல்ல. அவை முற்றிலும் கற்பனையே.

—ஆசிரியர்.




## 1

காலை நேரம். மணி ஏழு இருக்கும். ஆபீஸ் அறையில் ஏதோ சில காகிதங்களை ஆராய்ந்துகொண்டிருந்த எனக்கு கூடத்து தாழ்வாரத்திலிருந்து இரைச்சல் சப்தம் கேட்டது. என்னவென்று அறிவதற்காக நான் அங்கே சென்றேன். என் தங்கை சரோஜாவும் வேலைக்கார கிழவி வள்ளியும் வார்த்தைகள் பரிமாறிக்கொண்டிருந்தனர். வள்ளியின் கையில் பாத்திரம் இருந்தது. சரோஜாவால் தயாரிக்கப்பட்டு அவளால் ஊற்றப்பட்ட காப்பியை சுவைத்துவிட்டு அதைப்பற்றி தனது மதிப்புரையை வள்ளி வெளியிட்டுக் கொண்டிருந்தாள்.

"சரோஜா அம்மா! சர்க்கரை இல்லாத காப்பித்தண்ணி எப்படி ருசிக்கும்!" என்று கேட்டாள் வள்ளி. சரோஜா "போடி! நீ அதிகமாக சர்க்கரை போட வேண்டும் என்று பிடிவாதம் பிடிக்கிறாய்? அவ்வளவு சர்க்கரை சேர்ந்தால் அது உன் உடம்புக்கு கெடுதல் தெரியுமா?" என்றாள்.

வள்ளி "போங்கோ அம்மா! இவ்வளவு வருடங்களாய் காப்பி சாப்பிடுகிறேன். சர்க்கரை கொஞ்சம் அதிகமாய்த்தான் போட்டுக் கொள்ளுகிறேன். எனக்கு என்ன உடம்பு கெட்டுவிட்டது? என்ன இருந்தாலும் உங்களுக்கு காப்பி போடத் தெரியவில்லை. பெரியம்மா இருந்தார்களே! அவுங்க கையால் காப்பி போட்டதை குடிக்கணும். அடுத்தபடி சின்ன அம்மாவின் காப்பிதான் நல்லா இருக்கும். இன்று சின்ன அம்மா காப்பி போடலை. அதான் இப்படி இருக்கு நீங்க போட்ட காப்பி" என்றாள்.

அப்பொழுது ஆற்றிலிருந்து ஸ்னானம் செய்துவிட்டு ஈரப் புடவையுடன் வந்த என் மனைவி "என்ன இருந்தாலும் வள்ளி, இந்த நாக்கு நீளம் உனக்கு ஆகாது. இந்தமட்டும் சரோஜா அம்மா காப்பி போட்டுக் கொடுத்தார்களே என்று சந்தோஷப்படாமல் நீ பழிக்கிறாயே? ரொம்ப அழகாய் இருக்கிறது" என்றாள்

என் கடைசி மகன் ராஜா தான் எழுதிக்கொண்டிருந்த பாடத்தை விட்டுவிட்டு வள்ளியிடம் ஓடி வந்து தன் கைகளை ஆட்டிக் கொண்டு, "அத்தையை நீ பழிக்கிறாயே? இனிமேல் காப்பி உனக்கு கிடையாது" என்றான்.

வள்ளி சிரித்துக்கொண்டே "மவராசா அப்படிச் சொல்லாதே இந்தக் காப்பி தண்ணிக்காகத் தான் நான் உசிர் வைத்திருக்கிறேன்" என்றாள்.

நானும் நகைத்துக்கொண்டே வளளிக்கு நல்ல ருசியுள்ள காப்பி தான் வேண்டும். பாவம்! சரோஜா தப்பித்தவறி காப்பி தயார் பண்ணினால் அது அவளுக்கு பிடிக்குமோ? சரோஜாவின் ஆத்துக்காரர் பட்டணத்துப் பெரிய டாக்டர். பங்களா வேலைக்காரர்கள், சமையல்காரன், தான் எல்லாரும் இருக்கிறார்கள். அவளுக்கு தினம் காப்பி போட்டு வழக்கமாயிருந்தால்தானே வள்ளியால் மெச்சப்படும்? ரகமான காப்பியை தயாரிக்கக்கூடும் என்றேன்.

சரோஜா முகத்தை திருப்பிக்கொண்டே, "போ அண்ணா! உனக்கு எப்பொழுதும் கேலிதான்" என்று உள்புறம் சென்றாள்.

வள்ளிக்கு வயது எழுபது இருக்கும். கடந்த ஐம்பது வருடங்களாய் எங்கள் வீடு கூட்டும் ஏகபோக உரிமை அவளுக்குத்தான். என் தகப்பனாரும் தாயாரும் குடித்தனம் பண்ண ஆரம்பித்தபொழுது வீடு கூட்ட வந்தவள் அவள். அதுமுதல் அவள் எங்கள் குடும்பத்துடன் இடைவிடாமல் இருந்துவந்திருக்கிறாள். என்னையும் என் தங்கை சரோஜாவையும் அவள் வளர்த்தவள்; எங்கள் வீட்டு சுகதுக்கங்களில் அவள் பங்கெடுத்துக் கொண்டவள். எனக்கு விவாகமாகி என் மனைவி வீட்டுக்கு வந்த பின்னும் வள்ளியின் நிலைமையிலோ உரிமையிலோ எவ்வித மாறுதலும் இல்லை. என் குழந்தைகளது வளர்ச்சியிலும் அவளுக்கு பங்கு இருந்தது. பட்டணத்திலிருந்து என் தங்கை சரோஜா வந்துவிட்டால்போதும்: அவளுடன் வள்ளிக்கு எப்பொழுதும் சிரிப்பும் கேலியும்தான்.

வள்ளி சிறுவயதிலேயே கணவனை யிழந்தவள். அவளுக்கு ஒரே மகன். அவன் பெயர் கருப்பண்ணன். குடியானத்தெருவில் அவனுக்கு வீடு இருந்தது. கருப்பண்ணன் ஜீவனத்துக்காக என்னென்னமோ செய்து பார்த்தான். பழ வியாபாரம் செய்தான். தேங்காய் வியாபாரம் செய்தான். வெற்றிலைபாக்கு கடை வைத்தான். ஒன்றிலும்

லாபம் இல்லை. கடைசியில் அவனுக்கு கடன்தான் மிச்சம். அதனால் அவன் தன் வீட்டை விற்றுவிட்டு தன் மனைவி வீராயியுடன் அவளது பிறந்தகமான மாயவரத்துக்குச் சென்றுவிட்டான். போகும்பொழுது அவன் வள்ளியை தன்னுடன் வரும்படி அழைத்தான். அதற்கு அவள் மறுத்து விட்டாள்.

அதுமுதல் வள்ளிக்கு எங்கள் வீட்டில் தான் நிரந்தரவாசம். கொல்லைப்பக்கத்திலுள்ள ஒருகீற்றுக்கொட்டகை அவளது அறையாக உதவியது. அங்கே அவளது பெட்டி படுக்கை காணப்படும். பெட்டி பழைய மரப்பெட்டி, அதில் வள்ளிக்குச் சொந்தமான சாமான்கள் இருந்தன. என் மனைவியாலும் சரோஜாவாலும் அவ்ளுக்குக் கொடுக்கப்பட்ட பழம் புடவைகள், சில ஓட்டை பாத்திரங்கள், வெற்றிலைபாக்குப்பெட்டி, சுருணைகள், கரண்டி, இன்னும் சில பழைய சாமான்கள்—எங்கள் வீட்டில் உபயோகமற்றதென்று எறிந்துவிடப்படும் பண்டங்கள் எல்லாம் வள்ளியின் மரப்பெட்டியில் அடைக்கலம் புகுந்தன.

வள்ளிக்கு எங்கள்வீட்டிலேயே சாப்பாடு. அவளுக்குக் கொடுக்கப்படும். சாப்பாட்டில் மிச்சம், மீதி இருப்பின் அதை தன் சகபாடி எவருக்கேனும், கொடுத்துவிடுவாள். ஆனால் அதற்கு பிரதி பிரயோஜனமாக ஏதாவது வேலையை வாங்கிவிடுவாள்.



“இந்தா குப்பாயி! கொட்டகையில் பாத்திரத்தில் ரசம் சோறு, வைத்திருக்கிறேன், அதை தின்றுவிட்டு, மாட்டுக் கொட்டியில் குவிந்துருக்கும் சாணியை எடுத்து மூட்டை தட்டு” என்று நியமனம் செய்வாள்.

அண்டை அயலிலுள்ள வீடுகளை கூட்டும் ஸ்திரிகளுக்கெல்லாம் வள்ளியிடம் தேவதா விசுவாசம். அவர்கள் ஒவ்வொருவரும் தம்தம் விஷயங்கள் எதிலும் அவளது யோசனையைகேட்காமல் இருக்க மாட்டார்கள். எந்த வீட்டுக்காரிக்கும் வேலைக்காரிக்கும் தகரார் ஏற்பட்டாலும் அதைத் தீர்த்து வைக்க வள்ளிதான் வரவேண்டும். அவளுடைய முதிர்ந்த வயதும் நீண்டஅனுபவமும் அவளுக்கு ஒரு தனிமையான சிறப்பையளித்தன.

பண்டிகை நாட்களில் வள்ளி தன் மகன் வீட்டுக்குப் பயணம் போய்விடுவாள். சங்கராந்தி, வருஷப்பிறப்பு, தீபாவளி இந்த மூன்றுபண்டிகைகளையும் அவள் தன் மகனுடனும் மருமகளுடனும் கொண்டாடுவாள். அச்சமயங்களில் அவள் பத்து அல்லது பதினைந்துநாள்கள்ரஜாவில்போவாள் தான் இல்லாதநாட்களில் எங்கள் வீட்டில் வேலைசெய்ய தனது சிஷ்யைகளில்’ ஒருத்தியை நியமனம் செய்துவிட்டுப் போவாள்.

கருப்பண்ணன் உதவாக்கரை மனிதன்—தாய் கையில் இருக்கும் மிச்சம் மீதியை பறிப்பதிலேயே அவன் கண். அவனுக்கும் வீராயிக்கும் வள்ளிக்கும் ஷஷ்டாஷ்டகம். ‘மாமியார்’ வாயும் பொல்லாது. மருமகளும் வாய் துடுக்குக்காரி. அதனால் வள்ளி மூட்டைக்கட்டிக் கொண்டு எங்களூருக்கு வந்துவிடுவாள்.மேலும் வீராயிக்குகுழந்தை கிடையாது. தன் மருமகள் மலடி என்று வள்ளிக்கு மன ,எரிச்சல் தான்.

வீட்டிலுள்ளவர்கள் யாருடனாவது வாய் வழக்காடாமல் வள்ளிக்கு இருந்தநாள் கிடையாது. பல வருடங்களாக எங்கள் குடும்பத்துடன் இருந்தபடியால் அவளுக்குஅப்படி சண்டைபோடும் உரிமை ஏற்பட்டுவிட்டது.

“ஏ சரஸா! இப்பொழுது தானே அங்கே கூட்டினேன். ஏன் அங்கே குப்பை போடரே?” என்று என் குழந்தையை அவள் அன்புடன் கடிந்துகொள்வாள்.

“அம்மா நல்ல வியாபாரம் பண்ணிரீங்க!’ அந்தக்கூடைக்காரி உங்களை ஏமாற்றி விட்டாள். அவ்வளவு அரிசி போட்டாங்களே இத்தனூண்டு கரிவேப்பிலையை கொடுத்துவிட்டு போயிருக்கிறுளே அவள். வாசல் திண்ணையில் எவ்வளவு குப்பை பாருங்கோ! நானே அவள் வரட்டும். சொல்லுகிறேன். என்று என் மனைவியிடம் ஒரு பிரசங்கம் செய்வாள்.

எங்கள் வீட்டில் வேலைக்காரன் ஒருவனும் நிலைத்ததில்லை. அதற்கு காரணம்வள்ளிதான். வேலைக்கு அமரும் ஆளை அவள்

ஏதேனும் சண்டை போட்டு துரத்தி விடுவாள். கடைகளுக்கு அவள்தான் போவாள். எந்த சாமான் வாங்க வேண்டுமானாலும் வள்ளி தான் போகவேண்டும். கடைக்காரர்களெல்லாம் அவளுக்கு பரிச்சயம். விறகு கடைக்காரன், மாவு மில் வைத்திருப்பவன், பலசரக்குக்கடை செட்டியார்—எல்லாரிடமும் அவளுக்கு சலுகை உண்டு. ஒரு ஸமயம் அவள்மண்ணெண்ணெய் வாங்குவதற்காக ரேஷன் கார்டுடனும் புட்டியுடனும் கடைக்குச் சென்றாள். கடை வாசலில் பெருங் கூட்டம். அப்பொழுது வள்ளி கூட்டத்துள் புகுந்து முன்னே செல்ல முயன்றாள். கடைக்காரர் அவளைப்பார்த்து, 'ஆர்டர்' பிரகாரம்தான் கொடுப்பேன்! க்யூ வரிசையில் போய் நில்'' என்றான் அதைக்கேட்ட வள்ளி, வரிசை ஐயா அது! தள்ளாத கிழவி வந்திருக்கிறேன்! எனை தலை சுற்றுது. மயக்கம் வருது என்னை சீக்கிரம் அனுப்பாமல் நிற்க வைக்கிறீங்களே! இது உங்களுக்கு நியாயமா ?'' என்று கேட்டாள். உடனே கடைக்காரன் அவளை முதலில் கவனித்து அவளுக்கு மண்ணெண்ணெய் கொடுத்து அனுப்பினான்.



### 3

“ஏன் ஸார்! உங்கள் வீட்டு வேலைக்காரக் கிழவிக்கு எப்பொழுது ஓய்வு கொடுக்கப் போகிறீர்கள்?” சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்கு 55-ம் வயதுடன் வேலை நீக்கம்வந்து விடுகிறது. ஹைகோர்ட்டு ஜட்ஜுகளுக்கு 60-வயதுக் கப்பால் ஓய்வு. ஆனால் இந்த வள்ளிக்கு ரிடையராகும் எண்ணமே கிடையாதோ?' என்று கேட்டார் என் நண்பர்.

அவர் அப்படி கூறிய ஒரு வாரத்துக்குள் வள்ளி எங்களை விட்டு பிரியும்படி நேரிட்டது.

முந்தியநாள் இரவு படுத்தவள் தான். காலை அவளால் எழுந்திருக்கமுடியவில்லை. மெள்ள மெள்ள உட்கார முயன்றாள். ஆனால் அவள் தரையில் சாய்ந்து விட்டாள்.

அவளது நிலைமையைக் கண்டு பரிதவித்த சரோஜா என்னிடம் ஓடிவந்தாள். அச்சமயம் பட்டணத்திலிருந்துவந்திருந்த டாக்டர் கோபாலன் என்னுடன் இருந்தார். அவர் வள்ளியை பரிசோதனை செய்துவிட்டு கவலையுடன் தலையை ஆட்டினார். 'பாரிச வாயு! இனி மேல் அவளை இங்கேவைத்திருக்கக் கூடாது என்றார்.

உடனே நான் மாயவரத்துக்கு தகவல் அனுப்பினேன். மறு ரயிலிலே கருப்பண்ணனும் வீராயியும் வந்தனர். வள்ளியை அழைத்துக் கொண்டுபோக சித்தம் செய்தனர் மூட்டைகள் கட்டினர் வள்ளிக்கு எங்களைவிட்டுப்போக இஷ்டமில்லை. எங்களுக்கும் அவளது பிரிவு வருத்தத்தைக்கொடுத்தது. ஆயினும் என்ன செய்வது?

என்மனைவி அவளது மருமகளிடம் ஒரு மரக்கால் அருசி கொடுத்தாள். இதை வைத்துக் கொள் கிழவிக்கு வேண்டுவதை பண்ணிக் கொடு என்றாள். சரோஜா ஒரு டப்பி நிறைய காப்பிப் பொடியை வள்ளியிடம் நீட்டினாள். கிழவியின் கண்களில் நீர் பெருகியது.

வள்ளியின்பணம் இரு நூறு ரூபாய் என்னிடம் இருந்தது. அதை அவளிடம் கொடுக்க விரும்பினேன். “பணம் உங்களிடம் இருக்கட்டும். அவ்வப்பொழுது வேண்டும்பொழுது உங்களுக்கு தகவல் அனுப்பி வாங்கிக் கொள்ளுகிறேன் என்றாள் கிழவி.

“சரி அப்படியே ஆகட்டும்'' என்று நான் கூறிவிட்டு ஒரு பத்து ரூபாய் நோட்டை அவளிடம் கொடுத்து “இதை நான்கொடுத்ததாக வைத்துக்கொள்'' என்றேன்.

அதை வள்ளி வாங்கிக்கொண்டாள். என் பக்கத்தில் நின்ற குழந்தை ராஜாவைப் பார்த்து அவள் “ராசா உன்னை நான் மறுபடியும் எப்பொழுது பார்ப்பேன்'' என்று அழுதாள்.

வாசலில் வண்டி வந்துவிட்டது. மூட்டை முடிச்சுகளைகருப்பண்ணனும் வீராயியும் அதில் வைக்கிறார்கள். கிழவியை மெதுவாக கையைப் பிடித்து அழைத்துப் போய் வண்டியில் ஏற்றுகிறார்கள் வண்டியைச் சுற்றிலும் ஒரே கூட்டம். அண்டை அயல்வீட்டு வேலைக்காரிகள் அவளை வழியனுப்ப சித்தமாய் நிற்கிறார்கள்.

வாசலில் நாங்கள் எல்லாரும் நிற்கிறோம். எங்கள் கண்கள் கலங்குகின்றன. எங்கள் தினசரி வாழ்க்கையில் சம்பந்தப்பட்ட நபரை பிரியும்சந்தர்ப்பம் நேர்ந்துவிட்டது இனி வள்ளியை நாங்கள் வீட்டில் காணமாட்டோம்.



# குழந்தையும் கவிஞரும்

ஸ்ரீமதி தங்கம்மாள் பாரதி

நவராத்திரி முதல் நாளன்று மதுவரக்கன் நாட்டை விட்டு ஒழிந்தான். நானிலத்தவர் களித்தனர். பாரதமாதா கொடிய அரக்கனை மடித்து மக்களை இன்புறச் செய்தாள். மகிஷாசுரன் என்ற பெயருடன் அந்நாளில் உலவிய பாதகன் இந்நாளில் மதுவென்ற பெயருடன் மக்களை மாய்த்துக் கொண்டிருந்தான். எண்ணற்ற எளிய ஜனங்கள் அவனது மாயச்சுழலில் சிக்கி மடிந்தனர். அன்னையின் தவவலியால்அவன் அடியோடுவீழ்ந்தான். வீடுதோறும் அந்த நன்னாளைத் திருவிழாவாகக் கொண்டாடினார்கள். மாதாவை, சக்தியை, உலகத்தை இயக்கும் பரம்பொருளை, ஒவ்வொரு வீட்டிலும் கொலுவிருக்கச் செய்து ஆராதித்தனர். ஒன்பது நாளும் திருவிழா. குழந்தைகளின் மனத்தில் இன்பம் நிறைந்திருந்தது. ஒவ்வொருவர் உள்ளமும் கவிகளின் உலகத்தைப்போல கற்பனை லோகத்தில் சஞ்சரித்தது. ஒரு குழந்தை பொம்மைகளைப் பார்த்துக் கொண்டேயிருந்தது. அந்த வீட்டில் அப்பொழுது தான் சிறுவர்களின், ஆரவாரமும், கூச்சலும் சற்று அடங்கியிருந்தது விளக்கொளியில் ஒவ்வொரு பொம்மையும் அவளுடன் பேசுவதுபோல் அவளுக்குத் தோன்றியது. அவசரமாக வேலை பார்த்த அம்மாவைக் கூவியழைத்தாள்.

"அம்மா, இதோபார் அல்லிராணி எத்தனை ஒய்யாரமாக நிற்கிறாள்! அவள் கையிலுள்ள வைரவாளைப் பார்த்தாயோ, கண்ணைப் பறிக்கிறது! ஆண்டாளைப் பார்த்தாயோ, அவள் கழுத்திலுள்ள புதுமாலையின் மணம் கமகமவென்று வீசுகிறது. கண்ணன் நல்லபிள்ளையம்மா, நீல நிறத்திலும், சந்தனவர்ணத்திலும், வெள்ளைநிறத்திலும் எத்தனை அழகாகயிருக்கிறான். பூனை. கிளி. மாடு, மயில், எல்லாவற்றினிடமும் அவனுக்கு சிநேகம். ஆண்பிள்ளை சிநேகிதரே அவனுக்குக் கிடையாதுபோலிருக்கிறது. அவனை அணைந்துகொண்டும் சூழ்ந்தும் எத்தனை பெண்கள் நிற்கிறார்கள்! அம்மா எனக்கு இந்தப் பிள்ளையாரைமட்டும் பிடிக்கவில்லையம்மா!'

தாய் இதைக்கேட்டு "ஏண்டி கண்ணு, அவர் என்னசெய்தார்?'

"பெண்களைக் கஷ்டப்படுத்தறார் அம்மா, "தாயார் சிரித்துக் கொண்டே எப்படிப் படுத்துகிறார்?"

பெண்—ஒவ்வொரு ஆற்றங்கரைக் கரையிலும், குளத்தங்கரையிலும் உட்கார்ந்து கொண்டு போவோரையும், வருவாரையும் உற்றுப் பார்த்துப் பயமுறுத்துகிறார். எல்லா காரியத்திற்கும் லஞ்சம் கேட்கிறார். பரீக்ஷை பாஸ் பண்ண வேண்டுமா, அவருக்கு சிதர் தேங்காய் போட வேண்டும்? கெட்டுப் போன சாமான் அகப்பட வேண்டுமா உடனே. அவருக்குத் தேங்காய்! அம்மா, வள்ளி நல்ல பெண். அவளை என்ன பாடு படுத்திவிட்டார் இவர்! அந்தக் கதையைக் கேளும்மா.



வள்ளி ஒரு பிராமணனோட

பெண். ரொம்ப அழகி. ஒரு நாள் இந்தப் பிள்ளையாரும், முருகனும் அவளிடம் வந்து என்னைக் கல்யாணம் பண்ணிக்கொள், என்று கேட்டார்கள். எந்தப் பெண்ணாவது முருகனை விட்டு விட்டு பிள்ளையாரைப் பண்ணிப்பாளா? "நான் முருகனைப் பண்ணிக்கிறேன்." என்று சொன்னாள். அவள் இஷ்டப்படி கல்யாணம் பண்ணிக்க விட இவருக்குப் பிடிக்கவில்லை. "நான்தான் பெரியவன். எனக்குக் கல்யாணம் ஆனபின்தான் முருகனுக்குக் கல்யாணம், இப்போ உங்கள் கல்யாணம் ஆகாது." என்று சபித்துவிட்டார். வள்ளி காட்டுக்குப்போய் வேடராஜா வீட்டில் வசித்துக் கொண்டிருந்தாள். முருகன் தந்திரமாகக் காட்டுக்குப்போய் வள்ளியைக் கண்டு சந்தோஷமாயிருக்கும் சமயத்திலும் அங்கே தன்னுடைய அழகான உருவத்தோடு போய் அலறிப் பயமுறுத்திப் பின்பு திரும்பிப்போய் விட்டார். "இப்படி ஒவ்வொரு பொம்மைக்கும் ஒரு கதைகள் வீதம் அவள் மனம் கற்பனை செய்தது. சிறுவர்களின் கூட்டம். "அம்மாமி சுண்டல்" என்று கூச்சலிட்டுக்கொண்டு உள்ளே நுழைந்தது. குழந்தையும் கற்பனையூரிலிருந்து விடுபட்டு அவர்களோடு கலந்து கொண்டாள்.

குழந்தைகளுடன் பழகுபவர்களுக்கு இது போன்ற சம்பவங்கள் சாதாரணமானவைதாம். மேலே சொன்ன கற்பனை ஒன்பது வயதுள்ள புவனசுந்தரி என்ற பெண்ணினுடையது இனி-கவிஞரின் கற்பனையைக் கேளுங்கள்.

> கற்பனை யூரென்ற நகருண்டாம்—அங்கு
> கந்தருவர் விளையாடுவராம்.
> சொப்பன நாடென்ற சுடர்நாடு—அங்கு
> சூழ்ந்தவர் யாவர்க்கும் பேருவகை.

இதை யடுத்துள்ள பாரதியின் 7—அடிப் பாடல்களில் கவிஞர் கற்பனையின் மூலம் சிறு குழந்தையாக மாறியதைப் பார்க்கிறோம். பொம்மை நாட்டையும், அவர்கள், விளையாட்டையும், அவர்கள் கட்டும் அட்டை வீடு, அவர்கள் சின்னஞ் சிறு கையினால் அளிக்கும் இனிய பானம்! அவர்களது சுடர் மணிவாள், எல்லாவற்றையும், நம்மையும் காணச்செய்கிறார். நடுக்கடலில் தோன்றிய, அற்புத தீவு. கற்பனையூர் அந்த ஊரைப் பார்ப்பதற்கு நம்மையும் அழைக்கிறார். "ஓ பிள்ளைப் பிராயத்தை யிழந்தீரே, பின்னுமங்ஙிலை பெறவேண்டீரோ" எனக் கேட்கிறார் கவி.

ஆம், கெட்ட நினைவுகள், கொடிய சிந்தனைகள் தீய காரியங்கள் ஆகியவற்றை மனத்தை விட்டு நீக்கினால் நாமும் குழந்தையுள்ளம் பெறலாம். அப்படி நம்மை நாம் மாற்றிக் கொள்ளும் திறமை பெற்றால் "எக்காலமும் பெருமகிழ்ச்சியங்கே, எவ்விதக் கவலையும் போருமில்லை"

---

**மதுவிலக்கினால் வேலையிழந்த கள் இறக்கும் தொழிலாளர்களில் போலீஸ் இலாக்காவில் சேரலாம் என்று பிரதமர் ரெட்டியார் சமீபத்தில் அறிவித்தார். தேங்காய் திருடர்களே; இனி கையும் களவுமாக அகப்பட்டுக் கொள்ளுவீர்கள்; ஜாக்கிரதை !**






[ பி. வி. ரங்கநாயகி ]

★

சென்னைக்கு தன்னை மாற்றியிருப்பதாக வந்த சர்க்கார் உத்தரவைப் படித்த டாக்டர் ராஜன் சந்தோஷம் அடைந்தான் என்றாலும் அவன் முகத்தில் வருத்தத்தின் அறிகுறியும் தென்பட்டது. ஸஹாரா பாலைவனத்தில் தண்ணீரைத் தேடி அலைவதைப்போல் பட்டணத்தில் காலி வீட்டைத் தேடி அலைய அவனுக்கு இஷ்டமில்லை. ஆகையால், அவன் தன் தாயை தஞ்சாவூரிலேயே விட்டுவிட்டு மாம்பலத்தில் ஒரு வீட்டில் மூன்றாம் மாடியிலிருந்துகொண்டு சட்டக்கல்லூரியில் படிக்கும் தன் சினேகிதன் ராமனாதன் அறையில் முகாம்போட்டான். வீட்டின் கீழ்க்கட்டில் அதன் சொந்தக்காரரும் இரண்டாம் மாடியில் ஒரு வக்கீலும் வசித்து வந்தார்கள். மூன்றாம் மாடிக்குப்போக ஒரு தனி வழியிருந்ததால் வீட்டுக்காரரைப்பார்க்கும் சந்தர்ப்பம் ராஜனுக்குக் கிடைக்கவில்லை. ராமனாதன் தன் தலை தீபாவளிக்கு மாமனார் ஊருக்கு புறப்படுமுன்பு வீட்டுக்காரரிடம் தன் அறையில் அவன் சினேகிதன் ஒருவன் இருக்கிறானென்றும், அவன் அடுத்தமாதம் முதல்தேதி வாடகை கொடுப்பானென்றும் கூறிவிட்டு அவசர அவசரமாய் டாக்டர் ராஜனை அறிமுகம் செய்து வைத்துவிட்டுப் போய்விட்டான்.

மாடிஅறையில் தூங்கிக்கொண்டிருந்த டாக்டர் ராஜன் பக்கத்து வீட்டிலிருந்து எழுந்த ஆனை' 'ஹிட்லர்' பட்டாஸ்களின் சப்தத்தைக் கேட்டு விழித்துக் கொண்டான். பச்சை, சிகப்பு நிறமான மத்தாப்பின் பிரகாசம் அவன் அறை ஜன்னல்கள் வழியாகச் சென்றன. அப்பொழுதுதான் அவனுக்கு தீபாவளியென்ற ஞாபகம் வந்தது. அந்தப் புனிதமான புண்யதினத்தில் என்ன நேர்ந்தாலும் எளிதில் ஒருவனால் மறக்க முடியாது. அதிலும் துக்ககரமான சம்பவங்கள் அன்று நேர்ந்துவிட்டால், அதை கடைசி தீபாவளி வரை மறக்க முடியாது. பல வருஷங்களுக்கு முன்னால் கும்பகோணத்தில் அவன் பள்ளியில் படிக்கும்பொழுது பக்கத்து வீட்டில் குடியிருந்த போலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தீபாவளியன்று அவன் முதுகில் குத்தின குத்துகள். அவனுக்கு இன்னும் வலிப்பது போல்தோன்றிற்று. முதுகை ஒரு தடவை லேசாக தடவிக்கொடுத்தான். தன் ஒரே சகோதரியின் தலை தீபாவளிக்கு சம்பந்தி அம்மாளுக்கு அவள் விரும்பினபடி காப்பிகலர் பட்டுப் புடவைக்குப் பதில் கோக்கோ கலர் புடவை வாங்கிக் கொடுத்ததற்காக அவள் தன் தங்கையைப் புக்ககத்தில் படுத்தின பாட்டை நினைத்த பொழுது கோபத்தால் அவன் உதடுகள் துடித்தன. ஆனால், அடுத்த தீபாவளிக்கு சில தினங்கள் முன்பு சம்பந்தி அம்மாள் சிவலோகப் பிராப்தி அடைந்ததைக் கேட்டு அவன் விடுதலைதினம் கொண்டாடி ஒரு துண்டு கல்கண்டு சாப்பிட்டதை நினைக்கும்பொழுது அவனுக்குச் சிரிப்பு வந்தது. இரண்டு வருஷத்திற்கு முன்பு அவன் சினேகிதன் ரமணி-அவன் மாமனார் தன் விருப்பப்படி விசிறி மடிப்பு மேல் வேஷ்டிக்குப் பதில் ஒரு சாதாரணமான அங்கவஸ்திரம் தீபாவளிதினம் கொடுத்ததற்காக, தன் மனைவியை ஏழெட்டு மாதம் அழைத்து வராமல் சென்னை ஓட்டலில் மக்காச்சோளமும், சப்பாத்தியும் தின்றுகொண்டு கஷ்டப்பட்டதை நினைத்தபொழுது, தலை தீபாவளி இப்பேர்ப்பட்ட பிரகஸ்பதிகளுக்காகத்தான் நம் முன்னோர்கள் ஏற்படுத்தினார்களோவென்ற சந்தேகம் அவனுக்கு உண்டாயிற்று. போன வருஷம் தீபாவளிக்கு முன்தினம் அவன் ஆஸ்பத்திரியில் ஒரு குழந்தைக்கு ரணசிகிச்சை செய்யும்பொழுது கைதவறி ஒரு முக்கியமான ரத்தக் குழாயை அறுத்ததில், குழந்தை இறந்து விட்டது. அப்பொழுது அவன் குழந்தையின் பெற்றோர்களுக்கு பகவத் கீதையிலிருந்து சில ஸ்லோகங்கள் சொல்லி, ஆத்மா அழிவற்றதென்றும், பிறப்பும் இறப்பும் தெய்வத்தின் மாயையென்றும், ஒருவன் எப்படி தன் பழைய சட்டையை களைந்து, புதியதை அணிந்து கொள்கிறானோ அதுபோல் இந்த ஜீவனும் இந்த உடலை விட்டு, வேறு புதிய உடலுடன் சௌக்கியமாய் இருக்கும் என்று, அவர்களுக்கு ஆறுதல் சொன்னதை நினைக்கும்பொழுது அவன் கண்கள் லேசாக கலங்கின. ஆனால், ஐந்து வருஷங்களுக்கு முன்பு தன்னுடன் போட்டியிட்டுக் கொண்டு வைத்தியக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த மாலதி, தீபாவளியன்றே கோயமுத்தூரில் பிளேக் நோயால் இறந்ததை நினைக்கும்பொழுது, அவன் கண்ணீர் அவனை கங்கா ஸ்நானம் செய்வித்தது.

மாலதியின் நிறம் சற்று கறுப்பு என்றாலும், அவள் பேசும் கண்கள், பிறர்மனதை எளிதில் கவரக்கூடிய புன்னகை, பேச்சுவன்மை எல்லாவற்றிலும் முக்கியமாக அவள் புத்திகூர்மை ஆகியவற்றை வியந்து அவளை தன் வாழ்க்கை துணைவியாக அடையவிரும்பினான். எதற்கும் படிப்பு முடியட்டும் என்று எண்ணினான். ஆனால் கடவுள் இவன் நினைத்ததுபோல் நினைக்கவில்லையே! காலேஜ் படிப்பு முடியு முன்பே அந்தப் புண்ணியவதியை புனிதமான தீபாவளியன்று தன்னுடன் அழைத்துக் கொண்டு விட்டார். ஒருநாள் ஆஸ்பத்திரியில் பெரிய டாக்டர் ஆபரேஷன் செய்து கொண்டிருந்தபொழுது அவன் பக்கத்தில் நின்று கொண்டிருந்த மாலதியைப் பார்த்து, ஒரு சிறிய சதையை வெட்ட கத்திகொண்டு வருமாறு சொன்னவுடன், அவள் அவசரத்தில் ஒரு சாதாரண பேனாக் கத்தியை கையில் எடுத்தவுடன், "அம்மா. மிஸ். மாலதி, உன் முன் படுத்திருப்பது உன்னைப்போன்ற ஒரு ஜன்மம். பஜ்ஜி, போண்டா செய்யும் வாழைக்காய் அல்ல" என்றவுடன் அவள் முகத்தில் அசடு வழிந்ததையும், அவன் ஒருநாள் ஞாபக மறதியாய் ஒரு நோயாளியின் வாயில் தர்மா மீட்டருக்குப் பதில் தன் பென்ஸிலை வைத்தபொழுது, மாலதி சிரித்த சிரிப்பின் எதிரொலி அவன் காதை இன்னும் துளைத்துக்கொண்டிருந்தது.

தீபாவளியைக் கண்டு நோய்கள் பயப்படுமா, என்ன? ஆஸ்பத்திரியில் தன் வரவை ஆவலுடன் எதிர் நோக்கும், நூற்றுக்கணக்கான கண்கள், அவன் மனக்கண் எதிரில் நின்றன. கடியாரமும் மணி ஐந்து அடிக்கவே, அவசர அவசரமாய் எழுந்தான். முதலில் முக க்ஷவரம் செய்து கொண்டு, லேசாக எரிச்சல் கொடுத்த தன் முகத்திற்கு சிறிது பவுடர் ஸ்னோ பூசிக்கொண்டிருந்தான். ஏதோ காலடி சப்தம் கேட்கவே திரும்பிப் பார்த்தான். வீட்டுக்காரர் நின்றுகொண்டிருந்தார். அவரை தன் அறைக்குள் அழைக்க ராஜனுக்கு தைர்யம் வரவில்லை. தரையில் தீக்குச்சிகளும், சிகரட் துண்டுகளும் கிடந்தன. ஒரு மூலையில் வண்ணானுக்குப்போட அழுக்குத் துணிகள் குவிந்து கிடந்தன. அதற்கு எதிரில் ஏழெட்டு ஜதை பழயசெருப்புகளும், பூட்ஸ்களும் சிதறிக் கிடந்தன. ஆகையால் அவனே வெளியில் வந்து, "சார், நாளைக்குத் தானே முதல் தேதி. உங்களுக்கு இப்பவே வாடகை வேண்டுமென்றால், நான் கொடுக்கத்தயார் என்ன தரட்டுமா" என்றான்.



"வாடகைக்கு என்னசார். உங்க பணம் என் மணிபர்ஸில் இருப்பது போல்தான். நான் வந்தது வேறு விஷயம். இன்றைக்கு தீபாவளி. நீங்கள் என் வீட்டிலேயே எண்ணெய் ஸ்நானம் செய்து, மத்தியானம் சாப்பிட வேண்டும். நாங்கள் எல்லோரும் கங்கா ஸ்நானம் செய்தாயிற்று. நீங்கள் இப்பவே குளிக்க வரலாம்' என்றார்.

'சார். ரொம்ப'தாங்ஸ்' ஏதோ உங்களைப்போல் இன்னும் சில நல்ல மனிதர்கள் இருப்பதால் தான் சிறிது மழை பெய்து குழாயில் வாசனை ஜலமாவது சொட்டறது. எனக்கு டாக்டர் வேலை. நான் குளித்துவிட்டு ஆஸ்பத்திரிக்குப் போனால், எத்தனை மணிக்கு திரும்பிவர முடியுமென்று நிச்சயமாய் சொல்லமுடியாது. எப்படியும் மத்தியானம் ஒரு மணிக்குள் திரும்பி வர முயற்சிக்கிறேன்" என்றான்.

ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டிருந்த டாக்டர் ராஜனுக்கு ஒரு விருந்து சாப்பாடு கிடைப்பதை நினைத்து நாக்கில் ஜலம் ஊற ஆரம்பித்தது. ஆஸ்பத்திரியில் வேலைகளை முடித்துக் கொண்டு பன்னிரண்டு மணிக்கே தன் அறைக்கு திரும்பிவிட்டான். ஒரு நல்ல சில்க் ஜிப்பா. விசிறி மடிப்பு அங்கவஸ்திரத்துடன் வீட்டுக்காரர் ஹாலுக்குள் நுழைந்தார். வீட்டுக்காரர் அவனை அன்புடன் வரவேற்று, ஒரு சோபாவில் அமரச் சொன்னார். ஹாலைபார்த்ததும் டாக்டர்ராஜன் பிரமித்துப் போனான். பளபளவென்று மின்னும் தரையில் இரத்தினக் கம்பளம் விரிக்கப்பட்டிருந்தது. எங்கு பார்த்தாலும் விலையுயர்ந்த சோபாக்கள், சுவர்களில் எண்ணற்ற அபூர்வமான சித்திரங்களும், படங்களும் மாட்டப்பட்டிருந்தன. ஒரு சுவரில் ஆறு அடி உயரமுள்ள ஒரு கடியாரம் ஒரு மனிதனைப்போல் நின்று கொண்டிருந்தது. அதற்குப் பக்கத்தில் பாடிக்கொண்டிருந்த ரேடியோவின் முன்னால் சுமார் இருபது வயதுள்ள ஒரு பெண், நீலப்பட்டுப்புடவையும், நீல ஜாக்கெட்டும், நீல நிறமுள்ள மூக்குக் கண்ணாடியும் அணிந்துகொண்டு, ஒரு நீல வர்ணமுள்ள புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்தாள். டாக்டர் ராஜனை ஒரு தடவை அலட்சியமாகப் பார்த்துவிட்டு, அன்றைக்குத்தான் வெளியான ஒரு தீபாவளி மலரை கையில் எடுத்துக் கொண்டாள். அவள் மேஜை மேல் அடுக்கப்பட்டிருந்த "ஓட் ஹவுஸ்" பெர்னாட்ஷா நாவல்களிலிருந்து அவள்'படித்த பெண்'

என்று தெரியவந்தது. வீட்டுக்காரர் ராஜனை அழைத்துக் கொண்டு தன் வீட்டைக் காட்ட ஆரம்பித்தார். முதல் அறையில் இரண்டு இரும்பு பெட்டிகள் கம்பீரமாய் நின்று கொண்டிருந்தன. அதன் பக்கத்தில் இரண்டு கண்ணாடி பீரோக்கள் நிறைய பலவிதமான பொம்மைகளும், வெள்ளிப் பாத்திரங்களும் காட்சியளித்தன. சமையல் அறையில் அடுக்கப்பட்டிருந்த, நூற்றுக் கணக்கான வெள்ளி டம்ளர்கள், தட்டுகள், கூஜாக்களைப் பார்த்த பிறகு லக்ஷ்மியே அந்த வீட்டில் வாசம் செய்கிருள் என்று சொல்லி விடலாம். கடைசியில் வீட்டுக்காரர் டாக்டர் ராஜனை தன் மகள் நீலாம்பாளுக்கு அறிமுகம் செய்து வைத்தார். அவள் ராஜனுடன் புன்னகை புரிந்து கை குலுக்கி விட்டு, அவனையும் உட்காரச் சொல்லி அவ்ன் எதிரில் கம்பீரமாக உட்கார்ந்து கொண்டாள். அவள் நீல வர்ணமுள்ள புடவையும், நீல மூக்குக்கண்ணாடியும், அவள் காதில் அணிந்திருந்த வைரத்தோடின் நீல ஒளிகளும், டாக்டர் ராஜனை என்னமோ செய்தன. வீட்டுக்காரர் அவளை அறிமுகம் செய்வித்தபொழுது வெறும் நீலாம்பாள் என்று மாத்திரம் சொன்னூர். அவள் மிஸ் நீலாம்பாளோ அல்லது மிஸஸ் நீலாம்பாளா என்று சொல்லவில்லை. மிஸ் நீலாம்பாளாய் இருந்தால், ஒரு அன்னிய புருஷன்முன் சிறிதும் சங்கோஜமில்லாமல் இப்படி உட்கார முடியுமென்று அவனுல் நம்ப முடியவில்லை. பெண்கள் எவ்வளவு படித்தாலும் அவர்களுடன் பிறந்த வெட்கத்தை அவர்களால் புறக்கணிக்க முடியாது. அதனுல் அவன் அவளுக்குக் கலியாணம் ஆயிருக்கலாம் என்று நினைத்து, அவளை அடிக்கடி பார்க்க மனமில்லாமல், வேறு பக்கம் திரும்பிக்கொண்டு உட்கார்ந்தான். சற்று நேரத்துக்குள் மணியடிக்கும் சப்தம் கேட்கவே, எல்லோரும் எழுந்து சாப்பிடப் போனுர்கள்.

சாப்பாடு முடிந்ததும், எல்லோரும் மறுபடியும் ஹாலுக்கு வந்தார்கள். ஒரு சின்ன மேஜை மேல் பழங்களும், வெற்றிலை பாக்கும் வைக்கப்பட்டிருந்தன.



டாக்டர் ராஜன் ஒரு ஆரஞ்சு பழத்தை கையில் எடுக்கும் பொழுது, அது கை தவறி கீழே விழுந்து விட்டது. அதை எடுப்பதற்காக அவன், தன் இரண்டு முழங்கால்களையும் தரையில் ஊன்றிக் கொண்டு, மெதுவாக குனிந்து எடுத்தான். அவன் செய்கையைப் பார்த்ததும், வீட்டுக்காரரும், நீலாம்பாளும் சிரித்து விட்டார்கள். ராஜன் முகத்தில் அசடு வழிந்தது. வீட்டுக்காரரைப் பார்த்து, "சார், என்னுல் நன்ருகக் குனிந்து தரையைத் தொட முடியாது. அதற்குக் காரணம் ஒரு வெடிக்காத பட்டாசு" என்று சொல்லி அதை விவரிக்கத் தொடங்கினுன்:—

நான் பிறந்தது கும்பகோணம். என் பெற்ரேருக்கு இரண்டு குழந்தைகள். நானும், என் தங்கை சரோஜாவும், எனக்கு சுமார் பன்னிரெண்டு வயது ஆகும் பொழுது, என் பக்கத்து வீட்டில் ரகுநாத் என்ற ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் குடியிருந்தார். அவருக்கும் காந்தி தொப்பிக்காரர்களுக்கும் பூனையும் எலியும்போல் தான். காந்தி தொப்பியுடன் ஏன் கதர் உடுத்திக்கொண்டே, அவர் எதிரில் போக ஜனங்கள் பயப்படுவார்கள். அவருக்கு சுமார் ஐந்து வயதுள்ள ஒரு பெண் இருந்தது. அதை செல்லமாய் பேபியென்று அழைத்து வந்தார்கள். ஒரு நாள் தீபாவளியன்று கையில் பட்டாஸ் கட்டுகள், மத்தாப்பு பெட்டிகளுடன், அவள் என் தங்கையுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். என்னிடமுள்ள பட்டாசுகள் எல்லாம் தீர்ந்துவிடவே, அவள் பட்டாஸ் கட்டுகள்மேல் என் பார்வை விழுந்தது. 'நீ அவல் கொண்டு வா, நான் உமி கொண்டு வருகிறேன், பிறகு அதை இரண்டு பேரும் ஊதி ஊதித் தின்னலாம்" என்பதுபோல் "நீ பட்டாஸ் கட்டு கொடு, நான் நெருப்பு கொண்டு வருகிறேன். இரண்டு பேரும் சேர்ந்து விடலாம்" என்றேன். நான் விட்ட பட்டாசுகளில் ஒன்று வெடிக்கவில்லை. "டேய் ராஜு! அந்தப் பட்டாசு ஏன் வெடிக்கவில்லை?" என்று கேட்டாள். அது வெடிக்காத பட்டாசு. நீ அதை எடுத்து வை. பிறகு புஸ் வாணம் செய்து காண்பிக்கிறேன்" என்றவுடன், லேசாக புகைந்துகொண்டிருந்த அந்த பட்டாசை கையில் எடுத்தாள். மறு விநாடி அது "டபார்' என்று அவள் கையில் வெடித்துவிட்டது. பாவம் குழந்தை கையில் நெருப்பு பட்டு கொப்பளங்கள் ஏற்பட்டதல்லாமல், ஒரு துண்டு வெடித்த பட்டாசும் இடது கண்ணில் பட்டு ரத்தம் வர ஆரம்பித்தது. குழந்தையின் பலத்த அழுகுரலைக் கேட்டதும் இன்ஸ்பெக்டர் வீட்

டுக்கு முன்னுல் நின்றுகொண்டிருந்த போலீஸ்காரன் ஓடி வந்து, அவளை எடுத்துக்கொண்டு போனுன். பயத்தால் என் கை கால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. அந்தப் போலீஸ்காரன் மறுபடியும் வந்து என்னை இன்ஸ்பெக்டர் வீட்டிற்குள் அழைத்துச் சென்ருன். தூக்குமேடைக்கு போகும் கைதியைப்போல் சென்றேன். சிவந்த கண்களுடன் இன்ஸ்பெக்டர் என்னைப் பார்த்து "ஏண்டா தடியா. குழந்தை கண்ணிலா பட்டாசை வெடிப்பது' என்று என் முதுகில் நான்கு குத்துகள் விட்டார். முதுகில் ஏதோ "படக்" கென்ற சப்தத்தைக் கேட்டு நான் தரையில் உருண்டு விழுந்தேன். மறுபடியும் கண்ணைத் திறந்தபொழுது, நான் ஆஸ்பத்திரியில் இருப்பதை தெரிந்துகொண்டேன். என் முதுகில் ஒரு தப்பை கட்டியிருந்தார்கள். இன்ஸ்பெக்டரும் அடிக்கடி ஆஸ்பத்திரிக்கு வந்து எனக்குப் பழங்கள், பெப்பர்மிட் கொடுத்து வந்தார். ஒரு மாதம் கழித்து நான் வீட்டிற்கு வந்தபொழுது, இன்ஸ்பெக்டரை வேறு ஊருக்கு மாற்றிப் போய் விட்டதாகத் தெரிந்துகொண்டேன். அன்று முதல் சார் என்னுல் சரியாக குனிய முடிகிறதில்லை. முதுகில் எலும்பு இல்லாதவன் என்று என் நண்பர்கள் என்னை அழைத்தாலும் நான் எப்படியோ படித்து எம். பி. பி. எஸ். பாஸ் செய்து விட்டேன். இந்த சம்பவத்தையும் ஒவ்வொரு தீபாவளியன்றும் நினைத்துக்கொள்கிறேன் என்ருன் ராஜன்.

வீட்டுக்காரர் தன் கலங்கின கண்களை துடைத்துக்கொண்டே "டாக்டர் ராஜன், நான்தான் உங்கள் முதுகு எலும்பை ஒடித்த மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டர். தீபாவளியன்று நீங்கள் எப்படி உங்கள் முதுகை தடவி கொடுக்கிறீர்களோ, அதுபோல் என் மகளும் தன் கண்ணை நினைத்து கண்ணீர் விடுகிருள். உங்கள் வெடிக்காத பட்டாசு வெடித்து, அவள் இடது கண்ணின் பார்வையை இழக்கச் செய்து விட்டது. அதனுல்தான் அவள் எப்பொழுதும் நீலக்கண்ணுடி அணிந்துகொள்ளுகிருள். ஒரு கண் இல்லாத பெண்ணை கலியாணம் செய்துகொள்ள படித்த பையன்கள் முன்வரவில்லை. ஒரு சிலர் வந்தார்கள். ஆனுல், அவர்கள் ஒரு கண்ணை லக்ஷக் கணக்கில் மதிப்பிட்டு பணம் கேட்டார்கள். அவளும் எனக்குக் கலியாணமே வேண்டாமென்று படிக்க ஆரம்பித்து, போன வருஷம் தான் எம். ஏ. பாஸ் செய்தாள்" என்று என்னைப் பார்த்தார். மாஜி போலீஸ் இன்ஸ்பெக்டர் மறுபடியும் என் முதுகில் கைவைத்து விடுவாரோவென்று என் இருதயம் பயத்தால் அதிவேகமாக அடித்துக்கொண்டிருந்தாலும், அசட்டு தைர்யத்துடன், "சார், எனக்கு இன்னும் கலியாணம் ஆகவில்லை. உங்கள் பெண் என்னை மணக்க சம்மதித்தால், நான் அடுத்த முகூர்த்தத்தில் அவள் கழுத்தில் தாலியைக் கட்ட தயார்" என்றேன்.

"எனக்கும் சம்மதமே" என்று நீலாம்பாள் வெட்கத்தால் தலை குனிந்து சமையல் அறைப்பக்கம் ஓடினுள்.

---

## ☆நவராத்திரி துணுக்குகள்☆





# நாமொன்று நினைக்க—!

ய. மஹாலிங்க சாஸ்திரிகள் எம்.ஏ.பி.எல்.

ஆரம்பம் முதற்கொண்டே ராமனாதனுக்கு பத்மா தாத்தாவுடன் பேசுகிறவருடைய குரல் பரிச்சயமான குரலாக விருந்தது. நமக்கு ரொம்ப நெருங்கின பேர்வழி யாரோதான் அவரென்று முதலிலேயே அவன் தீர்மானித்து விட்டான். மேலும் மேலும் சம்பாஷணை காதில் விழுந்தபொழுது, அந்தப் பேச்சுத் தோரணையிலிருந்த வீராப்பும், உதாரித்தனமும், எதிராளியை மதிக்காத மனோதிடமும் கண்டிப்பும் அவனுக்கு இன்னார்தான் பேசுகிறாரென்று நிச்சயப்படுத்திக் கொடுப்பதுபோல் இருந்தன. த்வனியும் வரவர அவன் சந்தேகங்களை விலக்கி, திட்டமாய் வந்திருப்பது இவர்தான் என்று மனதிற்கு சுட்டிக் காட்டக்கூடியதாயிருந்தது. நரஸிம்ம ராஜபுரம் "ரைஸ் மில்" பிரஸ்தாபம் காதில் விழுந்ததும் அதையும் த்வனியையும் பேச்சுவார்த்தைகளுடைய தோரணையையும் ஒத்துப்பார்த்துக் கொண்டு ராமனாதன் உஷாவைப் பார்த்து லேசாகச் சிரித்தான். அப்பொழுது உஷா, "என்ன சிரிக்கிறீர்கள்?" என்று வினவினாள். "சற்றுப் பொறு. நீ யார் நான் யாரென்பது வெளியாகப் போகிறது. ஆனால், நீ உன் அப்பாவைப் பார்க்கப் போகும்போது, நான் கூட வரமாட்டேன். எனக்கு மெல்ல வீட்டை விட்டு தற்சமயம் நழுவிவிட ஒரு வழி சொல்லு. வந்திருப்பவர் கண்ணில் நான் இப்பொழுது படக்கூடாது. உஷா, "உண்மைதானா? ஏன்? என் தகப்பனாரால் உங்களுக்கு என்ன தீங்கு வரும்? நீங்கள் ஏன் பயப்பட வேண்டும்?" என்று கவலையுடன் கேட்டாள். "இல்லை உஷா! என்னால் இந்தச் சந்தர்ப்பத்தில் அவரைப் பார்க்க முடியாது. நான் உடனே வெளியே போய்விட வேண்டும். இதோ அவர்கள் பேச்சு முடியப் போகிறது. நீ அழைக்கப்படுவாய். நான் தப்பியோட ஒரு வழி சொல். மற்றது பின்னால் பேசிக் கொள்வோம்."

உஷா பரபரப்புடன் எழுந்திருந்து மற்றொரு பக்கமாக அந்த ரூமினின்றும் ராமனாதனை வெளியே அழைத்துச் சென்று, இப்படியும் அப்படியும் புகுந்து அவன் தந்திரமாய் வீதியை அடைய வழியைக் காண்பித்தாள். அவள் திரும்பித் தன் ரூமுக்குள் வருவதும் அழகிரிசாமி அந்த ரூமைத் திறந்து அவள் பிதாவைப் பார்க்க அவளை அழைப்பதும் சரியாகவிருந்தது.

உஷா தன் பிதாவான சியாமளாம்பாபுரம் மைனர் சிவராம ஐயர் அவர்களின் பாதங்களில் வணங்கி நின்றாள். அவர்தான் அவள் பிதாவென்பது இதற்குள் வாசகர்களுக்கு விளங்கியிருக்கலாம். சிவராமனின் மைனர் வியாபகங்களில் நரஸிங்கராஜபுரம் "ரைஸ் மில்" ஒன்று. ரைஸ்மில் தனலக்ஷ்மியின் கூட்டுறவை ஒருவாறு மறைப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட வியாஜமாகையால், அது லாபகரமாக முடியவில்லை. சுமார் பத்து வருஷங்களில் ஐம்பதினாயிரம் ரூபாய்களை விழுங்கிவிட்டு "ரைஸ் மில்" அந்தர்த்தானமடைந்தது. தனலக்ஷ்மியால் ஏற்பட்ட செலவுகளும் இந்தப்பெரும் நஷ்டத்தில் ஒரு சிறு பகுதியாக ஒளிந்துகொண்டது. விச்வாமித்ரர் சகுந்தலை பிறந்ததும் தான் தபஸ்வி என்பது ஞாபகம் வந்தது மேனகையையும் சகுந்தலையையும் ஒரேயடியாய் உதறி எறிந்துவிட்டு வேறுதிக்குக்குத் தபஸிற்குச் சென்றதுபோல் ரைஸ்மில் ஒழிந்ததும் தனலக்ஷ்மியையும் உஷாவையும் ஒரே வெட்டில் மறந்துவிட்டு, சியாமளாம்பாபுரம் திரும்பி, வெகு யோக்யமாகவும் அடக்கமாகவும் குடித்தனம் செய்ய ஆரம்பித்தார் சிவராமன். அவர் உஷாவைப் பார்த்தது சுமார் எட்டு ஒன்பது வயதில். இப்பொழுது தன் அழகிய குமாரியைக் கண்குளிரப் பார்த்ததும் அவர் உள்ளத்தில் அன்பு பொங்கியது. தாயில்லாக் குழந்தையாகிவிட்டாளே என்று பரிதாபம் பொங்கிஎழுந்தது. 'உஷா!' என்று அவளை எடுத்துத் தழுவிக்கொண்டு ஒரு துளி கண்ணீரும் சிந்தினார். அவளுடைய சங்கீதப் பயிற்சி, நாட்டியக் கலையில் தேர்ச்சி எல்லாவற்றையும் கேட்டு அகமகிழ்ந்தார். பின்பு அவள் விவாகத்தைப் பற்றிப்பிரஸ்தாபம்வந்தபொழுது "உஷா! உனக்கு இசைந்த நாயகன் இங்கேயே வந்திருக்காராமே, அவரை நான் பார்க்க விரும்புகிறேன்" என்று சிவராமன் கேட்டார்.

அவர் சற்று முன்பு வெளியே போய்விட்டார் என்றாள் உஷா. அழகிரி அவளை நம்பாதவர்போல் ரூமில் எல்லாம் நுழைந்து தேடிப் பார்த்தார்.

"அவர் யார்? என்ன பெயர்?" என்று சிவராமன் விசாரித்தார். பத்மாவின் "கிளாஸ்மேட்" என்

றும் பெரியவங்க வீட்டுப்பிள்ளை யென்றும் அழகிரி சொன்னர். உஷா தன்னிடமிருந்த ஒரு புஸ்தகத்தைக் கொண்டுவந்து காண்பித்து, 'இதில் அவர் பெயர் இருக்கிறது பாருங்கள்' என்ருள். அது ஸ்ரீ தியாகையர் அவர்களின் அரிய பெரிய கீர்த்தனைகளடங்கிய ஒரு புஸ்தகம். அதன் முதல் தாளில் "மிஸ் உஷாவுக்கு வி.ராமநாதனல் அன்புடன் அளிக்கப்பட்டது" என்று வரையப்பட்டிருந்தது. சிவராமன் மேற்படி வி. ராமநாதனுடைய ஆகிருதி லக்ஷணங்களைப்பற்றி விசாரித்தார். மனதிற்குள் ஒருமாதிரியாக நிச்சயமும் செய்துகொண்டார். ஒரு பக்கம் திருப்தியும் மற்ருெரு பக்கம் ஆத்திரமும் அவருக்கு உண்டாயிற்று. மறுநாள் வருவதாக அழகிரியிடம் விடைபெற்றுக்கொண்டு சிவராமன் தன் தமக்கையின் வீட்டிற்குச் சென்ருர்.

* * * *

சிவராமன், வீட்டிற்குச் சென்றதும், "ராமநாதன் இருக்கிருனு?" என்று விசாரித்தார். சங்கரி நிமிர்ந்து பார்த்து, சற்று ஆச்சர்யப்பட்டவள்போல் "மாமா வந்திருக்கிருரா என்று மருமான் விசாரிக்கிருன். மருமான் எங்கே என்று மாமாகாரன் நீ விசாரித்துக்கொண்டு வருகிருய். இதென்ன அதிசயமாயிருக்கிறது" என்ருள்.

"நான் வந்திருக்கிறேனு என்ரு விசாரித்தான் ராமனுதன்?என்னை எங்கே பார்த்தானும்?"

"அவன் வாடகை சைக்கிளை எடுத்துக்கொண்டு எங்கேயோ காலையில் அவசரமாக போய்க்கொண்டிருந்தானும். எதிரே டிராம் வண்டியில் நீ உட்கார்ந்திருந்ததைப் பார்த்தானும்."

"பலே புளுகு! என்னை டிராம் வண்டியிலா பார்த்தான்? இப்பொழுதுஎங்கேஅந்தப்புளுகன்?"

"ஏனடா என்ன சமாசாரம்? என்ன புளுகு? நீதானிருக்கட்டும், ஊரிலிருந்து எப்பொழுது வந்தாய்? நீ போய் இரண்டு மூன்று நாட்கள்தானே ஆகிறது? இப்பொழுதுதான் ரயிலிலிருந்து வருகிருயா? மணி பதினென்று ஆகிவிட்டதே! வேறு எங்கேயாவது இறங்கிவிட்டு வருகிருயா? அவனே உன்னைப்பார்த்தேன் என்று சொல்லுகிருன். நீயோ புளுகு என்கிருய். எனக்கு ஒன்றும் புரியவில்லையே."

"நான் எல்லாவற்றையும் விவரமாகச் சொல்லுகிறேன் அக்கா. அவன் எங்கே போயிருக்கிருன்?"

"அது எங்கே போச்சோ எனக்குத் தெரியாது! வந்தால் வந்ததில் சேர்த்தி. வராவிட்டால் இல்லை. அந்த நாளில் நீ இப்படித்தான் வீட்டில் வயிற்றெரிச்சலைக் கொட்டிக்கொண்டாய். உன்னைக் கொண்டு பிறந்திருக்கிருன் உன் மருமான்"

"சங்கரி, உன் வாய்க்குச் சர்க்கரை போடவேண்டும். ஆத்திவிருக்கிறதா, அல்லது ஒரு வீசை வாங்கி வரட்டுமா?"

"அது கடக்கட்டும்:நீவந்த காரியத்தைச் சொல்லு. இல்லாவிட்டால், வீண்பேச்சு வேண்டாம். சாப்பிட உட்காரு"

"நான் வந்த காரியத்தைச் சொல்லுகிறேன் கேள். நான் இங்கிருந்து ஊருக்குப்போனதும் எனக்கு ஒரு ரிஜிஸ்டர் நோட்டீஸ் காத்துக்கொண்டிருந்தது"

"யாரிடமிருந்து?"

"என் பிரதிவாதியினுடைய வக்கிலிடமிருந்து"

"உனக்குப் பிரதிவாதி யார்?"

"அதை இப்பொழுது கேட்காதே.அப்புறம் சொல்லுகிறேன். நான் ரயிலை விட்டிறங்கியதும் நேராக நோட்டீஸ் கொடுத்த வக்கிலிடம் போய் பிரதிவாதியையும் சந்தித்துக் காரியங்களைப் பேசி முடித்து விட்டு வருகிறேன்.

"பின்னே நீ வரும்பொழுது ராமனுதனை விசாரித்துக்கொண்டு வருவானேன்? நீ ஊருக்கு வந்திருப்பதைத்தான் அவன் எப்படித் தெரிந்துகொண்டான்?"

"நான் போயிருந்த இடத்திற்கு அவன் முன்னதாகவே வந்திருந்ததாகத் தெரிகிறது. நான் போனதும் என் கண்ணில் படாமல் அவன் மறைந்துவிட்டதாகவும் தெரிகிறது. அவனை இப்பொழுது வைத்துக்கொண்டு எல்லா ரகஸ்யங்களையும் உடைத்துப் பேசிவிடவேண்டுமென்று தீர்மானித்திருக்கிறேன்"

"நீ சொல்லுகிறதையெல்லாம் பார்த்தால், உன் வியவகாரம் நரஸிம்ம ராஜபுரத்தில் நீ வாழ்ந்த வாழ்வுக்கு சம்பந்தப்பட்டதாகவிருக்கும் போலிருக்கிறதே!"

"நன்ருய்ச் சொன்னுய்!"

"ஜீவனும்சவியாஜ்யமோ?"

"ஆமாம்"

"அவள்தான் ஒழிந்து போய்விட்டாளாமே. அப்புறம் ஏது வியாஜ்யம்?"

"அவளுக்குப் பெண் இருக்கிறதோ யில்லையோ?"

"அது அல்பாயிஸில் போகலையா?"

"சபிக்காதேடி, சங்கரி. அவள்தான் உன் நாட்டுப் பெண்."

சங்கரியம்மாள் திடீரென்று அப்படியே உட்கார்ந்து விட்டாள்.

"ஐயோ சிவராமா! இதென்னடா குடியைக்கெடுக்கிற வார்த்தை நிஜந்தானு?வாஸ்தவம்தானு? இது அவர் காதில் விழுந்தால், என்ன பாடுபடுத்தி வைக்கமாட்டார்,அவரும் ஊரிலில்லையே! என்னடா நடந்தது சிவராமா? நிஜத்தைச் சொல்லுடா! நான் செல்லத்தைப் பண்ணிக்கொள்ளமாட்டேனென்று ஏதோ விளையாட்டாகச் சொன்னதற்காக நீ இப்படி என் குடும்பத்தைக் கவிழ்க்க ஏற்பாடு பண்ணிவிட்டாயேடா? இந்தத் தத்தாரிப் பிள்ளை அந்த எழவுக்குத்தான் போர்ஜரி பண்ணி, பாங்கிவிருந்து ஆயிரம் ரூபாய்

பணத்தை வாங்கி, அங்கு கொண்டுபோய் தொலைச்சுடுத்தோடா! அந்த சாதுப்பிள்ளை சீதாராமன்பேரில் எல்லோரும் சந்தேகப்பட்டேளே! உங்க அத்திம்பேர் மட்டும் ஒரே உறுதியாய் இந்தத்தத்தாரிப் பயல்தான் ஏதோ எக்கச்சக்கம் பண்ணியிருக்கிறான் என்று சொல்லிக்கொண்டிருந்தாரே! எனக்கு இப்போதுதானடா புரிகிறது. ஏண்டா! சிவராமா இப்பொழுதாவது அதுக்கு ஒரு கல்யாணத்தைப் பண்ணிவைத்து, நல்ல வழியில் திருப்ப முடியுமோடா! இல்லை, உனக்கும் உன் மருமான் இம்மாதிரி அழிந்து போவதில் சந்தோஷம்தானா?''

இந்தா சங்கரி! வீணாக அங்கலாய்க்காதே!'' எனக்கொன்றும் விஷயம் தெரியாது. பத்மா என்ற ஒரு பெண் இவனுக்குக் கிளாஸ் மேட். அவள் சிநேகத்தை வைத்துக்கொண்டு இவன் அவள் வீட்டிற்குப் போகத்தொடங்கியிருக்கிறான். அந்தப் பத்மா என்பவள் தனலக்ஷ்மியின் தமக்கை பெண்.''

"உன் வைப்பு தனலக்ஷ்மியா?'' ஆமாம்! அங்கே என் வைப்பின் மகளை இவன் பார்த்திருக்கிறான். இருவருக்கும் சிநேகம் உண்டாயிருக்கிறது. இனி திருப்ப முடியாதுபோலிருக்கிறது. இன்று காலையில் நான் அந்தப் பெண்ணுக்காக ஜீவனாம்ச வியவகாரம் தொடர்ந்த அவள் தாத்தாவுடன் பேசிக்கொண்டிருந்தபோது, அங்கே வந்திருந்த இந்தப் பயல் என்னைக் கண்டு ஓடிவிட்டதாகத் தெரிகிறது. இவ்வளவுதான் சமாசாரம்.

"நான் இருக்கும் வரையில் அவன் இங்கு கண்ணில் படமாட்டான் என்றுதான் நினைக்கிறேன். இந்தப் பயல் இப்ப்டிப் போவான் என்று நான் ஸ்வப்னத்தில்கூட நினைக்கவில்லை.''

"ஆனால் இப்போ, மேலே நாம் என்ன பண்ணுகிறது! அவனை எங்கே போய் தேடிப் பிடிப்பது! எங்கேயாவது போய்ப் பிடித்து, அவனைக் கொண்டுவந்து ஒரு ரூமுக்குள் போட்டுப் பூட்டிவிட்டாயானால், எனக்கு மனஸுக்கு



திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம் ஸ்ரீலஸ்ரீ அருள்நந்தித் தம்பிரான் ஸ்வாமிகள், குடந்தை மகாமகக் குளத்தின் மேல்கரையில் ரூ. 25,000 செலவில் இந்த மணிக் கூண்டை நிர்மாணம் செய்திருக்கிறார். இதில் ரூ. 6000 செலவில் புதிய கடியாரம் பொருத்தப்படும். வகுப்பு ஒற்றுமைச் சின்னமாகத் திகழவேண்டுமென்பது இதன் நோக்கம்.

திருப்தியாயிருக்கும். பிற்பாடு அவன் தகப்பனுர் வந்து செய்கிற படி செய்துகொள்ளட்டும்.”

“அத்திம்பேர் எப்பொழுது வருவார்?”

“காந்திமதிக்கு வரன் நிச்சயம் பண்ண நாக்பூர் போயிருக்கிருர். காரியத்தை முடித்துக்கொண்டு நாலைந்து நாட்களில் வருவதாகச் சொன்னுர். போய் இரண்டு மூன்று நாளாகிவிட்டது”

‘நாளை வெள்ளிக்கிழமையன்றே அந்தக் கிழவன் இரண்டு பெண்களுக்கும் ரிஜிஸ்டர் மேரியேஜை முடித்துவிடப் போவதாகச் சொன்னுன்”

“ஐயய்யோ! அவரும் ஊரிலில்லையே! இந்தப் பயலும் ஒளிந்துகொள்ள ஆரம்பித்துவிட்டானே! இந்த அக்ரமத்தை எப்படித் தடுப்பது?”

“அக்கா! நீ விசாரப்படாதே! அதற்கு விசை என் கையிலிருக்கிறது. அந்தக் கிழவன் என்னை சாக்ஷியாக வைத்துக்கொண்டுதான் ரிஜிஸ்டர் ஒப்பந்தத்தை நடத்தப் போகிருன். நானும் வரன் இன்னுரென்று தெரிந்துகொள்வதற்குமுன் “கன்னிகாதானத்தை” நடத்தித் தருவதாக ஒப்புக்கொண்டேன். பிற்பாடுதான், வரன் நம்ப ஆசாமிதான் என்று ஊகித்தறிந்தேன். ஆகையால், அந்தக் கிழவன் இந்த விவாகச் சடங்குகளை நடத்தத் தீர்மானிக்கும் தேதியில், எனக்குத் தகவல் வரும். நான் சரியானபடி இதற்கு முட்டுக்கட்டை போட்டு விடுகிறேன். அதற்கு வேண்டிய யோசனைகளை செய்து வைத்திருக்கிறேன்.”

“நீமட்டும் சிவராமா! அந்த மாதிரி அந்த விலங்கிலிருந்து அந்தப் பிள்ளையை விடுவித்துக் கொண்டு வந்துவிட்டாயானுல், செல்லத்திற்கும் காந்திமதிக்கும் ஒரே முகூர்த்தத்தில்-ஒரே பந்தலில்-விவாகங்களை நடத்தி விடுவோம்.

நான் அப்பொழுது சொன்னேனே என்பதை மனதில் வைக்கவே வைக்காதே. இப்பொழுது நான் சொல்லுகிற வார்த்தை உறுதி. அவரும் ஒரு பொழுதும் ஆட்சேபிக்கமாட்டார்.”

“சரி அக்கா! இலையைப் போடு; சாப்பிட்டு விட்டு எங்கேயாவது தேடி அந்தப் பயலைக் கொண்டு வந்து விடுகிறேன்.”

சிவராமன் இலையில் உட்கார்ந்து பரிஷேசனம் பண்ணும் முன் வாசலில், “ஸார்! யார் வீட்டில்!” என்று அதிகார தோரணையோடு கூடிய குரல் கேட்டதுடன், கதவும் தட தடவென்று இடிக்கப் பட்டது.

(தொடரும்)



பிரும்மஞான சங்கத்தின் உலக ஸ்தாபனத்தின் தலைவர் ஸ்ரீ ஜினராஜ தாஸ டில்லி விஜயம் செய்தபோது, ஸ்ரீமதி சரஸ்வதி ராமஸ்வாமி ஒரு பரதநாட்டியக் கச்சேரியைச் சமீபத்தில் நடத்தி வைத்தார். இதில் கலந்துகொண்டவர்கள்:—இடமிருந்து ஸ்ரீமதிகள் தாரா, ருக்மிணி, சுசீலா, அம்புஜம்.

காஷ்மீர்-குஸும்
என்ற மலர் மூலிகையை
கூந்தல் வளர்ச்சிக்கு எண்ணெயில் கலக்கவும்

M.P. & E.கோ
ஸான்டலக்ஸ்
நறுமண சந்தனக் களிம்பு
தீப்புண், வெட்டு, சொறி பரு, புண்களுக்கு (க்ஷிவர உதவி)

M R ஜெட்டப்பா அவர்களின்
பிரேமலீலா
மைசூர் ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர், அம்பர்

நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகளை உபயோகிக்கவும்.

ஏஜெண்ட்கள்: யுனைடெட் கன்ஸர்ன், 54. பந்தர் வீதி. மதறாஸ்.
டிப்போக்கள் : மதுரை, கோயமுத்தூர், கும்பகோணம், பம்பாய்.

# கப ரோக நிவாரணி

இருமல், ஈளை இருமல், வரட்சி, இளைப்பு, சுவாசம் எரைப்பு, மூச் சடைப்பு, புகைச்சல் இருமல், சாதாரண இருமல், மார்ச்சளி, அஸ்தி ஜுரம் கபத்தில் ரத்தம் வருதல், தொண்டை ரணம், ஈரல் ரணம், குலை ரணம் இவை கள் போன்ற இன்னும் எந்தவிதமான தீராத கபரோக வியாதியையும் தீர்த்து கபக் கிருமிகளைக் கொன்று கபத்தை தண்ணீராய் கரைத்து இருமலை அறவே ஒழித்து நல்ல நித்திரையைக் கொடுக்கும் — இது ஓர் நிகரற்ற சஞ்சீவி. இதற்கு பத்தியம் கிடையாது—குழந்தைகளும் உபயோகப் படுத்தலாம். 1 அவுன்ஸ் புட்டி ரூ. 2. பாக்கிங் வி. பி. செலவு தனி. முன்பணமாக 50% அனுப்பவேண்டும்.

தயாரிப்பவர்கள்:

**சதர்ன் இந்தியா மெடிகல் ஹவுஸ்,**

மைலாப்பூர், : : மதராஸ்.

Sole Selling Agents:

**என் ஸீ ஏஜன்ஸீஸ்,**

**2/36, Luz Church Road, MYLAPORE, MADRAS.**

Consult: **Dr. V. ராஜரத்னம்,**

For Nervous Debility. Diabetes, T. B., etc., at the above address.



# REWARD RS. 100

GUPTA VASHIKARAN YANTRA
(GOVT. REGD)

இது சித்த வசிகரண யந்திரம். இதை அணிவதால், எந்தக் கஷ்டமான காரியத்திலும் சரி, நீங்கள் வெற்றி பெறுவீர், நீங்கள் விரும்பும் பெண், எத்தனை கடின ஹிருதயம் படைத்தவளாயினும் உம்மிடம் வந்து சேர்வாள். இது உமக்கு அதிர்ஷ்டத்தைத் தரும். வழக்கு, செல்வம், லாட்டரி, பரீக்ஷை முதலியவற்றில் அந்த யந்திரத்தின் மூலம் வெற்றி கிடைக்கும்.

**செம்பு விலை ரூ. 2. வெள்ளி ரூ. 3. தங்கம் விலை ரூ. 10.**

## நரையை ஒழியுங்கள்.

சாயம் மூலம் இல்லை எமது ஆயுர்வேத வாசனைத் தைலம், நரை மயிரை நிரந்தரமாகக் கருப்பாகச் செய்து, மீண்டும் நரை ஏற்படாமல் பாதுகாக்கும். மூளை பலவீனம், மந்தம் முதலியவற்றைப் போக்கி, தலைவலியைக் குணப்படுத்தும், பார்வையை சீர்படுத்தும். நம்பிக்கையில்லையேல் தொகை வாபீஸ் என்ற உத்தரவாதம் பெறுங்கள். சொற்ப நரைக்கு ரூ. 2—8—0. அதற்கு மேற்பட்டது. ரூ. 3—8—0. எல்லா நரைக்கும் ரூ. 5. வெளிநாடுகளுக்கு வி. பி., போஸ்டல் ஆர்டர் கிடையாது. மணியார்டர் தேவை. கடிதங்கள் ஆங்கிலத்தில்.

**KASHIVISHWANATH ASHRAM,**
**No. 14/A, P.O. Katrisarai, (Gaya)**



# பாத்ருடுவின் "பால சஞ்சீவினி"

(Regd)

குழந்தைகளின் ஈரல், குலை, ஜுரக்கட்டி வியாதிகளை சொற்ப காலத்தில் நிச்சயம் குணமளிக்கும் சிறந்த மருந்து இது ஒன்றுதான். அசல் விஜயநகரம் மருந்து. போலிகளைக்கண்டு ஏமாருதீர்கள்.

**Dr. பிள்ளா பாப்பய்யா பாத்ருடு & பிரதர்,**

11, தெற்கு மாட வீதி, மயிலாப்பூர்.

| கும்பகோணம் கிளை:— | திருச்சி கிளை:— |
| --- | --- |
| 7, சாரங்கபாணி கோவில் கீழவீதி | 15, புகழிய பிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு. |



# மெஸ்மெரிஸம்

ஆங்கிலத்தில் ஹிப்னட்டிஸம், மெஸ்மெரிஸம் என்று கூறப்படும் வசிய சக்திகளைப்பெற உங்களுக்கு விருப்பமுண்டானால், இவ்வுலக வாழ்க்கையில் வியாபாரத்தில், இல்வாழ்க்கையில் வெற்றியும், சந்தோஷமும் லாபமும்பெற இச்சையுண்டானால் இன்றே,

**'ஜீவவசிய பரம ரஹஸ்யம்'**

என்னும் அரிய பெரிய தமிழ் நூலைப்படித்து அதன்படி நடந்து வெற்றியையும், லாபத்தையும் பெற்று மகிழ்வீர்களாக. தமிழில் இந்தச் சாஸ்திர சம்மந்தமான நூல்கள் மிகவும் அபூர்வமாகத்தான் வெளியாகின்றன. இந்தச் சாஸ்திரத்தை நன்கு பயின்று பிறகு அப்யசித்து வெற்றிபெற்ற ஒரு மகானால் இது வரையப்பட்ட அனுபவ நூலாகும். இன்றே வாங்கிப்படித்து பயன்பெறுங்கள்.

**விலை ரூ. 4—8—0.**

வி. பி. செலவு அணா 9.

**ஷாஜஹான் புக் டெப்போ,**
30, சாந்தோம், சென்னை 4.



# ஜாதகம்! ஆரூடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை. ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.



கட்டண விவரம்:- 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35.

குறிப்பு:—வெளிநாட்டுக்கு இரட்டிப்புக் கட்டணம்.

**Lt. Col. M. N. C.** ஸர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:- தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத்திடீரென்று ரூ. 35,000 கிடைக்கும் என்று தாங்கள் கூறியபடியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

**மானேஜர், வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ,**
தெப்பக்குளம் **P. O.** (தென் இந்தியா)

# ஆனந்த குஸுமாகர லேகியம்

**துர்ப்பழக்கத்தால் சரீரம் மெலிந்து அங்கங்கள் உலர்ந்து, கைகால்கள் அயர்ந்து கண் பார்வை குன்றி கஷ்டப்படும் அன்பர்களே!**

இந்த லேகியத்தை முறையே ஒரு மண்டலம் சாப்பிட்டு வருவீர்களாயின் மூத்திர சம்பந்தமான சகல வியாதிகளும் நீரில் சர்க்கரை இருத்தல் உஷ்ண சம்பந்தமான சகல வியாதிகளும், நரம்புத்தளர்ச்சி, பசியில்லாதிருத்தல், மலச்சிக்கல், ஞாபககுறைவு, பித்தம், காசம், க்ஷயம் போன்ற எல்லா வியாதிகளையும் கண்டித்து சரீர புஷ்டியும் உற்சாகமும் தரக்கூடிய சிறந்த ஔஷதம். பெண்களும் அருந்தக் கூடியது. பத்தியமில்லை. 20 நாட்கள் உபயோகிக்கும் டின் விலை ரூ. 2—8—0

வி. பி. பார்சலில் தேவையுள்ளோர் தபால் சிலவு அணா 14 முன் பணம அனுப்பி பெற்றுக்கொள்ளலாம். விபரமான காட்லாக் இனும்.

## மலையாள மெடிகல் ஹால்

**H. O. TRIVANDRUM**

**189 வக்கீல் புதுதெரு - P. B. No 27, மதுரை.**

கிளை ஸ்தாபனங்கள்:— 207 நாகேஸ்வரர் வடக்கு வீதி, கும்பகோணம் 20 கோவிந்தப்பநாயக்கன் தெரு, சென்னை. G. T. 58 E தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர். 179 SEA ST., COLOMBO.



# உங்கள் எதிர்காலம்



பணமில்லாமை, தொழிலில் மாறுதல், காதல், கலியாணம், குடும்பம் பிரயாணம், எதிர்பாராத லாபநஷ்டம், படிப்பு, ஆரோக்கியம், அதிருஷ்டநாள், எண், நிறம் மற்றும் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பலன்கள் எழுதி அனுப்பப்படும். ஜாதக நகல் அல்லது முழுப்பெயர், சுமார் வயது, செய்யும் தொழில் கடிதம் எழுதும் நேரம் குறிப்பிடவும். ஒன்று முதல் 5 கேள்விகளுக்கு பதிலளிக்க ரூ. 2. மேல் ஒவ்வொரு கேள்விக்கும் அணா 8. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன் எழுத ரூ 6. வாரப் பலனுக்கு ரூ 20. ஜாதகக் குறிப்பும் சுருக்கமான பொதுப்பலனும் எழுதி அனுப்ப ரூ 5. தபால் செலவு தனி.

**வி. கே. கிருஷ்ணமாச்சாரியார்,**

**Astrologer & Journalist, MADRAS 5.**






# Rgd. No. 2221.

## 28 வருஷமாய் தென்னாடு முழுவதும் பிரசித்தி பெற்று வரும்

# சேலம் மூன்று தாமரை பீடிகளை

**உபயோகித்து சந்தோஷமடையுங்கள்.**

**Prop: S. அஹமத் உசேன், கோட்டை, சேலம் - *S.I.R.***



**பரிசு! பரிசு !!**




போலி பாக்குத் தூள்களை வாங்கி ஏமாறுகிறீர்கள். பரிமள பாக்குத் தூள்களுக்கெல்லாம் அரசனான ஆர். கிருஷ்ணா பரிமள பாக்குத் தூளையே உபயோகியுங்கள்.

*144—50 பொட்டலம் கொண்ட கேஸ் 1க்கு ரூ. 85. 50—0-0-3 பொட்டலம் 0-10-0. N. B. 25 காலி உரை அனுப்பினால் 50—0-0-3 பொட்டலம் இனாம்.*

**S. M. கிருஷ்ணா அண்டு கோ.,**

*2-137, ஆதியப்ப நாய்க்கன் தெருவு.*

*மதராஸ் 1.*



மாதம் ரூ. 150 சம்பாதிக்க வேண்டுமானால் ரியல் அசோகா அண்டு கோ. வில் வியாபார தொடர்ச்சி வைத்துக் கொள்ளுங்கள்.

எல்லா வகை செண்டுகளும், ஏர் ஆயில்களும், வாஸலைன், தலைவலி பாம், நீலகிரி தைலம், சிரங்கு மருந்து, பாக்கு தூள், மூக்கு பொடி புகையிலை, பர்பியூமும், அரை சேர் பர்பியூம் பாக்கு தூள் டின்களும் தயாரிக்கப்படுகிறது. விற்பனையாளர் தேவை. ரூ. 25 M. O. அனுப்பி சாம்பிள் செட் பெறுக.

**N. B.** ஒரு கேஸ் பாக்குதூள் தயாரிப்பதற்கான ரியல் அசோகா பர்பியூம் அரை சேர் பர்பியூம். கொப்பரை சீவல் கால் சேருடன் ரூ. 10. மூந்துங்கள்.

**ரியல் அசோகா அண்டு கோ.**

40, கிடங்கு தெரு, மதராஸ் 1.





எல்லாவிதமான எலக்டிரிக் சாமான்கள் கண்டிரோல்விலைக்கு மொத்தமாகவும், சில்லரையாகவும் கிடைக்கும்,

***M. R.* பார்த்தசாரதி ஐயங்கார்,**

**28, துளசிங்கப் பெருமாள் கோவில் தெரு, திருவல்லிக்கேணி, மதராஸ்.**

தந்தி விலாசம் : "கோகுல்" ஸ்தாபிதம் 1909. டெலிபோன் நெ. 57

# டி. எஸ். ஆர். & கோ.,

## கும்பகோணம்.

(பிராஞ்சு : மன்னார்குடி)

**சந்தனாதித் தைலம் - அரைக்கீரை விதைத் தைலம்**

**கோகுல் கூந்தல் தைலம்**

கூந்தலுக்கு வளர்ச்சியையும், குளிர்ச்சியையும் கொடுப்பதில் நிகரற்றவை.

வத்திகளுள் சிறந்தது "கோகுல்" வத்திகள்

பல காய்கறி ஊறுகாய், கோகுல் வாசனைப் பாக்கு

முதலிய இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

ஸோல் ஏஜெண்டுகள்:—

புஷ்பவனம் ஸ்டோர்ஸ்,
பைகிராப்ட்ஸ் ரோட்,
திருவல்லிக்கேணி, மதராஸ்.

(கோவை & பாலக்காடு ஏஜெண்டு)

B. Balapattabi Chettiyar,
246, Vysyal St.,
COIMBATORE.

★ தீபாவளி பண்டிகை ★

தீபாவளி பண்டிகைக்கு வேண்டிய நவீன மோஸ்தர் பட்டு ஜவுளி தினுசுகள் எல்லாம் எங்களிடம் சரஸமான விலைகளில் கிடைக்கும்.

# R. S. E.

## ராதா ஸில்க் எம்போரியம்

( போன் : 84188 )

ஸன்னதி தெரு, மயிலாப்பூர், மதராஸ்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்
48—49, பெரிய தெரு,
கும்பகோணம்.

பம்பாயில் ஸ்பெஷல் பிராஞ்சு:—
ராதா ஸில்க் எம்போரியம்
2, விஸ்ராம்பவன், டிலாங்ரோட், G. I. P. பம்பாய்.

புரொப்ரைட்டர்ஸ் : **R. K.** ராதாகிருஷ்ண செட்டியார் & பிரதர்.

Printed and Published by S. Chakrapani Iyengar at the "Swadesamitran" Press, Victory House, Mount Road, Madras. Editor : C. R. Srinivasan B. A.

Regd. No. 2514.

தலையிட்டோர்

# சூழ்ச்சி

பலிக்கவில்லை



| | |
|---|---|
| தேவஸ்தானம் கமிட்டி. | திருப்பதி 26-9-48. |

பகவான் ஸ்ரீ வாருவின் ரத்ன கிரீடத்தில் திகழும் அபூர்வ மான வேலைப்பாட்டை கவனிக்கும்போது அதைத்தயாரித்த ஸூரஜ்மல் கம்பெனியாரின் உன்னதமான வேலைத் திறமை யில் தங்களுக்குள்ள பெருமதிப்பை தெரிவித்துக்கொள்வதில் திருமலை திருப்பதி தேவஸ்தானக்கமிட்டியார் மிக்க மகிழ்ச்சி யடைகின்றனர். கலையின் சிகரம் பூரணப் பொலிவுடன் விளங்கலாமென்பதற்கு இக்கிரீடமே தகுந்த சான்று.

B. வீராசாமி நாயுடு,
கமிஷனர்.

முடிவில்

# உண்மை

ஊர்ஜிதம்

# ஸூரஜ்மல்ஸ்

திருப்பதி ரத்ன கிரீடம் தயாரித்தவர்.

313, எஸ்பிளனேட் : : மதராஸ்.